
கம்பன் கண்ட எழில் ஓவியம்



கோவை நா. நஞ்சுண்டன்

கம்பன் பதிப்பகம்

கம்பன்

கண்ட

எழில் ஓவியம்

கோவை. நா. நஞ்சுண்டன்

கம்பன் பதிப்பகம்

2, 4ஆம் குறுக்குத் தெரு

கோபால கிருஷ்ணன் நகர்

வேலூர் – 632 006.

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 2003

விலை: ரூ. 40–00

- Title : **KAMBAN KANDA EZHIL OVIUM**
- Author : Kovai. Na. NANJUNDAN
- Subject : Literature
- Language : Tamil
- Edition : First Edition, August, 2003
- Pages : xii + 144 = 156
- Published by : **KAMBAN PATHIPPAGAM**
  2, 6th Cross Street,
  Gopalakrishnan Nagar
  Vellore - 632 006.
- Price : Rs. 40-00

Laser typeset at azhagu systems, chennai-17. ✆ 5212 7214

Printed at : Nathan & Company, Chennai - 42.

முன்னுரை

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் கம்பனைப் பல மேடைகளிலே, கண்டும் கேட்டும் ரசித்தவன். 1942 முதலா பௌராணிகர்களது வான்மீகி இராமாயணத்தைத் தொடர்ந்து இன்றுவரை கேட்கும் பாக்கியம் பெற்றவன். வடமொழி விற்பன்னர்களான சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர், கரப்பங்காடு ஸ்வாமிகள். ஶ்ரீமான் கண்ணன் ஸ்வாமிகள் (தற்பொழுது ஜீயராக உள்ளவர்) உ.வே. சந்தானகோபாலாச்சாரியார், தூப்புல் லட்சுமி நரசிம்மன், தேதியூர் சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், போன்றவர்களின் வால்மீகி ராமாயணப் பிரசங்கங்களை 30 நாட்கள் என்று அந்தக் காலகட்டத்தில் நடந்தவற்றைக் கேட்டு ரசித்தவன். பின்னர் ஹரிகதை விற்பன்னர்களான திருவையாறு அண்ணாசாமி பாகவதர், ஶ்ரீரங்கம் சடகோபாச்சாரியார். பாலகிருஷ்ண சாஸ்திரிகள், எம்பார் விஜயராகவச்சாரியார் போன்ற பெரியவர்கள், வால்மீகி, கம்பன், தியாகராஜர் ஆகியோரை இணைத்துச் சொன்ன இராமாயணங்களையும் கேட்டு இருக்கிறேன். தமிழில் கம்பனை மட்டுமே எடுத்துச் சொற்பொழிவு ஆற்றிய புரிசை முருகேச முதலியார், திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள், புலவர்கீரன், பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் ஆகியோரின் தொடர் சொற் பொழிவுகளையும் கண்டு, கேட்டு ஆனந்தமடைந் திருக்கிறேன்.

எனவேதான் இராமாயணக் கதையில், வரும் பல்வேறு மாற்றங்கள், ஒற்றுமைகள், காவ்ய அலங்

காரங்கள், வர்ணனைகள் ஆகியவற்றை முன் சொன்ன சொற்பொழிவுகள் மூலம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

1954 முதல் காரைக்குடியில் நடைபெற்று வரும் கம்பன் விழாவைக் காணும் பாக்கியத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர் வாகீச கலாநிதி கி.வா.ஜா. அவர்கள். என்னை உடன் பிறவாச் சகோதரராக ஏற்றுக் கொண்ட பெருந்தகை அவர். காரைக்குடி தொடர்பால், பல தமிழறிஞர்கள் நட்பையும் பெற முடிந்தது. அ.சீ.ரா., ஜீவா, பாஸ்கரத் தொண்டைமான், கம்பன் அடிப்பொடி, ம.பொ.சி. ராய.சொ. அ.ச.ஞா. போன்றவர்களின் பேச்சுகளையும் கேட்க முடிந்தது. பின் காரைக்குடி கம்பன் மேடையிலே பேசும் வாய்ப்புகளும் வந்தன. இதன் காரணமாகக் கம்பனை ஊன்றிப் படிக்கும் பேறும் கிட்டியது.

பல்வேறு கம்பன் மேடைகளிலே பேசிய பேச்சுகளின் சுருக்கமும், கோவை வானொலி வாயிலாகப் பேசிய இலக்கியப் பேச்சுகளும், பல்வேறு மலர்களிலே எழுதிய கட்டுரைகளும், நூல்வடிவிலே வரும் என்று நான் எண்ணியது இல்லை. அதற்கான வாய்ப்பை உருவாக்கி யவர் என் கெழுதகை நண்பர்; 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றாக இருந்து கம்பனை ரசித்துக் கொண்டிருப்பவர்; 'கம்பர் பித்தர்' திரு. எஸ்.என். குப்புசாமி முதலியார் (வேலூர்); என்பால் பேரன்பு பூண்டவர்.

அவரது கம்பன் பதிப்பகத்தின் வாயிலாக இந்நூலை வெளியிடுவதாகச் சொன்னவுடன், நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை கம்பன்பால் அவருக் குள்ள அன்பின் வெளிப்பாடு தெரிகிறது.

இப்புத்தகத்தின் முதல் இரு கட்டுரைகள் கோவை வானொலிப் பேச்சுகளாகும். பின்னர் இருக்கும் மூன்று கட்டுரைகள் முறையே கோவை கம்பன் மலர், வேலூர் கம்பன் மலர் ஆகியவற்றில் வெளிவந்தவை. கடைசிக் கட்டுரை கோவைக் கழகம் நடத்தி வரும் நிலாமுற்றத்தில் பேசிய பேச்சின் வரிவடிவம். பல மேடைகளிலே கேட்டு, ரசித்தவற்றை என் புல்லறிவு கொண்டு கட்டுரையாக வடித்திருக்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வேண்டும் என்னும் பொழுது, என் நினைவுக்கு முன்னால் முன்னாள் வானொலி இயக்குநர் திரு. கோ. செல்வம் அவர்கள் வந்தார்கள். என்னை எழுதத் தூண்டியவரும் அவர்தாம். வானொலியில் இலக்கியவுரை, வாழ்வியல் சிந்தனைகள் இவைகளைப் பேச வைத்தவரும் அவரே. எனவே அவர் தம் அணிந்துரை இந்நூலுக்குப் பெருமை சேர்க்கும் என்று எண்ணுகிறேன். என்னைப் பற்றி முழுமையாக அறிந்தவர்; அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை வெளியிட முழுப் பொறுப்பும் ஏற்ற கம்பன் பதிப்பக உரிமையாளர் திரு. எஸ்.என்.கே. அவர்களுக்கும், அச்சிட உடனிருந்து உதவி, பிழைகள் திருத்திச் செவ்வனே வெளிவர உதவிய நண்பர்கட்கு என் நன்றியும் வணக்கமும்.

எந்தை பிரான் கம்பன் என்றும் நமக்கு வழிகாட்டி யாக இருக்க எல்லாம் வல்ல இறைவன் திருப்பாதங்களை இறைஞ்சுகிறேன்.

மிக்க அன்புடன்

நா. நஞ்சுண்டன்

"கம்பன் குடில்",
பெரியார் நகர், வடவள்ளி
கோவை-12.

11.08.2003

அணிந்துரை

கோ. செல்வம்

(வானொலி முன்னை இயக்குநர்)

கம்பன் சீர் பரவுவார் நண்பர் திரு. நா. நஞ்சுண்டன் அவர்கள் நயமான நாநலம் பெற்றவர். காரைக்குடி கம்பன் கழகம் தோன்றிய நாள்முதல் அதைத் தோற்றுவித்த கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அறிஞர் பெருமக்கள் வாகீச கலாநிதி கி.வா.ஜ. பேரா. அ. சீனிவாச ராகவன், கம்பன் கணினி, பேராசான் அ.ச. ஞானசம்பந்தன் முதலானோர் கம்பன் களங்களில் உலாவந்தபோது உடன் நடந்து கம்பனைக் கற்றவர்; அவ் அறிஞர்களின் ஆய்ந்த நுண்மான் நுழைபுலக் கருத்துகளைக் கவனத்துடன் செவிமடுத்த கம்பன் அன்பர்.

கோவைக் கம்பன் கழகச் செயலாளர்களில் ஒருவரான திரு. நஞ்சுண்டன் ஆண்டுதோறும் கோவை விழாவில் புதிய தலைப்புகள் தந்து, புதிய உத்திகள் புகுத்தி

அனைவரையும் வியக்கவைக்கும் கம்பனின்— அமைதிப் பணியாளர். பல பட்டி மண்டபங்களில் பாங்குற ஏறிப் பலரை வியக்கவைத்து வரும் பண்பாட்டுப் பேச்சாளர்.

கம்பனில் பல்லாண்டுக்காலம் ஊறித் திளைத்து அவர் பருகிய தேன் அமுதம் இப்போது பொங்கி வந்துள்ளது. முதல் நூலாக நா. நஞ்சுண்டன் ஆக்கிப் படைத்துள்ள அரிய கட்டுரைத் தொகுதிப் படையல் இதமானதாயும் பதமானதாயும் அமைந்துள்ளது. எல்லாம் படித்துச் சுவைத்தற்குரியவை. பதச் சோற்றில் ஒன்றிரண்டைக் குறிப்பிட வேண்டும்.

கம்பனின் இயற்கை வருணனையில் இயைந்துவிட்ட நூலாசிரியர் சூரிய உதயத்துடன் சிவன் சடாமுடி விரித்த காட்சி யுடனும், இருளைக் கருப்புநிற இயமன், அவனது கருமைநிற எருமை ஆகியவற் றுடனும் கவிஞன் ஒப்பீட்டில் சுட்டிக் காட்டி மகிழ்கிறார். இச்செய்தி தாங்கிய கம்பன் காட்டும் எழில் ஓவியம் படைத்து மகிழ வேண்டிய கட்டுரை.

... கம்பனில் தோய்ந்து துய்த்த சுவை நலத்தைக் கம்பன் வையகமே பெற்றுத் துய்த்துட வழங்கிய கட்டுரைக் கோவையில், 'சொல்லின் செல்வன்' அனுமனின் சொல்

வன்மை, இலக்குவனின் சீற்றம் தவிர்க்க தாரை வழி வெளிப்படுத்திய பாங்கைக் கவிச் சுவை நலம் குன்றாது குறிப்பிட்டிருக்கிறார். இது கோவை வானொலியின் சுவை நல ஒலி பரப்பின் எழுத்து வடிவம்.

எல்லாச் சமயத்தினரும் தம்தம் இறைவனின் திருவடிச் சிறப்பையே பெரிதாக எண்ணுவர். திருமுடியினும் திருவடியே பேறு நல்கும் கருத்தைப் பரதன் பாதுகை பெற்ற செயலால் காணமுடிகிறது. இக்கருத்தைத் திருவடியும் திருமுடியும் எனும் கட்டுரையில் வேதாந்த தேசிகரின் ஸ்ரீபாதுகாசகஸ்ர நாமாவுடன் ஒப்பிட்டு நூலாசிரியர் கட்டுரையைப் புதிய செய்திகளுடன் செறிவாக்கியுள்ளார்.

மாபெரும் புகழ்ச்சிக்குரிய மாமன்ன னாகச் சித்திரிக்கப்பெற்ற தயரதனின் மாட்சியைப் பாலகாண்டத்தில் கம்பர் கூற்றை நியாயப்படுத்தி 'நல்லறமூர்த்தி' எனக் குறிப்பிடும் நூலாசிரியர், அயோத்தியா காண்டத்தில் அவ்வரசனை 'மெய்யின் மெய்' என்று காரணங்காட்டி அழைக்கிறார். சுமந்திரன் 'வேய் உயர் கானம் தன்னில், தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும் போயினள்' என்ற போழ்தே மன்னன் ஆவி போனான் என்னும் அடிகளுக்குத் தரும் விளக்கம் உன்னி மகிழ்தற்குரியது.

விசுவாமித்திரன் தான் இயற்றும் வேள்வி காக்க 'கரியசெம்மல் ஒருவனைத் தந்திடு' என்று தயரதன் கேட்டபோது 'ஆர் உயிர் ஊசலாடச் கண் இழந்தான் பெற்று இழந்தான் என உழந்தான்' என்னும் பகுதியுடன் ஆசிரியர் இணைத்துப் படைத்திருப்பது அவருடைய கைவண்ணத்தைக் காட்டுகிறது.

கம்பனும் காளிதாசனும் என்னும் கட்டுரை அரியது. காளிதாசன் பற்றிய பல செய்திகள், அவனுடைய படைப்பாற்றல், புலமை, கற்பனைத் திறன் ஆகிய இலக்கிய நலன்களைக் கம்பனின் படைப்பியலுடன், எடுத்துக் காட்டுகள் கூறி ஒப்புமை கூறியிருப்பது, திரு. நஞ்சுண்டன் அவர்களைக் காளிதாசனும் கம்பனும் எவ்வாறு இயைந்து ஈர்த்திருக்கிறார்கள் என்பதை விரிவாகக் காட்டுகின்றது.

இரகு வம்சத்தின் முதல் மன்னன் திலீபன் ஆட்சியின் மாட்சியைக் காளிதாசன் வருணிப்பதைக் கம்பன் தயரதனின் நேரிய ஆட்சியோடு ஒப்பிட்டு எடுத்துக் காட்டான பாடல்களையும் தந்து விளக்கி மகிழ்கிறார். கம்பனின் நாட்டுப் படல வருணனையான "தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க" என்னும் புகழ்பெற்ற பாடலைக் காளிதாசனின் இயற்கை எழில்

வருணனைக் காட்சியின் பிரதிபலிப்பாகக் காட்டி, உரிய தமிழ்மொழிப் பாடலையும் சுட்டுகிறார்.

கவிகாளிதாசன் தன் இரகுவம்சக் காவியத்தில் கடவுள் வாழ்த்தில் படைத்தல், காத்தல், அழித்தல் செயல்களைக் குறிப்பிட்டு அச்செயல்களுக்குரிய மும்மூர்த்திகளுக்கு வணக்கம் கூறுகிறான். இக்கருத்தைக் கம்பர் உலகை— ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் ஆகிய அலகிலா விளையாட்டுடைய ஒரு பொருளை வணங்கி வாழ்த்தும் பாங்கோடு ஒப்பிட்டு மகிழ்கிறார். கம்பனும் காளி தாசனும் நெடிய ஆய்வுக்கட்டுரை. ஆசிரியரின் நுண்ணிய ஆய்வுப் புலமை வெளிப்பட்டிருப்பதைப் பாராட்டவேண்டும்.

ஆசிரியரின் தமிழ்நடை எளியது; இனியது; சொல்வனவற்றைத் தெளிவாக நேரிடையாகச் சொல்லும் நடை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் இராமன் ஏற்றம் பேசுவதால் மங்கலமானது; படிப்பார்க்கு மனஅமைதி தந்து மகிழ்ச்சியையும் உள்ளுணர்வையும் அளிக்கவல்லது.

திருமண நிகழ்ச்சிகள், பிறந்தநாள் விழாக்களில் பரிசாக்க வாங்கித் தரத்தக்க பான்மை பெற்றது.

கம்பனில் ஆழங்கால் பட்ட நா. நஞ்சுண்டன் அவர்கள் இப்போதுதான் கம்பன் அமுதை முதல் நூலாக்கித் தருகிறார் என்பது வியப்பு மட்டுமன்று; அவரது அளவுக்கு மீறிய அடக்க உணர்வையும் காட்டுகிறது. அவர் பல பேரறிஞர்களுடன் பகிர்ந்த செறிந்த கம்பன் நயத்தை மேலும் நூலாக்கிக் கொணர கம்பன் திருஉள்ளமே அருள்புரிய வேண்டும்.

கம்பன் வாழ்க!
கம்பன் புகழ் வாழ்க!
கம்பன் தொண்டர்கள் வாழ்க!

— கோ. செல்வம்.

பொருளடக்கம்

1.	கம்பனில் இயற்கை வர்ணனை	..	1
2.	கவிதைச் சுவைநலம்	..	39
3.	திருமுடியும் திருவடியும்	..	57
4.	நல் அறமூர்த்தி	..	69
5.	மெய்யின் மெய்	..	87
6.	கம்பனும் காளிதாசனும்	..	112

1. கம்பனில் இயற்கை வர்ணனை

"படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளத்திலே" மூழ்கித் திளைத்தவன் கம்பன். மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரமாய், தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதமாய், செம்மைசேர் நாமத்தனாய், காலமும் கணக்கும் நீத்த காரணனாய், பனிநின்ற பிறவிப் பெருங்கடல் புணை பற்றி, நனிநின்ற சமயத்தவர் எல்லோரும், நன்று என்ன, தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தியாய் நின்ற காகுத்தனை, கம்பன் பாடிப்பாடி மகிழ்கிறான். அந்தமில் அழகனின் எழிலையெல்லாம் தன் கவிதையிலே வடித்து அஞ்சலி செய்கிறான்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நின்று, நிலைத்து, இன்றும் மக்களிடையே வழங்கிவரும் இதிகாசங்கள் இரண்டிலே தலைநின்றது இராமாயணக் காப்பியம். இந்தியக் கண்டம் முழுவதும் எங்கும் பரந்து, விரிந்து, பல்வேறு மொழிகளிலே சொல்லப்பெற்று, எழுதப்பெற்று, கடல் கடந்தும் சென்று, தனது பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் ஒரே காப்பியம் இராமாயணம் தான் என்பதை யாரும் மறுக்க இயலாது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியை எடுத்துச் சொன்னவன் வள்ளுவன். அந்தப் பொய்யில் கேள்விப் புலவனின் எழுத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவன் காப்பியத்

தலைவனான இராகவன். மெய்ப்பொருளுக்கு மேலான பொருள் இல்லை என்பது வேதவாக்கு.

அந்த மேலோரு பொருளுமில்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கி, கால் தரைதோய நின்று, கண்களுக்கு இலக்காகியது என்பது கம்பனின் சிந்தாந்தம். கம்பன் சத்தியத்தை இராமன் என்ற அழகனாகவும், அந்த மெய்ப்பொருளின் இதயத்தில் ஒளிரும் அருளழகை சீதையாகவும் சிருஷ்டி செய்து, தனக்கு மனநிறைவை உண்டாக்கிக் கொள்ளுகிறான். ஏன்? நமக்கும் நிறைவையே கொடுக்கிறான்.

இராமாயணக் காப்பியத்திலே வெறும் சம்பவங் களைக் கோவையாக மட்டும் சொல்லாமல், ஆங்காங்கே, பாத்திரங்களோடு ஒன்றிவிடும் அளவிற்கு இயற்கையை யும் சேர்த்துச் சொல்லி நம்மையெல்லாம் பிரமிக்க வைக்கிறான் கம்பன். இயற்கையை வர்ணனை செய்யும் போது, தத்துவங்கள் வந்து மோதி— நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சோழமண்டலத்தைக் கோசலமாகக் காண்கிறான். காவிரியைக் கங்கையாகக் கண்டு வர்ணிக்கிறான். இவ்வாறு பலப்பல செய்திகள் அவன் படைத்த இராமகாதையிலே வருகின்றன. சுவைக்கத்தான் நேரம் போதாதே! இருப்பினும் காப்பியத்துள் புகுந்து பார்ப்போம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் இயற்கை வர்ணனையில் தோய்ந்து, தோய்ந்து இன்புற்று எழுதியதற்கு எங்கேயாவது ஒரு மூலம் இருக்கத்தானே செய்யும். அது என்னவாக இருக்கும் என்பதைச் சிந்தனை செய்து பார்ப்போம்.

வைகறைப் பொழுது! கீழ்வானத்தில் இளஞ்சூரியன் மெல்ல, மெல்லத் தன்னுடைய சிவந்த கிரணமாகிய

கைகளை நீட்டிக்கொண்டு, வெளிவருகிறான். கங்குல் மெதுவாக விலகிச் செல்கிறது. பூமியெங்கும் வெள்ளைப் போர்வை போர்த்தாற்போன்று, லேசான பனிப்படலம் விரவி நிற்கிறது. இந்தப் பனிப்படலத்தின் ஊடே சற்றே சிவந்து காணப்பட்டிருந்த ஆதவனின் கிரணங்கள் படிப் படியாகப் பொன்னிற வர்ணத்திற்கு மாறுகின்றன. 'சிலுசிலு' என வீசும் காற்று மெல்லத் தவழ்ந்து பிரபஞ்ச வெளியிலே பவனிவருகிறது. தாழ்வாக இருக்கும் காவிரி நதியிலே, அசைந்து அசைந்து தண்ணீர் சலசலத்தவாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கொன்றும், இங்கொன்று மாகக் பட்சி ஜாலங்கள். மெல்லிய குரலில் சப்தமிட்டுக் கொண்டிருக்கின்றன. இருளின் பயங்கரப் பிடியிலிருந்து விடுதலை பெறுகிறோம் என்பதை, அவை நினை வூட்டுவனவாக இருக்கின்றன. காவிரிக் கரையின் மேட்டிலே, ஓங்கி உயர்ந்த மூங்கில் கூட்டங்கள், குருத்துகளைத் தாங்கி வளைந்து ஆற்றைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றன. பனிப்படலத்தின் முத்திரைகள், முத்து முத்தாக மூங்கில் இலைகள் மீது விழுந்து, விரவிக் கிடக்கின்றன. தொலைவிலிருந்து பார்த்தால், காவிரி அன்னைக்கு முத்துமாலைச் சரம் கோத்துப் போட்டது போன்ற ஒரு உருவெளித் தோற்றம் தெரிகிறது. பக்கத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம், பச்சைப் போர்வை விரித்தாற் போன்று, வயல்களில் நெற்பயிர்கள் வளர்ந்திருக்கின்றன. சில்லென்று அடிக்கும் காற்று மூங்கில் கூட்டத்தின்மீது பட்டு, ஊடுருவிச் செல்லும் போது உள்ளத்திற்கு இன்பம் ஊட்டும் நாதம் எழுகிறது. கண்ணுக்கும் செவிக்கும் இனிய விருந்து.

கம்பன் இந்த ரம்யமான சூழ்நிலையிலே பாதையிலே நடந்துகொண்டு வருகிறான். சற்றுத் தொலைவிலே உள்ள

வயல்வெளியிலிருந்து மெல்ல ஓசையொன்று, பாட்டாக அவன் காதுகளிலே வந்து விழுகிறது. ஆம்! அது பாட்டே தான். சிறிதும் சந்தேகம் இல்லை. மீண்டும் கருத்தை ஊன்றி அந்தத் திசையை நோக்கிப் பார்க்கிறான். இடை யிடையே இருக்கும் மூங்கில் கூட்டங்கள் பாடல் வந்த திசையை மறைத்தன. இருப்பினும், மெல்ல சந்தத்தோடு பாட்டு, வானவெளியிலே பவனி வருகிறது.

"மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே"

அதுதான்அந்தப்பாட்டின் முதல் அடி. ஆகா! ஆகா! என்ன அற்புதமான சொல்நயம்! என்ன வளமான கற்பனை! என்று எண்ணுகிறான் கம்பன். எதிரே காவிரி அன்னையைத் தொட்டுத்தொட்டு வணங்கிக் கொண்டிருக்கும் மூங்கில்கள்மீதும் அவன் பார்வை செல்கிறது. பிரமித்தான் கவிஞன். கற்பனையென்று எண்ணிவிட்டேன்– இல்லை– இது கற்பனை இல்லை. காணும் காட்சிதான்– என்று மனத்திலே எண்ண மிடுகிறான் கவிஞன்.

மூங்கில் இலைகள் மீது முழுவதும் முத்துக் கோத்தாற்போல பனித்துளிகள் இருப்பதைத் தானே இப்பாடல் சொல்கிறது– வார்த்தை ஜாலம் செய்கிறது– என்று வியந்தவாறே பாட்டின் அடுத்தவரியைக் கேட்க ஆவலோடு நிற்கிறான் கம்பன்.

தாழ்வான ஆற்றுப்படுகையிலிருந்து, ஏற்றத்தின் மூலம் மேடான நிலப்பகுதிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த ஒருவன், ஏற்றப் பாட்டாக இதைப் பாடிக் கொண்டிருந்தான்.

'மூங்கில் இலைமீது தூங்கும்பனி நீரே'

திரும்பத்திரும்ப இதே வரிகள்– தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அடுத்தவரிதான் என்ன என்று ஏங்கி, தவித்து, ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்த கம்பனின் செவிகளில்– பாடலின் அடுத்தவரிகள் பளீரென்று வந்து விழுகின்றன.

"தூங்கும் பனிநீரை வாங்கு கதிரோனே"

ஆகா! ஆகா! என்று எக்காளமிடுகிறான். இது அல்லவோ கவிதை சந்தோஷம்! அற்புதம்! என்று வியக்கிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

சூரியஒளியில், மெல்ல மெல்லப் பனிப்படலம் விலகிச் செல்லுகிறது. பூமியெங்கும் வெண் ஆடை போர்த்து மூடி இருந்த பனி மட்டுமா மறைந்தது? மூங்கில் இலைகள் மீது அமர்ந்து உறங்கிக்கொண்டிருந்த பனித் துளிகளும் அல்லவோ மறைந்துவிட்டன. எங்கும் ஒளி வெள்ளம் பாய்ச்சி நிற்கிறான் காலைக் கதிரவன்.

இந்த வைகறைக் காட்சி, இயற்கை அன்னையின் அற்புத விளையாட்டிலே– சாதாரணமாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சிதான். இது ஏற்றப்பாட்டிலே எவ்வளவு அற்புதமாக அமைந்துவிட்டது. பாட்டிலே சந்தமும் பொருளும், தங்கு தடையில்லாமல் விழுந்து கிடப்பதைக் கண்ட கவிஞன் கம்பன் பூரிக்கிறான். வியந்து நிற்கிறான். இச்செல்வம் தமிழ்நாட்டு மண்ணின் வளமன்றோ? என்று போற்றிப் பாராட்டுகிறான்.

இந்த ஒரு நிகழ்ச்சிதான், கம்பன் தனது இராம காதையிலே வரும் பல்வேறு சம்பவங்களை– இயற்கை யின் பின்னணியிலே நிலவவிட்டு, காட்சிக்குக் காட்சி மெருகூட்டும் வகையில் அமைவதற்கு வித்தாக

அமைகிறது. கம்பன் இயற்கையின் எழில்கோலத்தை எல்லாம் பாட்டாக வடித்துத் தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் ஊற்றாகப் பொங்கி எழுமாறு செய்கிறான். நடையில் நின்று உயர் நாயகனுடைய கதையை மாத்திரம் சொல்லி அவன் தனது காவியத்தை முடிக்க விரும்பவில்லை. கங்கையை வர்ணிக்கும் கவிஞன் காவிரியைக் கண்டுதான் வர்ணனை செய்கிறான்.

"காவிரிநாடன்ன கழனிநாடு"

என்றுதான் பாடுகிறான். அவன் பார்த்த கோசலம்— சோழ மண்டலமாக மிளிர்கிறது. சோழ தேசத்தின் இயற்கை எழில்— பூத்துக்குலுங்கும் புதுமலர்ச் சோலைகள், பொழில்கள், மலைகள், வனங்கள், நெய்தல் நிலங்கள் எல்லாமே கம்பன் பார்வையில் பதிந்து, அவனது இராம காவியத்தின் வர்ணனைகளுக்குத் தூண்டுகோலாக இருந்தன என்பதை யாரும் மறுக்க இயலாது.

கம்பன் கண்ட காட்சிகள் சிலவற்றை, இயற்கையின் எழில்கோலத்தை— நாம் இன்று ரசித்துக் காண்போம். கண்டறியாதன கண்டோம் என்று அதனோடு ஒன்றி விடுவோம். வாருங்கள் கம்பனின் கவிதா சாம் ராஜ்யத்திற்கு...

இந்த உலகம் முழுவதும் இயற்கையன்னை களி நடனம் புரிந்துகொண்டு இருக்கிறாள். அந்திவானத்துச் செக்கர் நமது கண்களைக் கொள்ளை கொள்ளுகிறது. வசந்தருதுவின் மஞ்சள்கொன்றை தழல் சொரிந்து நம்முடைய நெஞ்சத்திலே கிளுகிளுப்பை ஏற்றுகிறது. வானமும் வயலும் வர்ண மேலாப்பின் அழகை யெல்லாம் பயிர்செய்கின்றன. மழைக்காலத்து வான வில்லின் வர்ண ஜாலங்கள் விசுவரூபம் எடுத்து பார்!

பார்!! என்று நம்மையெல்லாம் அழைக்கிறது. இவை யெல்லாம் ரசிக்க நமக்கு நேரம் எங்கே இருக்கிறது? இயந்திரகதியிலே இயங்கிக் கொண்டிருக்கும் நமக்கு, அப்படியே நேரம் இருந்தாலும் ரசித்துத்தான் பார்ப்போமே என்ற எண்ணமாவது உண்டாகிறதா? அதுவும் இல்லையே! என்னதான் செய்வது?

ஆனால், இந்த இயற்கைத் தேவதையின் எழிற்கோல நடனங்களையெல்லாம் ரசிப்பவன் கவிஞன்தான். அவனது பரந்த, விரிந்த உள்ளம் எத்தனை எத்தனையோ எண்ணக் கோலங்களைத் திரட்டி அழகை, மாந்தி மாந்தி இன்புற்றிருக்கும். இந்த இயற்கை அழகின் பல்வேறு சாயல்களை, ஒவ்வொருவிதமான, புதிய உணர்ச்சியாக, புதிய வடிவிலே கவிஞன் தருகிறான். நாம் அனைவரும் கவனிக்கத் தவறிய, கோடானுகோடி அழகை, வனப்பை, வண்ணத்தை கவிஞன் தன் காவியத்திற்குள்ளே வைத்து, மெருகிட்டு, அவைகளைச் சிரஞ்சீவித்துவம் பெற்றுவிடச் செய்கிறான். அவை ஒவ்வொன்றும் நமது கருவூலங்கள். நமது கவிச்சக்கரவர்த்தி கம்பன் காட்டும் இயற்கை எழிலோவியங்கள், காவிய உலகிலே புது மெருகையும் சலியாத வலிமையும் கொண்ட உணர்ச்சிப் பிழம்புகள்— எண்ணத்தின் வண்ணக்கோலங்கள். இதோ ஒரு காட்சி!

விடியற்காலை. கீழ்வானத்தில் செக்கர், வானத்தின் விளிம்பைத் தொட்டவாறு பூசி மெழுகி நிற்கிறது. நீண்டு பரந்து, விரிந்து கிடக்கும் கடலின் அலைகள் மெல்ல ஓசைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது. பறவைகளின் சப்த ஜாலம் காதிலே தங்குதடையில்லாமல் விழுகிறது. “கீசுகீசு” என்ற ஆனைச் சாத்தனின் பேரரவம் கேட்க வில்லையோ’ என்று யாரோ கூப்பிடுவதுபோல் தெரி கிறது அல்லவா? இயற்கையன்னையின் பவனி

இதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. மெல்ல மெல்ல— சிவந்த அடிவானம்— பொன்மயமான நிறத்திற்கு மாறுகிறது. தெரிந்தும் தெரியாமலும் ஆங்காங்கே செக்கர் இருந்துகொண்டு இருக்கிறது. பாண்டிக் கடற்கரையின் மணற்பரப்பில் அமர்ந்துகொண்டு இந்தக் காட்சியை காண்கிறான் பாரதி—

> "தங்கம்உருக்கி, தழல்குறைத்து, தேனாக்கி
> எங்கும் பரப்பியதோர் இங்கிதம்"

அடடா! அடடா!! இதுவல்லவோ அற்புதம் அற்புதம் என்று அந்தப் புதுயுகக் கவிஞனின் உள்ளம் சிலிர்க்கிறது. இயற்கையை வியந்து பாராட்டுகிறது. கவிதை ஊற் றெடுத்து, பொங்கிப் பிரவாகமாய், கடலோடு மோதி, காற்றோடு கலந்து மனித சமுதாயத்தின் நாடி நரம்பு களையெல்லாம் சுண்டிவிட்டு, அந்தக் காட்சியை அனுபவிக்கச் செய்கிறது. இதே காட்சியை ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் கம்பனும் கண்டிருக்கிறான். எப்படி என்று பாருங்கள்!

"யானையின் உரிவைபோர்த்து, கடவுள் நுதல் கிழித்த விழியேபோல்," கதிரவன் கீழ்வானத்தில் உதயம் செய்கிறான். இவ்வாறு உதயமாகும் பொழுது பல சம்பவங்கள்— செயல்கள் நிகழ்கின்றன. ஓம், ஓம் என்று மறைகள் ஒலிக்கின்றன. வானவீதியில் வலம் வரும் கின்னரர்கள் கீதம் இசைத்துக் கதிரவனுக்கு கட்டியம் கூறுகிறார்கள். உலகம் அனைத்தும் புகழ்மாலை சூடுகிறது. விண்ணவர்கள், இமையாத் தேவர்கள், ஞானம் மிகுந்த தவச்சிரேஷ்டர்கள், ஆதவன் வரவு நோக்கி அர்க்கியம்— சந்தியாவந்தனம் செய்யும் வேதியர்கள் அனைவரும் தங்கள் கரங்களைக் குவித்துக்கொண்டு சூரிய தேவனுக்கு

நல்வரவு கூறுகிறார்கள். நீலப் பெருங்கடல் தன் அலைக் கரங்களாலே கரையில் வந்து திரும்பத்திரும்ப மோதிச் செல்வதன்மூலம் முழவின் ஓசையை எழுப்பி ஆதவனுக்கு நல்வரவு கூறுகிறது.

இங்கே கண்ணுதல் வானவனுக்கு வானவிதானம் ஆடல் அரங்காக மாறுகிறது. குனித்த புருவம்— கொவ்வைச் செவ்வாய்— குமிண் சிரிப்பு— பனித்த சடை— பவழம்போல் மேனியிலே பால் வெண்ணிறு. ஆனந்தத் தாண்டவம் ஆடும் கூத்தரசனின் ஒய்யார ஆட்டத்தின் தலையசைப்பிலே— அவனது சடைகள் விரிகின்றன. பவழம் போன்ற அவனது மேனியின் ஒளி— சிவந்து விளங்கும் அவனது சடைகளின் ஒளி— பரந்த வானத்தின் விளிம்பையெல்லாம் தொட்டுத் தன்மயமாக்குகிறது. எங்கும் சிவப்பு— எதிலும் சிவப்பு— அப்படியொரு மனோன்மயமான தோற்றத்தை, நமக்குத் தருகிறது. கதிர்க்கரங்கள் விரித்து ஒளிபரவுகிறது. அடிவானத்தில் சூரியக் கதிர்கள் பாயத் தொடங்குகின்றன. கதிரவன் உதய மாகிறான். இது கம்பன் அனுபவித்த காலைக்காட்சி— சொல்லிலே காட்சியை வடித்து, நமது நெஞ்சங்களிலே பதியவும் வைத்துவிடுகிறான் கம்பன்.

எண்ணரிய மறையினோடு கின்னரர்கள் இசைபாட
உலகம்ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரங்குவிப்ப
வேலைஎன்னும்
மண்ணு முழவு அதிர வான்நடம் புரிவான் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச் சடை விரித்தா
லென விரிந்த கதிர்கள் எல்லாம்''

பாடலைக் கேட்கும்பொழுது கதிரவன் தோற்றம் மனக்கண்ணில் தோன்றகிறதல்லவா?

"எது விரிகிறது? எதைப்போல விரிகிறது? ஆம்! கண்ணுதல் வானவன்– இவனுடைய கனகச் சடை (பொன் மயமான சடை) அவனது ஆட்டத்தின்போது விரிகிறதே அதைப்போல– அடிவானத்தில் சூரியக் கதிர்கள் விரிந்தன என்று கம்பன் பாடலை முடிக்கும் போது நம்மையும் அறியாமல் கையெடுத்து சூரிய பகவானைத் தொழத்தானே தோன்றுகிறது.

பாரதி சொன்னான், "தங்கம் உருக்கி, தழல் குறைத்து" என்று, இங்கு கம்பன் "கனகச் சடைவிரித்தாலென்ன" என்றல்லவா பேசுகிறான். ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் கவிஞர்களுக்குள்ளே இருக்கும் ஒற்றுமை, கற்பனை, மாறிவிடவா முடியும்? அதுதானே கவிதைப் பண்பு, ரசனை.

இயற்கையை எழில்படுத்தும் ஜால வித்தையை கம்பன் நன்கு அறிந்தவன். அழியாத ஓவியமாகக் காட்டும் சித்திரக்கவி.

கங்குலை– இரவைப் பற்றி அவன் கூற்றைப் பாருங்கள்! மனிதனுக்குப் பயம் எப்பொழுது தோன்று கிறது? அது வெளிச்சத்தில் தோன்ற முடியாது. ஆனால் தனிமையிலே தோன்றக்கூடும். அந்தத் தனிமையும் ஒளி இல்லாதபோது இருக்குமானால், மரணபயமே வந்து விடக் கூடும். அத்துணை அளவிற்கு மனத்திற்கு அச்சத்தையும் துன்பத்தையும் தரக்கூடியது கங்குலாகிய இருள். கதிரவனின் வருகையால் ஒளிபெற்று இயங்கும் இவ்வுலகம், இருளின் பிடிப்பிலே, ஓசையற்று, செய விழந்து தன்னையும் இழந்துதானே நிற்கிறது. இறைவனின் படைப்புகள் அத்தனையும் மனிதர்கள் உட்பட இரவின் பயங்கரப் பிடியிலே சிக்கித் தவிக்கத்தானே செய்

கிறார்கள். பூதாகாரமான இருள் இந்தப் பிரபஞ்சம் முழுமையும் சூழ்ந்து வளைத்துக் கொண்டு— தன் ஆதிக்கத்தைச் செலுத்த முற்பட்டு விடுகிறது.

ஆந்தைக் கூட்டங்களின் ஒலியும், குள்ளநரிகளின் ஊளையும், பேய்க்கணங்களின் நடமாட்டமும், இந்தக் கங்குலின் கடுமையை இன்னும் பயங்கரமாகச் செய்து விடுகிறது என்பதை நாம் உணர்ந்தே இருக்கிறோம்.

மிதிலைக் காட்சிப் படலத்தில் இந்த இருளை நமக்கு கம்பன் அறிமுகப்படுத்துகிறான்.

ராஜவீதியிலே கௌசிகமுனிவனோடும், இளைய வனோடும் செல்லும் சக்கரவர்த்தித் திருமகனை— மிதிலை நாட்டின் தோரணக்கொடிகள் "ஐயனே ஒல்லை வா! ஒல்லை வா" என்று அழைக்கின்றன. ராஜவீதியிலே இவர் களை மணிமாடத்து உச்சியிலிருந்து சீதை பார்க்கிறாள். நடந்துசென்ற இராமனும் மேலே பார்க்கிறான்.

"அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்"

இராமனும், சீதையும் இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்துகிறார்கள். கண்கள் ஒன்றினோடு ஒன்றைக் கவ்விக் கொள்ளுகின்றன. இராமன் வீதி வழியே செல்லுகிறான். சீதை வைத்த விழி வாங்காது நோக்குகிறாள்.

இராமனையே நினைந்து, நினைந்து விரகதாபத்தால் சீதை துடிதுடித்துக் கொண்டு இருக்கிறாள்.

அந்தச் சீதையினுடைய காமத்தீயின் வெப்பம்— தன்னைச் சுடுவது தாங்கமாட்டாமல், தன்னுடைய நீண்ட நெடும் கரங்களை, அசைத்துக்கொண்டு ஓடிப்போய் கதிரவன் மேலைக்கடலில் மூழ்குகிறான்.

"அன்னமென் நடையவட்கு அமைந்த காமத் தீ
தன்னையும் சுடுவது தரிக்கிலான் என,
நன்னெடும் கரங்களை நடுக்கி, ஓடிப்போய்
முன்னை வெங்கதிரவன் – கடலில் மூழ்கினான்''

என்பது பாட்டு. சூரியன் அஸ்தமனம் ஆகிறான் என்று பேசவந்த கவிஞன், சீதையின் காமத்தீ வெப்பம் தாங்காமல், கடலில் குளித்துத் தனது வெம்மையைத் தணித்து கொள்ளுகிறான் என்று சம்பவத்தோடு ஒட்டி இக்காட்சியை வர்ணித்துப் பேசுகிறான் கம்பன். சூரியன் மறைவுக்குப் பிறகு இருள்வருகிறது. ஆம்! எப்படி வருகிறது!

"கருநிறச் செம்மயிர்க் காலன்" தோன்றுவதுபோல இருள் வருகிறதாம். அமிர்தத்திற்காகக் கடலைக் கடைந்த பொழுது ஐராவதம் வந்தது; கௌஸ்துபம் வந்தது; இலக்குமி வந்தாள்; கற்பகம் வந்தது; இன்னும் பலவேறு பொருள்கள் கடலைக் கடைந்த பொழுது வந்தன. அவை களையெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு தேவர்கள் எடுத்துக்கொண்டார்கள். மீண்டும் கடைய ஆரம்பித் தார்கள். திடீரென்று யாரும் எதிர் நோக்காத நேரத்திலே ஆலகாலவிடம் வந்தது. கருநீல நிறத்தில் கடல் மண்டலம் எங்கும் வியாபித்து உயிர்க்கூட்டங்கள் அனைத்திற்கும் தாங்கொணாத மரணவேதனையைத் தந்து கொண்டு வந்தது. அமுதம் வேண்டிக் கடலைக் கடைந்த தேவர் களும், அசுரர்களும் இந்த ஆலகால விடத்தைக் கண்டு அஞ்சினார்கள். விண்ணவரே கண்டு பயந்து நடுங்கி நிற்கும் அளவிற்கு இருந்த அக்கொடிய ஆலகால விடத்தின் கருமையை– கங்குலின் கருமைக்கு ஒப்பாக இங்கு கம்பன் கூறுகிறான்.

"ஆலம் உலகில் பரந்ததுவோ"

இல்லை— இது கரும்விடம் இல்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள். பின் எதுவாக இருக்கும். இந்தப் பரந்த பூமண்டலத்தைச் சுற்றிவளைத்துக் கொண்டு இருக்கின்ற சமுத்திரமண்டலந்தான் கிளர்ந்து, கோபங்கொண்டு இந்த ஞாலம் அனைத்தையும் தன் கருமைநிற அலைக்கரங் களால் விழுங்க முயல்கிறதோ?

"ஆழிகிளர்ந்ததுவோ— அவர்தம் நீலநிறத்தை
எல்லோரும் நினைக்க"

இருக்காது! இருக்கவும் முடியாது? பின் எதுவாகத் தான் இருக்கும்? நம்மைப் போட்டுக் குழப்புகிறான் கம்பன்.

மரணத்தைத் தரக்கூடியவன் காலன்— யமன். கருப்பு நிறம் உடையவன். அவனது யம படர்களும்— கருப்பு நிறத்தவர்கள்— காலன் ஏறி வரும் வாகனமாகிய எருமைக் கடாவும் கருப்பு நிறம். ஆகக் காலன் என்ற சொல்லே கருமை என்றல்லவா பொருள்படுகிறது. அக்காலனின் கருமை நிறத்தை அஞ்சனத்தில் கலந்து, நன்றாகக் குழைத்து, வானவெளியெல்லாம் பூசி மெழுகி விட்டார்களா என்ன? வானவெளி மட்டுமில்லாமல் இந்த ஞானவெளியிலேயும் அல்லவா பூசி மெழுகி இருக் கிறார்கள்?

"காலனின் நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்து
காயத்தின் மேலும், நிலத்தின் மேலும் மெழுகியதோ"

பூமியில் பரவியுள்ள இருண்ட கங்குலானது ஆலகால விடம்— ஆழி— காலன்— இவைகளின் கருமையை நினை வூட்டுவதாக இருக்கிறது.

“விளைக்கும் இருளாய் விளைந்ததுவோ” என்று சீதை எண்ணுவதாகக் கம்பன் பாடலை முடிக்கிறான். பாட்டு முழுமையும் பார்த்தால் கருமையின் பயங்கரம் நமக்குப் புலப்படும்.

“ஆலம் உலகில் பரந்ததுவோ!
ஆழிகிளர்ந்ததுவோ! அவர்தம்
நீலநிறத்தை எல்லோரும் நினைக்க—
அதுவாய் நிரம்பியதோ
காலன்நிறத்தை அஞ்சனத்தில் கலந்து,
குழைத்து காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ!
விளைக்கும் இருளாய் விளைந்ததுவோ!

“விளைக்கும் இருளாய் விளைந்ததுவோ” என்ற சொற்றொடரில்தான் எவ்வளவு ஆழம், பயங்கரம் ஊடுருவி இருக்கிறது பாருங்கள்.

சூரியன் மறைந்து இருள்வந்து உலகத்தைக் கவ்வுகிறது என்று கங்குலைப் படம்பிடித்துக் காட்டும் கம்பன். எவ்வளவு பயங்கரமான கற்பனையை ஓடவிட்டு, பாடலைப் படிப்போர் உள்ளத்தில் அச்சமும், மரண பயமும் தோன்றும்படியாக அல்லவா செய்துவிடுகிறான். இதுதான் கம்பனின் ரசவாத வித்தை.

இவ்வாறு கங்குலின் பிடிப்பில் சிக்கித் தவிக்கும் நம்மையெல்லாம் ஒளிமயமான உலகத்திற்கு அழைத்துச் செல்லும் வெண்மதியை கம்பனின் ரசனை, புலமை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துவதைக் காண்போம். வாருங்கள்.

அமுதம் வேண்டுமா? இதோ தருகிறேன் என்று கம்பன் கூறுகிறான். அமுதம் என்ற உடன் கடல் கடைந்த கதைதான் நம் நினைவுக்கு வருகிறது. தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டி வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி கடல்வயிறு கலக்கி, முறுக வாங்கிக் கடைகிறார்கள். அவர்களால் முடியாத நிலையிலே, வாலி என்னும் வரம்பில் ஆற்றலான் தானே கடைகிறான் என்ற கதையும் நம் நினைவிலே வந்து ஊசலாடுகிறது. ஆய்ச்சியர் இல்லங்களிலே தயிர் கடையும் பொழுது– உண்டாகும் வேகத்தில்– தயிர்த்துளிகள் தெறிப்பதுபோல பாற்கடலிலேயும் திவலைகள் தெறிக்கின்றன. தெறித்த துளிகள் வானத்துப் பந்தலிலே தோன்றும் விண்மீன்கள் என ஒளிர்ந்து கண்சிமிட்டுகின்றன. பாடல் துவங்குகிறது–

"பெருந்தண் நெடுமால்வரை நிறுவி,
பிணித்தபாம்பின் மணித்தாம்பின்
விரித்த திவலை பொதிந்த மணி
விசும்பின் மீனின் மேல் விளங்க"

இவ்வாறு கடைந்து, கொண்டிருக்கும்போது, இறுதியில் தயிரிலிருந்து வெண்ணெய் வருவதுபோல அமுதம் உருண்டு, திரண்டு கடலின் நடுவே பொற்கலயத்தில் வருகிறது.

"அமுதம் நிறைந்த பொற்கலசம் இருந்து
இடைவந்து எழுந்தது"

ஆமாம். அமுதத்திற்கும், சந்திரனுக்கும் என்ன சம்பந்தம் என்று தோன்றுகிறதா உங்களுக்கு? கம்பனையே கேட்போம்.

பரந்துவிரிந்த நீலக்கடலின் பேரலைகள் கரைக்கு முன்னும், பின்னும் வந்து திரும்புகின்றன. இருளாகிய

மலைக்கு நடை அலைகள் இழுத்து, முன்னும் பின்னு மாகக் கடைகின்றனவாம். வானத்துக் கரும் போர்வையில் வெள்ளிமீன்கள் கண்சிமிட்டி மின்னுகின்றன, அலை களின் திவலைகள் வானத்தில் தெறித்து வெள்ளி மீன்களாக மாறுகின்றனவோ என்று எண்ணும்படியாக மின்னுகின்றன.

அலைகள் முன்னும் பின்னுமாக வேகமாகக் கடையக் கடைய, உருண்டு திரண்டு கடலின் அடிவானத் திலே வெண்திங்கள் வருகிறது. அன்று அமுதம் வேண்டிக் கடலைக் கடைந்த பொழுது பொங்கிவழிந்து பொற் கலயத்தில் வந்த அமுதம் போல்– ஆழிவெண் திங்கள் கடலின் அடிவானத்தில் உதயம் செய்கிறது.

ஆம்! கவிஞனுடைய கற்பனை எவ்வளவு உயர்ந்து காணப்படுகிறது. வானத்துக் காட்சி வையகத்துக் கடல் காட்சியாக மாறுகிறது.

இந்த இயற்கைச் சித்திரத்தின் பொலிவை, நாமும் பொலிக! பொலிக! எனக் கூறி மகிழ்ந்து அனுபவிக் கிறோம். இல்லை, கவிஞன் நம்மை அனுபவிக்க வைத்துவிட்டான். பாடலைப் பாருங்கள்–

"பெருந்திண் நெடுமால்வரை நிறுவி,
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரித்த திவலை பொதிந்த மணி,
விசும்பின் மீனின் மேல் விளங்க,
அருந்த அமரர் கலக்கிய நாள்
அமுதம் நிறைந்த பொற்கலசம்
இருந்தது இடைவந்து எழுந்தது என
எழுந்தது ஆழிவெண் திங்கள்"

வெள்ளைத்தாமரை யொன்று கடல் ஞாலத்தில் பூத்து வருவதைப் போல— ஆழிவெண் திங்கள் பூத்தது" என்றும் கம்பன் மற்றொரு பாடலிலே கூறுகிறான்.

எழில்கொஞ்சும் இயற்கையை, கதிரவன் உதயத்தை— அத்தமனத்தை, கங்குலின் கருமையை, வெண்மதியின் வரவை, அழகினுக்கு அழகு செய்து காலத்தால் அழியாத எழில் ஓவியமாகக் காட்டுகிறான் கம்பன்.

கம்பனின் இயற்கை வர்ணனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு இதோ ஒரு புதிய செய்தி!

எங்கேயாவது, யாரிடத்திலாவது, கடல்நீர் இனிக்குமா? என்று கேட்டுப் பாருங்கள். கேள்வி கேட்ட நம்மை ஒரு மாதிரியாகப் பார்ப்பார்கள். ‘ஆசாமி ஒரு மாதிரி போலிருக்கிறதே’ என்றும் எண்ணுவார்கள். கம்பனிடத்திலேயே இக்கேள்வியை கேட்டோமானால் பளிரென்று பதில் கூறுவான். ஏன் இனிக்காது என்று?

கடல்நீர் என்றாலே உப்புக் கரிக்கும். சுவைக்காது. அது எங்கே இனிக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில்— கம்பன் நம்மை நெய்தல் நிலத்திற்கே அழைத்துச் செல்லுகிறான்.

நோக்கும் திசையெல்லாம் கடற்பரப்பு, அலைபாயும் கடல். அக்கடலில் வாழும் மீனினங்கள் மேலாகப் பறந்து துள்ளிக் குதித்து மகிழ்ந்து, நீரில் விளையாடுகின்றதை நமக்குக் காண்பிக்கிறான் கம்பன். மது அருந்தி கள் வெறியில் மயங்கி, களித்துக் கொண்டு எவ்வாறு மீன்கள் இருக்கின்றன எனக் கேட்கத்தானே தோன்றுகிறது. கடலிலிருந்து ஒரு கை தண்ணீரை எடுத்துச் சுவைத்துப் பாருங்கள் என்ற கம்பன் கட்டளையை சிரமேற்கொண்டு,

கடல்நீரைச் சுவைக்கிறோம். என்ன ஆச்சர்யம்! இது உவர்க் கடலா அல்லது தேன் கடலா?

கடல்நீர் சற்றுகூட உவர்ப்பாக இல்லை. தேன் போன்று இனித்தது. சுவையாக இருந்தது. அமுதம் பிறந்த கடல் உவர்க்குமா என்ன? எவ்வாறு இச்சுவை ஏற்பட்டது? என்று எண்ணும்போது கம்பன் பேசுகிறான்—

கோசல நாட்டின் வற்றாத வளம்கொழிக்கும் ஜீவ நதியாக விளங்கும் சரயூநதி, கல்லிடைப் பிறந்து, கடலிடைக் கலக்கும் பெரும்நதியாய், "முல்லையைக் குறிஞ்சி ஆக்கி, மருதத்தை முல்லையாக்கி, புல்லிய நெய்தல்தன்னைப் பொருவரு மருதம் ஆக்கும்" தன்மையைக் கொண்டதாய் விளங்குகிறது. இதன் நீர் வளத்தினாலே வயல்களில் வானுயர செங்கரும்பு வளர்ந்து நிற்கிறது. உருண்டு, திரண்டு, செழித்து வளர்ந்து காணப்படுகிறது. கழனியின் அருகே இருக்கும் கரும்பு ஆலைகளிலே கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கிறார்கள். இவ்வாறு சாறு பிழிந்து எடுக்கப்படும்போது மிகுதியான சாறு வழிந்தோடுகிறது. மடைவழி கடந்து, வாய்க்காலில் கலந்து, ஆற்றோடு கலக்கிறது. பாடலின் முதல்அடியைக் பாருங்கள்—

"ஆலைவாய்க் கரும்பின் தேனும்"

ஆற்றின் இருகரைகளிலும், வயல்வரப்புகளிலும் விண்ணை முட்டும் அளவிற்குத் தென்னைமரங்கள் காட்சி தருகின்றன. அத்தென்னை மரங்களில் செழுத்துத் திரண்டு வளர்ந்திருக்கக் கூடிய பாளைகளில் ஏற்படும் வெடிப்புகளிலிருந்து உண்டாகும் தேன் கீழே தாரை தாரையாக மழைநீர் போல் விழுகிறது. விழுந்த தேன் வடிகால் வழியாகச் சென்று ஆற்றை அடைகிறது. ஆக ஆற்றில் தென்னம்பாளைத் தேனும் கலந்து ஓடுகிறது.

"அரிதலைப்பாளைத் தேனும்"

சுற்றிச்சூழ இருக்கும் பசுஞ்சோலைகளில் இருந்து, பழுத்து கனிந்து இருக்கும் கனிகளிலிருந்து தேன் கசிந்து கொண்டு இருக்கிறது. மா, பலா, வாழை போன்ற கனிகளின் தேன் கலவையும், கீழே சிந்துவதால், ஆற்றில் முக்கனியின் தேனும் கலந்து இனிக்கிறது.

"சோலைவாய்க் கனியின் தேனும்"

சோலை என்று சொன்னாலே தேனீக்களுக்குப் பஞ்சமில்லை அல்லவா? மரத்திற்கு மரம் தேன் கூடுகள் அடர்த்தியாகக் காட்சியளிக்கின்றன. அந்தத் தேன் கூட்டிலிருந்து இடத்தின் செழுமை காரணமாகத் தேன் வழிந்து விழுகிறது.

"தொடை இழி இறாலின் தேனும்"

சரயுநதியிலே ஆடவரும், பெண்டிரும் நீராடு கின்றார்கள். கூட்டம் கூட்டமாக வந்து நீராடுகிறார்கள். அவர்கள் விதவிதமான மாலைகளை அணிந்துகொண்டு நீரிலே ஆழ்ந்து ஆழ்ந்து குளிப்பதனாலே அவர்கள் அணிந்துகொண்டு வந்த மாலைகளில் இருக்கும் பூக்களில் உள்ள தேன் நன்றாக அலசப்பெற்று ஆற்றோடு கலந்து விடுகிறது. பூவின் தேனும் கலந்து ஆறு மேலும் இனிக் கிறது.

"மாலைவாய் உகுத்த தேனும்"

ஆம்! எங்கும் தேன். எதிலும் தேன். ஆறே தேன் மயமாக இருக்கிறது. இப்படிக் கரும்பிலிருந்து கனியும் செந்தேன், தென்னம்பாளையிலிருந்து சிந்தும் தேன், சோலைகளில் இருக்கும் கனிந்த பழங்களின் தேன், கொம்புத்தேன், மாலைகளில் உள்ள தேன்— இப்படியாக எல்லாவகையான தேனும் ஒன்றாகக் கலந்து சரயுநதியில்

சென்று சேருகின்றன. ஆகா! என்ன இன்பம். அப்படியே இந்த ஆறு தேன்வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கடலில் கலந்து சங்கமமாகிறது. ஆற்றின் சங்கமப் பகுதியை நோக்கி மீன்கள் படையெடுக்கின்றன. உவர்க் கடல், தேன் கடலாக மாறிவிட்டது. உண்டு களிப்போம் என்று வருகின்றன. தேனை உண்டு களிபோடுகின்றன. துள்ளிக் குதிக்கின்றன.

"வேலைவாய் மடுப்ப– உண்டு மீன் எலாம் களிக்குமாதோ"

என்று கம்பன் தேன்கடலை நமக்குக் காண்பிக்கிறான். பாடலைப் பார்க்கும்போது தேனின் மணமும், சுவையும் நம்மைக் கிறங்க வைக்கின்றன. நாக்கிலே நீர் சுரக்கிறது. பாடலும் இனிக்கிறது.

"ஆலைவாய்க் கரும்பின்தேனும்
அரிதலைப்பாலளத்தேனும்
சோலைவாய்க் கனியின் தேனும்
தொடைஇழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும்
வரம்பு இகந்து ஓடிவங்க
வேலைவாய் மடுப்ப உண்டு
மீன்எலாம் களிக்குமாதோ"

என்று தேன்சுவைப் பாடலைக் கம்பன் முடிக்கிறான்.

இயற்கையின் எழில் எங்கெல்லாமோ துள்ளி விளையாடி, வளங்கொழித்துக்கொண்டு மகத்தானதொரு கோசலத்தை உருவாக்கியிருக்கிறது என்று கவிஞன் வியக்கிறான். இது அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. நெஞ்சத்திலிருந்து அற்புதமான கவிதை பிறந்தும்விட்டது. அதைக் கண்டோம்.

இப்பொழுது சோலைகளின் பெருமையைச் சொன்ன கவிஞன், அங்கே நிகழும் பல்வேறு காட்சிகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான். அவற்றிலே இதோ ஒரு காட்சி. குயில் திருமணம். திருமணம் என்றால் சாதாரணத் திருமணம் அன்று. மிகப் பெரிய திருமணம். அதுவும் குயில் திருமணம் என்றால் கேட்கவா வேண்டும்.

குயில் என்று சொன்னாலே அதனுடைய இனிமை யான குரல்தான் நமக்கு நினைவுக்கு வருகிறது. சோலை சாம்ராஜ்யத்தின் ஆஸ்தான, அரசவைப் பாடகர்கள் குயில் கள்தாம். இனிமையான கானத்தை நாம் குயிலோசை என்றுதானே சொல்லுகிறோம். நமது புது யுகக் கவிஞன் பாரதியும் "கத்தும் குயிலோசை சற்றே வந்து என்றன் காதில் படவேண்டும்" என்றுதானே பேசுகிறான்.

பறவைகளின் அன்றாடச் செயல்களை– இயற்கை யோடு இணைந்து நடக்கும் அச்செயல்களை– கம்பன் கவிதா ரசனையோடு தரும்போது அது மெருகேற்றிவிட்ட தங்கமாக ஜொலிக்கிறது.

சண்பகக்காவின் பிரபல பாடகர் திருவளர் செல்வன் குயிலனுக்கும் சந்தனக்காவின் பிரபல பாடகி திருவளர் செல்வி குயிலுக்கும் திருமணம். இந்தப் பெருமை வாய்ந்த திருமணம் எப்படி நடக்கிறது என்பதைக் கம்பன் நாடக ரசனையோடு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

பறவைக் கூட்டங்கள் அனைத்தும் ஒருங்கே சங்கமித்து, ஆரவாரம் செய்துகொண்டு, குழுமி இருக் கின்றனவாம் இத்திருமணத்திற்குத் தங்கள் இனத்தின் இசை மேதைகளின் திருமணம் என்று அவைகள் பூரித்துப் பெருமையடைந்து நிற்கின்றன.

பெரிய இடத்துத் திருமணம் என்றால், ஆடல், பாடல் இல்லாமல் இருக்காது. ஒரு ஆடல் அரங்கமும் பாட்டரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆடல் அரங்கத்தின் பிரதான நர்த்தகி மயில்தான்.

"குயிலினம் வதுவைசெய்ய கொம்பிடை குனிக்கும்மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு அழகுசெய்ய"

நீண்ட கரிய விழிகளையுடைய மகளிர் ஆடும் நடனத்தைப் போலவே, மயில் தனது வண்ணத் தோகையை விரித்துச் சுழன்று சுழன்று ஆடுகிறது. தனது கவர்ச்சிகரமான ஆட்டத்தால் அனைவரது பார்வையையும் ஈர்த்துக் கொள்கிறது. மற்றொரு பக்கம் தாமரை மலர்களால் ஆன அரங்கில் வண்டுகள் இசை பொழிந்து கொண்டு இருக்கின்றன. வீணாகானம் போல் அந்த இசை இருந்தது.

"தும்பி காலைச் செவ்வழி முரல்வ"

ஒரு பக்கம் மயிலின் ஆடல் அரங்கம். மற்றொரு பக்கம் வண்டுகளின் பாடல் அரங்கம். இந்தச் சுகமான சூழ்நிலைகளுக்கு இடையிலே, குயிலனுக்கும் குயிலிக்கும் திருமணம் ஜாம் ஜாம் என்று நடக்கிறது. இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்கு இடையிலேயும் நடந்தது ஒன்றும் தெரியாதது போல தாமரை மலரில் உறங்கிக் கிடந்த அரச அன்னம் தன் துயில் கலைத்து கண்விழித்து இக் காட்சியைக் காண்கிறதாம். சுகமான உறக்கத்திற்குப் பின்பும் ரசமான காட்சியைத்தானே காண்கிறது அந்த அரச அன்னம்! இத்தனையும் கண்ணுக்கு விருந்தாய், கற்பனையின் சிகரமாய், கம்பன் பாட்டிலே மிளிரத்தானே செய்கின்றன.

பாடலைப் பாருங்கள்—

"குயிலினம் வதுவைசெய்ய கொம்பிடை குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு அழகுசெய்ய
பயில்சிறை அரச அன்னம், பன்மலர்ப்பள்ளி நின்றும்
துயில் எழத் தும்பி காலைச்செவ்வழி முரல்வசோலை"

இனி மழையைப் பார்ப்போம். கம்பன் தான் காணும் கோசலம் எல்லாவளங்களும் நிறையப் பெற்றிருக்க வேண்டும் என்று எண்ணுகிறான். குறையே இல்லாத வற்றாத வளம் நிறைந்த நாட்டை— மக்கள் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகக் காண்பிக்க விரும்புகிறான். நல்ல நாடாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு நில வளம் தேவையென்றால், வற்றாத ஜீவநதிகள் தங்கு தடையின்றி என்றும் பெருகி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஜீவநதிகள் ஓடுவதற்கு மரங்கள் நிறைந்த, உயர்ந்த மலைக் கூட்டங்கள் தேவை. அப்பொழுதுதான் கடலி லிருந்து ஆவியாக மாறும் மேகங்கள், மலை மீது வந்து மோதி மழையாகப் பொழியும். மலையில் பெய்தநீர் கீழ் நோக்கிப் பாய்ந்து, சமவெளிக்கு வந்து, ஆறாக மாறி நாட்டை வளப்படுத்தும். நாட்டுவளத்தைக் கூறவந்த கம்பன் முதலிலே மேகங்கள் மழை பொழிவதைத் தனது கற்பனைத் திறத்தாலே, கைவண்ணத்தாலே மகத்தான தொரு சித்திரமாகத் தீட்டிவிடுகிறான். தத்துவத்தோடு குழைத்தும் தீட்டுகிறான் பாருங்கள்!

வானவெளியிலே வெண்மேகக் கூட்டங்கள் சஞ் சாரம் செய்து கொண்டிருக்கின்றன. பரந்த வான விதானம் எங்கும் ஒரே வெண்மை! வெண்மை! இந்த வெண்மையைக் காணும்பொழுது நமக்கு நீறணிந்த மேனியான் சிவனுடைய நினைவுதான் வருகிறது. அவன் காடுடைய சுடலைப் பொடி பூசியவன். அவனது

பவழம்போல் மேனியில் பால் வெண்ணீறு பளிச்சென்று பிரகாசத்தோடு விளங்குகிறது. இச்செய்தியைக் கம்பன் தன் ரசவாத வித்தையினால் மெருகு ஊட்டுகிறான்.

வானவிதானத்திலே அலைபாய்ந்துகொண்டு இருக்கும் மேகக்கூட்டங்கள் இருக்கின்றனவே அவை சிவனைப் போன்று இருக்கின்றன. விண்ணும் மண்ணும் நிறைந்த ஜோதிப் பிழம்பாக இருக்கும் சிவபெருமானின் உடலில் பூசப்பட்டு இருக்கும் திருநீற்றின் வெண்மையைப் போல் இருக்கிறதாம் மேகங்கள்.

"நீறு அணிந்த கடவுள் நிறத்தவான்"

என்று அடியெடுத்துத் தொடங்குகிறான் பாடலை.

வானமண்டலத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருக்கும் மேகங்கள் என்ன செய்கின்றன? மெல்லமெல்லக் கீழே இறங்கி, அலைகடலின் மேல் தவழ்ந்து, திடீரென்று கடலில் புகுந்து எதையோ மொண்டுகொண்டு வருகின்றன.

"ஆறு அணிந்து சென்று ஆர்கலிமேய்ந்து"

சிவனது உடம்பில் பூசிய திருநீறு போன்ற வெண் ணிற மேகங்கள், கடலில் புகுந்து எவ்வாறு திரும்ப வருகின்றன என்பதைக் கவிஞனுடைய கற்பனையில்தான் காணவேண்டும்.

"... ... அகில்
சேறு அணிந்த முலைத்திருமங்கை தன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டவே"

அடடா! என்ன அற்புதம். கடலில் மூழ்கு முன்பாக சிவபெருமான் திருக்கோலத்தில் காட்சியளித்த மேகங்கள்,

திரும்பி வருகையில் காக்கும் கடவுளான திருமாலின் கோலத்தில் அல்லவா வருகின்றன. நீலமேகச் சியாமளன், கருஞாயிறு, கண்ணன் என்றும் கரும்தெய்வம் என்றெல்லாம் புலவர்கள் திருமாலைக் குறிப்பிடுவார்கள். அவனது நிறம் கருப்பு நிறம். பரமபத வாசனான இறைவன் பரந்தாமன், அடியவர்களுக்காகத் தன்நிலையில் இருந்து கீழே இறங்கிவந்து (அவதாரம் செய்து) துயர் களைந்து அருள்பாலிக்கிறான் அல்லவா? அதுபோல இம்முகிற் கூட்டங்களும் மனித சமுதாயத்திற்கு நன்மை செய்யும் பொருட்டுத் தங்களின் நிறத்தைத் திருமாலின் நிறத்திற்கு மாற்றிக்கொண்டு விட்டன என்று சமத்காரமாகக் கவிஞன் பேசுகிறான். பாட்டை முழுமையாகக் கேட்டால் சுவையை நன்றாக அனுபவிக்க முடியும்.

நீறணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறு அணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து அகில்
சேறு அணிந்த முலைத்திருமங்கைதன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டவே"

வெள்ளை மேகங்கள், கருமை நிறக் கூட்டமாக மாறியதைக் கம்பனின் கைவண்ணம் எத்துணைப் பாங்காக தீட்டுகிறது பாருங்கள். தொடர்ந்து மற்றொரு பாடலையும் காண்போம்.

இவ்வாறு திருமாலின் வண்ணமாய்க் கருத்த மேகங்கள் எங்கு சென்றன? ஏன் சென்றன? எதைப் பொழிகின்றன? என்பதை மிகவும் ரசமாகக் கம்பன் கதை போலச் சித்திரித்துக் காட்டுகிறான்.

மலைகளைப் பொதுவாக ஆண் இனத்தோடு வைத்துப் பேசுவது கவிஞர்கள் மரபு. மலையரசன் என்று தான் சொல்லுகிறோம். மலையிலிருந்து உற்பத்தியாகி

வரும் ஆற்றினை மலையின்மகள் என்றும் கூறுவது வழக்கம். ஆற்றின் சங்கமம் கடலில் இருப்பதாலே கடல் மலையின் மகளாகிய நதிக்குக் கணவன் என்பது நிலை. ஆக கடலுக்கு மலை, மாமன் முறை ஆகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் நாம் கம்பன் கவிதையைக் காண வேண்டும்.

காய்கதிர்ச் செல்வன் கதிரவன் கிரணங்களால் பூமியைத் தகித்துக் கொண்டு இருக்கிறான். நிலத்தைவிட மிக உயர்ந்து கதிரவனுக்கு அருகில் இருக்கும் மலைகளின் மீது வெம்மை கூடுதலாகவே இருக்கும். கடினப் பாறைகள் நிறைந்து காணப்படும் மலைகளில் எப்போதும் வெம்மை அதிகமாக இருக்கும்.

"ஐயோ! சூரியனின் கிரணம் தாங்காமல் நமது மாமன் வெம்மையால் துன்பப்படுகிறானே" என்று அங்கலாய்த்துக் கொள்கிறதாம் கடலாகிய மருமகன்.

"பானுவால் நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்"

எப்படித் தொடங்குகிறான் பார்த்தீர்களா? இந்த வெம்மையைத் தணிக்க ஏதாவது செய்யவேண்டுவது நமது கடமை அல்லவா? என்று எண்ணுகிறான் கடலரசன். தன்மீது தவழ்ந்து விளையாடிக் கொண் டிருக்கும் முகிற்கூட்டங்களை, மேலே சென்று மலையைச் சுற்றி வளைத்துக்கொண்டு, மழை பெய்து வெம்மையைத் தணிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறான் கடலரசன்.

வெண்ணிற மேகங்கள் கடலரசனின் கட்டளையை ஏற்று, கடலில் புகுந்து முகந்து, கருமை நிறம் பெற்று, மலைமீது சென்று பெருமழையை பெய்வித்து மலை யரசனின் வெம்மையைத் தணிக்கின்றனவாம்.

தனது அன்பு மனைவியின் மீதுள்ள அளவற்ற பாசத்தால் மாமன் வெப்பத்தில் வாடி வதங்கிவிடக் கூடாது என்று எண்ணி அவனைக் குளிர்ந்த நீரினால் குளிப்பாட்டுகிறானாம் கடலரசனாகிய மருமகன்.

"அன்பின் ஆட்டுதும் என்று அகன்
குன்றின் மேல் பம்பிமேகம் பரந்தது"

என்று கவிஞன் பாடலை முடிக்கிறான்.

பாடலைப் பூரணமாகக் கண்டால் உண்மையிலேயே நமக்கும் ரசனை வந்துவிடாதா என்ன?

"பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பின் ஆட்டுதும் என்று அகன்குன்றின்மேல்
இம்பர்வாரி எழுந்தது போன்றவே"

குயிலினத்தின் திருமணத்தைக் கண்டு களித்த நாம் அன்னக்குஞ்சுக்கு நடக்கும் தாலாட்டு வைபத்தையும் காணத்தானே வேண்டும். வாருங்கள் மீண்டும் வயல் வெளிக்கே போகலாம்!

கண்களுக்கு எட்டிய தூரம் வயல் பரப்பிலே செழித்து வளர்ந்து பசுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் செந்நெல் பயிர்களை எப்போதும் பார்த்துக் கொண்டே இருந்தால் என்ன என்ற அளவிற்கு மனதை அள்ளும் காட்சியாக இருக்கிறது. நிலமடந்தை பச்சைப் பாவாடை உடுத்தியிருப்பது போன்ற தோற்றப் பொலிவோடு வயல்கள் காட்சி தருகின்றன.

இந்த வயலிலே ஒரு பெண் அன்னநடை போட்டுக் கொண்டு இருப்பதைக் காண்கிறோம். எப்படிப்பட்ட

நடை தெரியுமா? பொதுவாகப் பெண்கள் நடந்து செல்லும் அழகைத்தான் அன்னநடை என்று சொல்லு வார்கள். கம்பனே சீதையின் நடையை அன்னத்தின் நடைக்கு ஒப்பிட்டுப் பஞ்சவடியிலே சொல்லுகிறான்.

"ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதையின்நடையை நோக்கி சிறியதோர் முறுவல் செய்தான்"

என்று. ஆனால், இங்கே அதற்கு நேர்மாறாகச் சேல் என்ற கரிய மீனைப்போன்று, ஒளிநிரம்பிய கண்களையுடைய பெண்டிரைப்போல— அவர்கள் நடந்து செல்லுகிற அழகைப் பழிக்குமாப் போலே— இந்தப் பெண் அன்னம் நடை பயிலுகிறதாம்.

"சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்"

பெண்களின் கால்கள் செம்பஞ்சுக் குழம்பு இட்டு இட்டுச் சிவந்து காணப்படுகின்றன. அன்னத்திற்கோ இயற்கையாகவே கால்கள் சிவந்து இருக்கின்றன.

அருகில் இருக்கும் தாமரைத் தடாகத்தில் விரிந்து, பரந்து கிடக்கும் தாமரைமலர்கள் மீது – மெத்தென்று இருக்கும் தாமரைப் படுக்கையின் மீது – குஞ்சுகளைக் கிடத்தி விட்டு அன்னம் கவலையற்று நடைபயில்கிறதாம்.

"மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை"

தனது குஞ்சுகள் தனியாகக் கிடந்து, தாமரைப் படுக்கையில் இருப்பதைப் பற்றிக் கவலைகொண்ட தாகவே தெரியவில்லை அன்னத்திற்கு. பசிக்கு உணவு கட்டாயம் இல்லை போலும்! ஆகவேதான் குஞ்சுகளை தனியே விட்டுக் கரையிலே நடைபயில்கிறது. நடை போட்டுக்கொண்டே தடாகத்தில் நிகழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு காட்சியையும் கண்டு மகிழ்ச்சி கொள்கிற தாம் அன்னம்.

அன்னக்குஞ்சுகள் இருக்கும் தாமரைப் பொய்கை யிலே எருமை ஒன்று வந்து இறங்கி சேற்றிலே உழன்று கொண்டு இருக்கிறது. சேறு இருக்கும் இடம் தானே அதற்குச் சொர்க்கம். மெல்லக் காற்று வீசுகிறது. தடாகத்திலே இருக்கும் தாமரை மெல்ல அசைந்து கொடுக்கிறது. அந்த மெல்லிய அசைவிலே, பொய்கையில் உழன்றுகொண்டு இருக்கும் எருமையின் மடிமீது சற்றே தாமரை மோதுகிறது. பால் சுரக்கும் மடியில் மோதல் கண்டவுடனே– தான் விட்டுவிட்டு வந்த கன்றின் நினைவு வந்து விடுகிறது. மேய்ச்சலுக்காக வந்தோமே, அங்கே கன்று பாலின்றி தவித்துக் கொண்டிருக்குமே என்று எருமை எண்ணத் தொடங்கியதாம். அந்நினைப்பிலேயே மூழ்கிக்கிடந்த எருமையின் மடியிலிருந்து தானாகவே பால் சுரக்கிறது.

"காலுண்ட சேற்று மேதி கன்றுஉள்ளி கனைப்பச் சோர்ந்த..."

எருமையின் மடியில் இருந்த பால் அங்கே விழுகிறது. சற்று முன்னாலே தாமரை மலர் மெல்லக் காற்றிலே அசைந்து, எருமையின் மடியில் பட்டதே– அந்த மலரில் தன்னையும் மறந்து அண்ணாந்து வாயைப் பிளந்து கொண்டு இருக்கும் அன்னக்குஞ்சுமீது சொரிகிறது. அவ்வாறு சுரக்கும் பாலை அமுதமாக அவை சாப்பிடு கின்றன. இவ்வாறு சுரந்த பாலைச் சாப்பிட்டுவிட்டு மெல்லக் கண் வளருகிறது அன்னக் குஞ்சுகள்.

தொட்டிலில் இடப்படும் குழந்தை தூங்குவதற்குத் தாலாட்டு தேவை என்பதை நாம் அறிவோம். இங்கே தாமரைத் தொட்டிலில் பால் உண்ட அன்னக்குஞ்சுகள் உறங்க இருக்கும் வேளையில் இனிமையான தாலாட்டு இசைக்கப்பெறுகிறது. தடாகத்தில் இருக்கும் பச்சைத்

தேரைகள் இத்தாலாட்டைப் பாடுகின்றன. உண்ட மயக்கமும், இனிய தாலாட்டும் சேர்ந்தால் பின் வேறு எந்தச் சுகம்தான் வேண்டும்? அன்னக்குஞ்சுகள் கண் களை மூடி உறக்கத்தில் ஆழ்கின்றன. இந்தக் குஞ்சு களுக்குத் தான் என்ன உபசாரம். எவ்வளவு பராமரிப்பு. இவ்வளவும் அந்த மருதநிலத்திலே நடைபெறுகிறது.

"பாலுண்டுதுயில பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை"

என்று பாட்டை நிறைவு செய்கிறான் கவிஞன்.

"சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்று உள்ளி கனைப்பச்சோர்ந்த
பாலுண்டுதுயில, பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை"

இப்பாடலில் அன்னத்திற்குப் பால் சுரந்தது எருமைகள் என்று பார்த்தோம். இதே எருமைக் கூட் டங்கள்தாம் செந்நெற் பயிர்கள் செழித்து வளர்வதற்கும் காரணமாகவும் இருந்தன என்று கம்பன் கூறுகிறான்.

முன்னே நாம் கண்ட வயல்வெளிதான் இவையும். இருப்பினும் தோற்றத்திலே ஒரு மாறுதல். கண்ணுக்கு விருந்தாகப் பச்சைபசேல் என்று காட்சியளித்த வயல்கள் இப்பொழுது கருமைநிறமாகத் தோற்றமளிக்கின்றன.

ஈரப்பசை மிகுந்த கருமுகில்தான் இந்த வயல் வெளியை மறைத்துக்கொண்டு நிற்கிறதோ என்று எண்ணும் அளவிற்குக் கருமைநிறமுடைய எருமைகள் வயற்பரப்பிலே வந்து நிற்கின்றன. வந்துநின்ற எருமை களுக்குத் தங்கள் கன்றுகளின் நினைப்பும் இங்கே வந்து விடுகிறது. அன்பின் மிகுதியாலே, தாய்ப் பாசத்தினாலே அவைகளின் மென்மையான மடியில் இருந்து,

முலைக்காம்புகளிலிருந்து பால் வழிகிறது. பெருமழை பெய்தால் தாரை தாரையாக மழைநீர் விழுமே அது போன்று பால் வழிகிறது. வழிந்த பால் வயல் வெளி களிலே தேங்கி நிற்கிறது. பாலின் வளத்தில்– நிலத்தின் வளம் உயருகிறது. செந்நெல் ஓங்கி உயர்ந்து தழைத்து வளருகிறது என்று கம்பன் வர்ணனை செய்கிறான்.

"ஈரநீர்படிந்து இந்நிலத்தே சில
கார்கள் என்னவரும் கருமேதிகள்
ஊரில் நின்ற கன்று உள்ளிட மென்முலை
தாரைகொள்ளத் தழைப்பன சாலியே"

இச்செய்தியை நாம் காணும்பொழுது நமக்கு திருப் பாசுரத்தில் வரும்

கனைத்தெழும் கற்றெருமைக் கன்றுக்கு இரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர"

என்ற அடிகள் நினைவிற்கு வரத்தானே செய்யும். இக் கருத்தை எவ்வளவு சுவையாகக் கம்பன் தனது காவியத்திலே கையாண்டு இருக்கிறான் என்பதைக் காணும்போது கம்பனுடைய கவிதைப் பெருவெள் ளத்திலே நாமும் கலந்து ஓடிக்கொண்டே அல்லவா இருக்கிறோம்!

குயில் பெண்ணின் திருமணத்தையும், மயிலினத்தின் ஆட்டத்தையும் வண்டுகளின் ஓசையையும், சோலைகளின் அழகையும், பார்த்துக்கொண்டே வந்த நமக்கு இதோ ஒரு ராஜசாலை, தர்பார் மண்டபம் என்று சுட்டிக் காண்பிக்கிறான் கம்பன். சுட்டிக்காண்பித்த இடத்தை நோக்கினால்– அழகானதொரு கொலுமண்டபத்தின் தூண்கள் போல இருமருங்கிலும் மரங்கள் சீராக

வளர்ந்து, காட்சி தருகின்றன. மரங்களுக்குப் பின்னணியில் நீலநிற விதானம் தெரிகிறது. முன்பக்கத்தில் நீராடும் குளம் ஒன்று இருக்கிறது. நீலநிற விதானம் கொலு மண்டபத்தில் இருக்கும் திரைச்சீலை போல் காட்சி அளிக்கிறது. அந்த மண்டபத்தின் நடு மையமான இடத்திலே மயில்கள் தங்கள் வண்ணத் தோகைகளை விரித்துப் பரதம் ஆடிக்கொண்டிருக்கின்றன.

"தண்டலை மயில்கள் ஆட"

முன்பக்கத்தில் இருக்கும் குளத்தில் உள்ள தாமரைகள் தங்கள் இதழ்களை விரித்துப் பரப்பி, நிமிர்ந்து நிற்கின்றன. தூரத்திலே இருந்து பார்த்தால் சுடர்களோடு, ஒளிபரப்பிக் கொண்டு இருக்கும் விளக்குகளைப் பெண்கள் தங்கள் கைகளிலே தாங்கிக் கொண்டு இருப்பதைப் போல தோன்றுகிறது.

"தாமரை விளக்கம் தாங்க"

கார்முகிலைக் கண்டுதானே மயில்கள் நடனம் ஆடும். ஆடும் ஆட்டத்திற்குத் தக்க பக்கவாத்தியம் வேண்டுமல்லவா? அதுவும் மத்தளம் இல்லாவிட்டால் நாட்டியம் ரசிக்கும்படியாக இராதே? தீம் தகிட, தீம் தகிட என்ற சொற்கட்டு, தாளக்கட்டு இருந்தாலே நடனத்தில் ரசனை களைகட்டும். இதோ நாங்கள் இந்த நடனத்திற்கு மத்தளம் வாசிக்கிறோம் என்று கருத்த மேகங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து முழவின் ஓசையை எழுப்பி வாசிக்கின்றன.

"கொண்டல்கள் முழவின் ஓங்க"

மயிலாட்டம், மேகங்களின் மத்தள ஒலி, தாமரைப் பெண்களின் அலங்கார விளக்கு அணி– இவையெல்லாம் இருந்தால் போதுமா என்ன?

ராஜசபை, அதுவும் தர்பார் என்றால் மக்கள் கூட்டம் வேண்டுமல்லவா? நடனத்தைக் காண ரசிகர் கூட்டம் வேண்டுமே! தாமரைப் பொய்கையிலே இருக்கும் குவளை மலர்கள் தங்கள் தலைகளை அசைத்தவாறே நடனத்தை ரசித்துப் பார்க்கின்றன. கண்களை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

"குவளை கண்விழித்து நோக்க"

ஒரே விதமான நடனம் என்றால் யாருக்குமே அலுப்புத் தட்டத்தானே செய்யும். ஆகவேதான் பலவிதமான காட்சியமைப்புகளைக் கொண்ட பலவகை நடனங்களை ஆடுகிறார்கள் மேடையிலே. இந்த ராஜதர்பாரிலேயும் காட்சி மாற்றம்– அரங்க மாற்றம்– நடைபெறுகிறது.

ஒரு காட்சி முடிந்ததும் திரையிட்டு, அடுத்த காட்சிக்குத் திரை விலக்குவது போன்று தடாகத்தில் உள்ள நீரின் அலைகள் கரையில் வந்து மோதி பின் செல்லுவது உண்மையிலேயே திரைச்சிலை மாற்றம்போல தோன்றுகிறது நமக்கு.

"தெண்திரைஎழினி காட்ட"

யாழ் இசை என்றாலே காதுக்கு மிகவும் இனிமையாக இருக்கும். அதுவும் மகரயாழின் நரம்புகளின் ஒலிகள் என்றால் கேட்கவே வேண்டா. அவ்வளவு இனிமை. கேட்போர் தம்மைத் தன்மயமாக்கிவிடும் சிறந்த கருவி மகரயாழ். திரைக்குப்பின்னால் இருந்துவரும் ஒலியைத் தான் கேட்க முடிகிறதே ஒழிய யார் வாசிக்கிறார்கள் என்று தெரியவில்லை. வண்டாகிய பெண்கள் இனிது பாடுகிறார்கள். அவர்கள் பாடும் பாட்டு மகரயாழிலிருந்து எழும் நாதத்தைப்போல் இருக்கிறது.

இந்தச் சுவையான காட்சிகளைக் குவளைகள் கண் விழித்து நோக்குகின்றன.

"தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிதுபாட"

ராஜதர்பார் நடந்துகொண்டிருக்கிறது. இந்த தர்பாரில் யார் அரசன் என்று பார்க்கத் தோன்றுகிற தல்லவா?

இவ்வளவு கோலாகலமான காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டு கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு இருக்கிறான் மருதம் என்ற அரசன். இந்நிலத்தின் சொந்தக்காரன் அவன்தானே! எவ்வளவு அற்புதமான படைப்பு. உண்மையிலேயே செழிப்புற்ற மருதவளநிலம் எவ்வாறு இருக்கிறது என்பதை எவ்வளவு அழகாக ஒரு சிறிய இயற்கைக் காட்சியின் மூலம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான் கம்பன்.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம்தாங்க
கொண்டல்கள் முழவின்ஓங்க குவளைகள் கண்விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்ட, தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ!"

இறுதியாகக் கம்பனின் கைவண்ணத்தில் வெள்ளத்தைக் காணலாம் வாருங்கள்.

மலையைக் காண்பித்த கம்பன்– மேகத்தைக் காண்பித்த கம்பன், மழையாகப் பொழிந்து வளம் நிறைந் ததைக் காண்பித்த கம்பன், இப்போது மலையிலிருந்து வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றினை வர்ணிக்கிறான்.

வெள்ளம் பெருகி, சுழித்துச் சுழித்து நுங்கும் நுரையு மாக இருகரைகளையும் அரித்தவாறு பெருகிப் புரண்டு

வேகமாக ஓடுகிறது. இக்காட்சியைக் கம்பன் மூன்றுவித மாகக் காண்கிறான்— இல்லை— நமக்குக் காண்பிக்கிறான்.

முதலாவதாக— விலைமாதராக வெள்ளம் இருக்கிறது என்று அடித்துப் பேசுகிறான் கம்பன். நாட்டை வளப்படுத்தும் ஆற்று வெள்ளத்தையா விலைமாதருக்குக் கம்பன் ஒப்பிடுகிறான் என்ற வியப்பு நமக்கு தேன்றுவது இயற்கைதானே? ஏன் அவ்வாறு 'விலைமாதர்' என்று கம்பன் சொன்னான். காரணம் இருக்க வேண்டுமே— அதைக் காணுவோம்.

வெள்ளம் மலையுச்சியில் இருந்து புறப்பட்டு மிகுந்த வேகத்தோடு அடிவாரம் நோக்கி ஓடிவருகிறது. தான் மட்டும் அசுரவேகத்தில் ஓடி வருவது அல்லாமல் மலை களில் இருக்கும், உண்டாகும் பொருள்கள் அனைத்தையும் வித்தியாசம் இல்லாமல், உருட்டி, ஒட்டிக்கொண்டு— தன்னோடு இழுத்துக்கொண்டு வருகிறது. அட! இந்த வெள்ளம் தான்பிறந்த இடத்தில் சிறிது கூட நில்லாமல் அல்லவா வருகிறது? எவ்வளவு கருமித்தனம். கொஞ்சம் கூட இதற்குப் பரிவு என்பது கிடையாதோ? ஆம்! எப்படி இருக்க முடியும். இதற்கு ஒரு உவமைதான் கம்பனுக்குப் பளீரென்று தோன்றிற்று.

விலைமாது, தன்னிடத்து வந்த காமுகனை, வந்த வுடன் இனிய முகத்தோடு வரவேற்று உச்சிமோந்து, மார் போடு இறுக அணைத்து, அவர்கள் பாதம் கழுவி இன்பம் கொடுப்பார்கள். அதோடு நின்றுவிடுகிறார்களா என்ன? அந்தக் காமுகனிடம் இருப்பதையெல்லாம் அறவே பறித்துக்கொண்டு பின்னர்த் திரும்பிக்கூடப் பார்ப்ப தில்லை அல்லவா? இக்காலப் பாட்டொன்று நினைவிற்கு வருகிறது. "கையில் காசுஇல்லாதவன் கடவுளானாலும்

கதவைச் சாத்தடி" என்பது அந்தப் பாடல். அதுபோல இந்த வெள்ளம் மலையின்மீது உள்ள வளங்களை யெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு வந்துவிட்டுப் பின்னர் திரும்பிப் பார்ப்பதுகூட இல்லை என்று கூறு கிறான் கவிஞன். பாடல் எவ்வளவு சுவையாக இருக்கும் என்பதை நீங்கள் படித்து மகிழுங்கள்.

"தலையும் ஆகமும் தாளும்தழீஇ, அதன்
நிலைஇலாது, இறை நின்றது போலவே
மலையில் உள்ள எல்லாம் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை ஒத்தது– அவ்வெள்ளமே"

அடுத்த பாடலில் வணிகனாகக் காட்சியளிக்கிறது அந்த வெள்ளம் மலையிலிருந்து கீழே இறங்கி பெருகிச் சமவெளியை வந்து அடைகிறது. ஏற்கெனவே மலையில் கிட்டிய பொருள்கள்– இரத்தினம், பொன், மயில்இறகு, யானைத் தந்தங்கள், சந்தனக் கட்டைகள், ஈடு இணை யில்லாத மாலைகள் இவைகளைக் கொண்டு செல்கிறது. இதைப் பார்த்தால் வியாபாரம் செய்வதற்காக பல்வேறு விதமான பொருள்களைத் தன்னிடத்துச் சுமந்து கொண்டுவரும் வணிகரை ஒத்திருக்கிறது என்று கம்பன் கூறுகிறான்.

"மணியும் பொன்னும் மயில்தழைப்பீலியும்
அணியும் ஆனைவெண் கோடும் அகிலும் தன்
இணைஇல் ஆரமும் இன்ன கொண்டு ஏகலான்
வாணிக மக்களை ஒத்தது, அவ்வாரியே"

கடைசியாக, அது வானவில்லை போன்று இருக்கிறதாம்! கவிஞனின் கற்பனை எவ்வளவு எட்டாத உயரத்திற்கே போய்விட்டது பாருங்கள்.

விலைமாதரைப் போல என்று சொன்ன கவிஞன், பின்னர் வணிகர் என்று சொன்னான். இப்போதோ வானவில் என்றல்லவா சொல்கிறான். இதிலே எது உண்மை? நமக்குச் சந்தேகம் எழுகிறது. கவிஞன் கூறுகிறான்— சந்தேகம் வேண்டா— எல்லாமே— மூன்றுமே உண்மைதான் என்கிறான்.

பெருகிவரும் வெள்ளத்தில் பலவித நிறத்தோடு கூடிய பூக்கள் மிதந்து கொண்டு வருகின்றன. பூக்களி லிருந்து சிந்திய மகரந்தப் பொடிகள் வெள்ளத்தின் மேற் பரப்பில் கோலம் செய்தாற்போன்று மிதக்கின்றன. எத்தனை, எத்தனையோ தேன்கூடுகள் வெள்ளத்தில் அடித்துவரப்படுகின்றன. அவற்றில் இருந்த தேன் ஆற்றிலே கலக்கிறது. பூக்களின் தேனும் கலந்து செல்லு கிறது. மஞ்சள்நிறப் பொன், பசும்பொன்னும் வெள்ளப் பெருக்கில் வருகிறது. இவ்வளவு வண்ணங்களும் சேர்ந்து, ஆற்று வெள்ளம் வளைந்து வளைந்து செல்லுவதால், வானவில்லின் தோற்றப் பொலிவைப் பெற்றுவிடுகிறது என்று கவிஞன் தனது கற்பனையை ஓடவிடுகிறான்.

> "பூ நிரைத்தும், மென்தாது பொருந்தியும்
> தேன் அளாவியும் செம்பொன் விராவியும்
> ஆனை மாமத ஆற்றோடு அளாவியும்
> வானவில்லை நிகர்த்தது – அவ்வாரியே"

எனப் பாட்டை நிறைவு செய்துவிடுகிறான் கம்பன்.

எப்படி இருக்கிறது கம்பனின் இயற்கை வர்ணனை. இது கவிஞனின் கற்பனை ஆறு. அந்த ஆற்று வெள்ளத்திலே நாமும் இழுத்துச் செல்லப்படுகிறோம். நமது உள்ளமும் இழுத்துச் செல்லப்படுகிறது. சொல்லும்

பாங்கிலேயே கலையழகு சொட்டுகிறது. கருத்து மிளிர்கிறது. தத்துவம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

கம்பன் இதயம் ஒரு கவிதைக்கடல்; அமுதப் பெருக்கு; உணர்ச்சிப் புயல். அமுதக்கடலில் மோதும் போது சிதறும் திவலைகள்தாம் அவன் நமக்கு அளிக்கும் பேரமுதம். கம்பன் கவியின் ஒவ்வொரு வரியிலும் ஆழ்ந்த பொருள் கிடக்கிறது. ஒருமணி நேரமன்று– நாள் முழுவதுமே எண்ணி எண்ணி மகிழலாம்.

ஒரு பாட்டில் ஒரு அடியில் எவ்வளவு சுவையைக் கொடுத்துவிட்டான். தமிழுக்கு அவன் அளித்த ஒப்பற்ற மணிமகுடம் இராமகாதை என்னும் இராமாவதாரம். அதிலே ஒரு சிறு துளி இயற்கை வர்ணனை. அதிலும் ஒரு சிறு திவலையைத்தான் இதுவரை நாம் கண்டோம். கம்பன் என்ற கவிதைப் பெருங்கடலுக்குள் நுழைந்து விட்டால் எண்ணிடலங்காத செல்வங்களை நாம் காணமுடியும்.

கம்பன் என்னும் மாமேதைக்கு நாம் தலைவணங்கி அவனைப் போற்றுவோம். பாராட்டுவோம்.

■

2. கவிதைச் சுவைநலம்

பன்னிரண்டாயிரம் பாடல்களை, எழுதிய கம்பன், தன்னுடைய கவித்திறனை இராமவதாரத்தில் முழுவதுமாகக் காட்டிச் சென்றிருக்கிறான். கம்பனின் கவித்திறமையைப் பற்றி மகரிஷி வ.வே.சு. அய்யர் அவர்கள் இவ்வாறு சொல்லுகிறார்கள்: "கம்பன் தன் கதையை காவியமாகவே கருதி, சம்ஹிதைகாரர்கள் சொல்லுவது போலச் சொல்லாமல், சுவைபட வகுத்தலையே தன் தர்மமாகக் கொண்டு தன் காவிய மாளிகையைக் கட்டியுள்ளான்."

வித்துவான் சு. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் பன்மொழி அறிஞர். கம்பனில் தோய்ந்து எழுந்தவர். அவர் 1861 ஆம் ஆண்டில் எழுதிய ஒரு கட்டுரையில், கம்பனுடைய மேதாவிலாசத்தைப்பற்றி எழுதும்பொழுது, "சொல்லும் கதைகளின் போக்கானது எளிமையும், பெருமையும், தெளிந்த சொல் ஓட்டமும், தூய்மையும் கொண்டு பொலிகின்றது. அவர் எடுத்துக்காட்டும் உபாக்கியானங்களிலெல்லாம் நிறைந்த உபதேசங்களும், ஆறுதல்களும், ஜெருசலத்தில் டாஸோ சொல்லியிருப்பதைக் காட்டிலும் அதிகப்பட்டிருக்கின்றன. அவரது சம்பாஷணைப் பாகங்களில் காட்டப்பெற்றிருக்கும் விரிவுரைகளும், இயற்கை வருணனை விஸ்தரிப்புகளும் அவரது உயர்ந்த கவி சாதுர்யத்தால் பிரகாசித்து வர்ஜிலைவிடப் பூரணத்துவத்தைக் காட்டி நிற்கின்றன. நாயகன், நாயகி, உபநாயகன், உபநாயகி முதலான

பாத்திரங்களின் குணங்களை எடுத்துச்சொல்லும் கவனத்தைக் காட்டிலும் அதிகமான கவனத்துடன் உண்மைக் குறிப்பாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

"நகர சம்பந்தமான வர்ணனைகளில் கம்பர், ஒதிஸியத்தில் ஹோமர் சொல்லியிருப்பதைக் காட்டிலும், அழகாகவும் சுலப நடையாகவும் சொல்லிப் போகிறார். எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்து தேர்ச்சிபெற்ற கற்பனா சக்தியுடைய எந்தப் புலவராலும், எந்த விவேகியாலும் எந்த ஞானியாலும் சொல்ல முடியாத பிரதேசங்களிற் சென்று, ஆராயமுடியாதவற்றை ஆராய்ந்து, எடுக்கமுடியாத புதையல்களை எடுத்து உலகோர்க்குத் தந்து, பல்வேறுபட்ட பக்குவமுடைய எல்லோருடைய இதயங்களையும் விரிவுறச் செய்து, அவர்க்கு முன்னேற்றத்தை அளிப்பதற்காகச் சிறந்ததொரு வரத்துடன் தோன்றியவராகவே கம்பர் காணப்படுகிறார்" என்று வியந்து சொல்லியிருப்பது காணத்தக்கது.

நமது காலத்திலே வாழ்ந்த புலவர் பெருமக்கள் எல்லோரும் கம்பன் காவியத்திலே தோய்ந்து வந்தவர்கள் என்பதை, பேராசிரியர் ரா.பி. சேதுபிள்ளை, பி.ஸ்ரீ., டி.கே.சி., வெள்ளகால் சுப்ரமண்ய முதலியார், அ.சீ.ரா. அ.ச.ஞா., கி.வா.ஜ., கம்பனடிப்பொடி போன்றவர்களை வைத்து நிதர்சனமாகச் சொல்ல முடியும். எனவே கம்பனுக்கு முன்பும் பின்பும் இதுபோல ஒரு காவியப் படைப்பை, கவிதைச் சுவையை, சுவைநலத்தைக் கண்டவர் இலர். எனவேதான் கம்பனுடைய இராம காதையை, ஒரு காண்டம், ஒரு படலம், ஒரு பாட்டு என்று அதிலே தோய்ந்து தோய்ந்து முத்து எடுத்தவர்கள் பலர். எந்த ஒரு பாடலை எடுத்துக்கொண்டாலும் அதிலே ஒரு நயம், ஒரு செய்தி, கற்பனை என்பனவற்றைக் காண

இயலும். யுத்தக் காண்டத்திலே கம்பனுடைய போர்க்கள வர்ணனையைவிட இனி யாராவது சொல்ல இயலுமா என்பதை நோக்க வேண்டும். ஒரு இடத்திலே சொன்ன சொல்லை மற்றொரு இடத்திலே போடாமல் புதிது புதிதாகச் சொற்களை அடுக்கிக்கொண்டே போகும் அவனது கவிதா சன்னத்தம் நம்மையெல்லாம் பிரமிக்க வைக்கிறது.

இதேபோல் கிட்கிந்தா காண்டத்திலேயும் சில பாடல்கள் நம்மை வசப்படுத்தி விடுகின்றன. பாடலில் சொன்ன செய்திகளும், அதனை முன்பின் இணைத்துப் பார்க்கும் பொழுது தடையறாத கதையின் ஓட்டத்தையும் காண முடிகிறது. அவற்றுள் மூன்று பாடல்களை இங்கு பார்க்கலாம்.

வாலியின் மரணத்திற்குப் பிறகு, சுக்ரீவனுக்கு முடிசூட்டி, ஆட்சியை எவ்வாறு செய்யவேண்டும் என்பதை அரசரீதியாக அறிவுறுத்தினான் இராமன். "செய்வன செய்தல், யாண்டும் தீயன சிந்தியாமை, வைவன வந்தபோதும் வசை இல இனிய கூறல், மெய்யன வழங்கல்" ஆகியவை அறத்தோடு இயைந்தவை. அவற்றை நெறிதவறாமல் காத்து அரசோச்சி, மாரிக்காலம் கழிந்த பின், கடல் போன்ற உன் பெரும் சேனைகளோடு நீ வருவாயாக" என்று கூறி வழியனுப்புகிறான் இராமன். ஆனால் சுக்ரீவனோ "கருத்தடங் கண்ணினாளை நாடல் ஆம் காலம் காறும், இருந்து அருள்தருதி எம்மோடு என்று" அடி இணையின் வீழ்ந்தான். தன்னோடு வந்து தங்கும்படி வேண்டுகிறான். இராமனோ வனத்தில் அல்லாமல், அரசர்கள் வாழும் அரண்மனையில் நான் இருப்பது, நான் ஏற்றுக்கொண்ட சத்தியத்தை மீறுவதாகும். ஆகவே வர இயலாது, என்று கூறி, மீண்டும் "நான்கு மாதங்கள்

கழித்து உன் பெருஞ்சேனையோடும் வருக" எனச் சொல்கிறான்.

கார்காலம் ஆரம்பமாகிறது. இயற்கையன்னையின் எழில் நடனம், எங்கும் பூத்துக்குலுங்கி, கொஞ்சித் தவழ்ந்து விளையாடியது. காலத்தின் எழில் கோலமும், சீதையைப் பிரிந்த இராமனை விரகதாபத்தால் வருத்தியது. இளையவன் தன் ஆறுதல்மொழிகளால் அவனது காயத்தை ஆற்றுகிறான். மாரிக்காலம் கழிந்து சொன்ன படி சுக்கிரீவன் வராமைகண்டு, "நன்றி கொன்று, அருநட்பினை நார்அறுத்து, ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரைபொய்த்துளார்களைக் கொல்லுதல் குற்றமாகுமோ, ஆகாதுதான். எனவே, நீ சுக்கிரீவனிடம் இதனைத் தெரி வித்து வருவாயாக" என இலக்குவனை அனுப்புகிறான்.

கோபத்தோடு சென்ற இலக்குவனைக் கண்ட வானர வீரர்கள் அச்சம் கொண்டு நாற்புறமும் ஓடுகிறார்கள். இந்நிலையில் இலக்குவனை நேர்எதிர்கொள்வது தகாது என எண்ணி அவனை எதிர்கொள்வதற்காக– சீற்றத் தைத் தணிப்பதற்காக– தாரையை வேண்டி இலக்குவன் முன் கொண்டுவந்து நிறுத்துகிறான் அனுமன்.

வானர மகளிர்குழாத்துடன் தாரை இலக்குவன் முன் நிற்கிறாள். தாரையின் தோற்றம் இலக்குவனது சினத்தைத் தணித்தது. மங்கல அணியைத் துறந்து, மணி அணி நீக்கி, மலர்நீக்கி, வெள்ளை ஆடை உடுத்து வந்து நின்ற தாரை யைக் கண்ட இலக்குவன் தன் தாயரை நினைந்து நைந்தான். நயனங்கள் பனிப்ப நின்றான்.

இந்நிலையின்தான் சொல்லின் செல்வனான அனுமன் இலக்குவன் முன்வந்து நிற்கிறான். "இராமன் சொன்ன சொற்களை நீயும் மறந்துவிட்டாயோ" எனக்

கேட்கிறான். "அந்தமில் கேள்வி நீயும் அயிர்த்தனையோ" என்கிறான். அதற்கு அனுமன் கூறும் பதில்தான் இங்கு சுவைப்பதற்கு உரியது.

"மறந்திலன் கவியின் வேந்தன்
வயப்படை வருவிப்பாரைத்
திறம்திறம் ஏவி அன்னார்
சேர்வது பார்த்துத் தாழ்ந்தான்
அறம்துணை நுமக்குத்தான் தன்
வாய்மையை அழிக்கும் ஆயின்
பிறந்திலன் அன்றே ஒன்றோ நரகமும்
பிழைப்பது அன்றால்"

என்பது அந்தப் பாடல்.

"கவிக்குலத் தலைவனான சுக்ரீவன், நீங்கள் நினைப்பதைப்போல தான் கொடுத்த வாக்கை மறந்து விடவில்லை. இராம கைங்கர்யத்திற்காக– சீதையைத் தேடுவதற்கான– வானரப் படை, எங்கெங்கு உளவோ அவர்களை அழைத்து வர உரியவர்களை அனுப்பி யிருக்கிறான். அவர்கள் இங்கு வந்து சேருவதை எங்கள் கவிக்குல அரசன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். எனவேதான் சற்று காலம் தாழ்ந்துவிட்டது. "அன்னான் சேர்வது பார்த்துத் தாழ்ந்தான்" என்று மிகவும் சாமர்த்தியமாக அனுமான் சொல்லுவதாகக் கம்பன் குறிப்பிடுவது நயமாக நோக்கத்தக்கது.

மதுவின் போதையிலும் மங்கையின் இன்பத்திலும் தன்னை மறந்து இருந்த சுக்ரீவன்பால் எவ்விதச் சந்தேகமும் இலக்குவன் கொள்ளலாகாது என்ற எண்ணப் பாங்கில், அமைச்சனுக்கே உரிய இலக்கணத்

தோடு, தன் மன்னனையும் காத்து, அவனது சொல்லையும் காத்து, தோழமை கொண்டவர்களான இராமஇலக்குவர் களையும், அமைதிப்படுத்தி, செய்யும் காரியங்களைத் திறம்படச் செய்வதில் வல்லவன் அனுமன் என்பதை இப் பாடல் மிகவும் நன்றாக எடுத்துக் காண்பிக்கிறது. தாரையின் வாயிலாகவும் இச்செய்தியை அனுமன் முன்பே சொல்ல வைக்கிறான். "அயர்ந்தான் அல்லன். வேறுவேறு உலகம் எங்கும் தூதரை விடுத்து, அவ்வேலை ஊறுமா நோக்கித் தாழ்ந்தான். உதவிமாறு உதவி உண்டோ" எனப் பேசுகிறாள் தாரை.

இலக்குவன் வருகை பற்றி அங்கதன் சுக்ரீவனுக்குச் சொல்லும்பொழுது, தாரை சொன்ன சொல்லை நினைவு படுத்தி,

"அதுபெரிது அறிந்த அன்னை, அன்னவன் சீற்றம் மாற்றி
விதிமுறை மறந்தான் அல்லன், வெஞ்சின சேனை வெள்ளம்
கதுமெனக் கொணரும் தூதுவர் அதர்செல்ல ஏவி
எதிர்முறை இருந்தான்..."

எனச் சொல்லி இலக்குவன் கோபத்தைத் தணித்தான் என்று சொல்லுகிறான்.

இக்கருத்தினை உறுதிசெய்யும் வகையில், இலக்குவன் முன்னிலையில், "போயின தூதரின் புகுதும் சேனையை, நீ உடன் கொணருதி, நெறிவலோய்" என்று சொல்லி அனுமனை அனுப்புவதாகவும் கொண்டு செல்கிறான் கம்பன்.

மேலும் இலக்குவனிடத்தில் அனுமன், "தருமத்தைப் பாதுகாப்பதிலே, துணையாகக் கொள்வதிலே, உங்களுக்கு இணையானவர்கள் யாரும் இல்லை. உங்கள் சுற்றம் அவன் சுற்றமாகும். அவன் பகைவனை உங்கள் பகைவ

னாகவும் கருதி அபயமளித்துக் காத்து, அரசையும் அளித்த உங்களுக்குச் சூரியன் புதல்வனான சுக்ரீவன், தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றானாகில், அழிக்கும்படி நேருமாகில், அவன் பிறந்தும் பிறவாதவனே. பிறப்பெடுத்ததின் பயன், வாய்மை தவறாது ஆன்றோர்களுக்குத் துணை செய்வது. அது அறம், அந்த அறத்தினின்றும் தருமத்தினின்றும் விலகிவிடுவார்களானால் அவர்கள் பிறந்து என்ன பயன்? என்று கேட்கிறான் அனுமான். அத்தகைய இழிசெயலை செய்தவர்களுக்கு இழிநரகம் அல்லவா கிடைக்கும்? இம்மையிலே சத்தியத்தைப் பிழைத்த பாவிகளுக்கு மறுமையிலே நரகம்தானே சித்திக்கும். ஆகவே எங்கள் தலைவன் அறத்தை மறந்திலன்; சத்திய வர்த்தைகளை ஒழிந்திலன்; அறத்தின் மூர்த்தியான இராமனுக்கு எவ்வகையாலும் பிழை யுண்டாகும்படி நடந்தானிலன். படைகளை அழைத்து வரக் காலதாமதம் ஆனதே அவன் வரத் தாழ்ந்தது என லாவகமாய்ப் பேசி, தாரை சொன்ன சொற்களை— செய்தியை— இங்கு உறுதிப்படுத்தி, சுக்ரீவன்பால் இலக்குவன் சீற்றம் மீண்டும் செல்லவிடாமல் வேலி யிடுகிறான் அனுமன். எந்த நேரத்திலே எவ்வாறு பேச வேண்டும், என்ன பேசவேண்டும் என்பதை நன்கு அறிந்த அவன் சொல் இப்பாடலில் மெருகிட்டுப் பிரகாசிப் பதைப் பார்க்கிறோம். அனுமன் சொல்லின் செல்வ னல்லவா! இச்செய்தியை வெவ்வேறு இடங்களில் கம்பன் தொடர்புபடுத்திச் சொல்லியிருப்பதும் கம்பன் கவித் திறமைக்கு, சுவைநலனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதனைத் தொடர்ந்து மற்றொரு பாடலைக் காண்போம். கதையின் தொடர்ச்சியைக் கொண்டு காண்பதும் பொருத்தமாக இருக்கும். பறவைகளுக்கு

அரசனாகிய சம்பாதியை வைத்து இந்நிகழ்ச்சி உருவாக்கப் படுகிறது. இங்கும் அனுமனுடைய புகழ், வலிமை இவை மறைமுகமாகப் பேசப்படுகிறது.

அனுமனால் சீற்றம் தணிக்கப்பட்ட இலக்குவனை அரண்மனைக்குக் கூட்டிச் செல்கிறார்கள். அனுமனோடு வரும் இளவலை, வாலி காதலன், மைந்தன் அங்கதன் எதிர்கொண்டு அடிபணிந்து நின்றான். என் வரவை உன் சிறிய தந்தைக்குச் சொல்லுக என்று இளவல் சொல்ல, உங்களை எதிர்கொள்வதற்காக "மங்குல் தோய்கோயில் கொற்றத் கடைத்தலை மருங்கு நிற்கிறான் செல்வன்" என்று விடையிறுத்தான்.

அங்கதன் சுக்ரீவனிடம் சென்று இலக்குவன் வரவைச் சொல்ல, "செய்திலம் குற்றம். நம்மைக் கறுவுற்ற பொருளுக்கு என்ன காரணம்" எனக் கேட்கிறான் சுக்ரீவன். இடையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லி, தாரை வந்து அன்னவன் கோபத்தை மாற்றி, "விதிமுறை மறந்தனன் அல்லன். வெஞ்சினச் சேனை வெள்ளம் கதுமெனக் கொணரும் என்று எதிர்முறை இருந்தான் என்று கூறி சமாதானம் செய்தபின்பு தான் இங்கு வந்தான்" எனச் சொல்லுகிறான்.

தான் இருந்தநிலை அங்கதனால் உணர்த்தப்பட்ட பின்பு, சுக்ரீவன் மிகவும் வருந்துவதாக கம்பன் பத்துப் பாடல்களில் கூறுகிறான். மது உண்பதனால் ஏற்படும் சீரழிவை, வஞ்சம், களவு, மெய், மயக்கம், மரபுஇல் கொட்பு, தஞ்சம் என்று வந்தாரை நீக்கும் தன்மை ஆகியவை கள்உண்ண வரும் கேடுகள்.

"வெய்யதுஆம் மதுவை இன்னம் விரும்பினேன் என்னின், வீரன் செய்ய தாமரைகள் அன்ன சேவடிகள்

என்னைச் சிதைக்கட்டும்" என்று பேசுகிறான். பின்னர் இலக்குவனைக் கண்டு பேசி, அவனோடு இராமன் இருக்கை சென்று வணங்கினான்.

வணங்கிய சுக்ரீவனை இராமன் இறுகத் தழுவிக் கொண்டான் எப்படியென்றால், திருமால் மார்பில் வீற்றிருக்கும் திருமகள் நோகும்படியாக, அவதார புருஷனான இராமன், தன் நீண்ட பொன் போன்ற கைகளால் நெடிது புல்லினான். இதனைக் கம்பன்,

"தீண்டலும், மார்பிடைத் திருவும் நோவுற
நீண்டபொன் தடக்கையால் நெடிதுபுல்லினான்
மூண்டுஎழு வெகுளிபோல் ஒளிப்ப, முன்புபோல்
ஈண்டிய கருணை ஈந்து இருக்கை ஏவியே"

எனப் பாடுகிறான். இராமனுக்கு முன்னர் பொங்கி வந்த கோபம் எங்கோ போய் ஒளிந்துகொண்டதாம். முன் போலவே கருணைவெள்ளம் வந்தது என்பதை இங்கு அழகாகச் சுட்டுவது கவிச்சுவையை எடுத்துக் காட்டுகிறது.

இராமனிடத்திலே தன்பிழையை எடுத்துச்சொல்லி இரங்குகிறான். "நின்பணி மறுத்து வைகி, என்புல்நிலைக் குரக்குஇயல் புதுக்கினேன்" என்றும், "திருந்திழை திறத்தினால், தெளிந்த சிந்தை நீ வருந்தினை இருப்ப, யான்வாழ்வின் வைகினேன்" என்று மனம் வருந்திப் பேசுகிறான். "பரதனை ஒத்தவன் நீ. இவ்விதம் சொல்லக் கூடாது" என இராமன் சொல்லி அனுமன் எங்கே என்று கேட்க, வெளியில் உள்ள வானரசேனைகள் அனைத்தும் வரப்பெற்றவுடன் அனுமனும் நாளை வருவான் என்று சொல்லினான். நீயும் உன் படைக்கலங்களுடன் நாளை வாவெனச் சொல்லி இராமன் தன் இருப்பிடம் சேர்கிறான்.

சதவலி, சுசேடணன், தாரன், கேசரி, கவாட்சன், தூமிரன், பனசன், படைத்தலைவன் நீலன், தரீமுகன், கஜன், சாம்பவன், துன்முகன், துமிந்தன், குமுதன், இடபன், பதுமுகன், தீர்க்கபாதன் நளன் ஆகியோர் உடன் ஏழு கடல் அளவினையொத்த வானரசேனைகள் வந்தன. வந்து நின்ற வானரசேனையினை நோக்கி இதன் எண்ணிக்கை என்ன என்று இராமன் கேட்க, எழுபது வெள்ளம் வானரசேனை எனச் சொல்கிறான் சுக்ரீவன்.

இனி இவர்களைக் கொண்டு சீதையைத் தேடுமாறு சொல்லி, தென்திசைக்குச் செல்லும் சேனைக்கு அனுமன், அங்கதன், சாம்பவந்தன் ஆகியோரை அனுப்புவதாகச் சொல்லுகிறான். இராமன் அனுமனைத் தனியே அழைத்து சீதையின் அங்க அடையாளங்களைச் சொல்லித் தன் கணையாழியை அவனிடம் கொடுக்கிறான்.

தென்திசையில் உள்ள பல்வேறு பிரதேசங்களை, நாடுகளைப் பற்றிச் சுக்ரீவன் சொல்லுவதை கம்பன் வெகு அழகாக வர்ணித்திருக்கிறான். வாலியால் துரத்தப் பட்டு நாடெங்கிலும் சுற்றித் திரிந்து இருப்பதற்கு இடம் இல்லாமல், ரிசியமுகம் பர்வதம் வந்து வசித்துவந்த அவனுக்கு வழிசொல்லுவதில் எவ்விதத் தடங்கலோ, தயக்கமோ இருக்கவில்லை. தெற்கே செல்லும் பொழுது பொதியமலையைக் கண்டு அதனை வணங்கிச் செல்லு வீர்களாக. ஏனென்றால், அது தமிழ்வளர்த்த அகத்தியன் வாழும் இடம்" எனச் சொல்லுகிறான். "தென்பகுதியில் எங்கு தேடியும் சீதையைக் காணவில்லையாதலால், மயேந்திரமலையில் வந்து வானரர் கூடினர். இராம னுக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பின்பற்ற இயலாத நாம் உயிர்துறத்தலே உரிய செயலாகும் என அங்கதன்

கூறுகிறான். இதற்கு அனுமன் நாம் இன்னும் தேவியைத் தேடிப் பார்ப்போம். எப்படிச் சீதைக்காகப் பரிந்து சென்று நடந்த போரிலே சடாயு உயிர்துறந்தாரோ அது போல நாமும் உயிர்துறந்தால், அது பாவம் அன்று பெருமைதான் எனச் சொல்கிறான்.

சடாயு இறந்தான் என்ற செய்தியினைக் கேட்டு "முறையுடை எம்பியார் முடிந்தவா" எனப் பறையிடும் நெஞ்சினனாக, பதைக்கும் மேனியனாக, கடலினைப் புரையுறும் அருவிக் கண்ணினனாக சம்பாதி அங்கு வருகிறான். சம்பாதியைக் கண்ட வானர வீரர்கள் அஞ்சி ஓடுகிறார்கள். அவர்களை அனுமன் அமைதிப்படுத்தி சம்பாதி முன்வந்து நிற்கிறான். "தாக்க அரும் சடாயுவைத் தருக்கினால் உயிர் நீக்கியவர் யார்?" எனக் கேட்கிறான். அதற்கு அனுமன், "உன்னை நீ உள்ளவாறு உரைப்பின், உற்றதை பின்னை நிரப்புதல் பிழைப்பு இன்று ஆகுமால்" எனச் சொல்லுகிறான். சம்பாதியும், தன் வரலாற்றையும் சடாயுவுக்காகச் சிறகுகள் இழந்த தன்மையையும் எடுத்துச் சொல்லுகிறான்.

பின்னர் அனுமன் சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது சடாயு தடுத்து நிறுத்தி, போர்செய்து இராவணன் தேரையும், மகுடத்தையும் அழித்தநிலையில் வீரவாளினால் இராவணன் சடாயுவை கொன்றான் என்று அனுமன் சொன்னதைக் கேட்ட சாம்பன், இராமனுக்காகத் தன்னுயிரை யீந்து அளித்தானே அது நன்று, நன்று எனப் பகர்ந்து, சடாயுவுக்கான இறுதிச் சடங்கினைச் செய்தான்.

"எனக்குச் சிறகுகள் முளைக்கவேண்டுமெனில் நீங்கள் அனைவரும் இராமநாமம் சொல்லுங்கள்" என

வானரர்களை வேண்டுகிறான். இராமநாமத்தின் மகிமையை, மகத்துவத்தை, மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரமாகவும், தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதமாகவும், இம்மையே எழுமை நோய்க்கு மருந்தாகவும் இருக்கும் 'இராம' என்னும் செம்மை சேர் நாமத்தினை வானரர்கள் எல்லோரும் சொல்ல, சம்பாதிக்கு சிறகுகள் முளைக்கின்றன. சூரியகிரணங் களால் சம்பாதியின் இறக்கைகள் தீய்ந்து போனபோது, கருணைகொண்ட கதிரவன், ஜனக மன்னனின் மகளான சீதையைத் தேடிவரும் வானரர்கள் இராமன் பேரைச் சொல்ல உனக்குச் சிறகுகள் முளைக்கும் என வரம் அளித்ததையும் சம்பாதி வானரர்களுக்குச் சொன்னான்.

"எல்லீரும் அவ்விராம நாமமே
சொல்லீர் என்சிறை தோன்றும்– சோர்வுஇலா
நல்லீர், அப்பயன் நண்ணும் நல்லசொல்
வல்லீர் வாய்மை வளர்க்கும் மாண்பினீர்"

என்று கம்பன் பெருமையாக, இராமநாமத்தின் மகிமையை, அதை ஓதினால் கிடைக்கும் பயனை இச் செய்தியின் மூலம் சொல்லுவது உற்று உணரத் தக்கது. இங்கும் அனுமன் மூலமாகத்தான் இச்செய்தி கிடைக்கப் பட்டது என்பதையும் நோக்கவேண்டும்.

வானரவீரர்கள், "நாங்கள் தென்திசையை நோக்கி வந்ததே புன்தொழில் அரக்கன் தேவியை இத்திசையில் கொண்டு போந்ததால்" என்றவுடன், சம்பாதி சொல்லு கிறான்: "பாதக அரக்கனான இராவணன் சீதையைப் பற்றிக்கொண்டு போகும்போது நான் பார்த்தேன். இலங்கையுள் புகுந்தான். அங்கு சீதையைச் சிறையில் வைத்துள்ளான். அங்கே சென்றால் சீதையைக் காணலாம்" என்று சொன்னான்.

சீதையைக் காண யார் போவது, யார் போகத் தகுதி வாய்ந்தவர் என்பதைச் சம்பாதியின் சொற்களாலேயே கேட்கலாம்.

"எல்லீரும் சேறல் என்பது எளிது அன்று, அவ்விலங்கை மூதூர்
வல்லீரேல் ஒருவர்ஏகி, மறைந்து அவண் ஒழுகி, வாய்மை
சொல்லீரே துயர்நீக்கி தோகையைத் தெருட்டி, மீள்தீர்
அல்லீரேல் என்சொல்தேறி உணர்த்துமின் அழகற்கு அம்மா"

உங்களில் வல்லவன் ஒருவன் சென்று, மறைந்து அங்கு இருக்கும் சீதையை பார்த்துப் திரும்பக் கூட்டிப் போகலாம். முடியாவிட்டால் என் சொல்லை, அழகன் இராமனுக்கு உணர்த்துங்கள் என்று சொல்லி, இலங்கை பற்றிய பிற செய்திகளையும் வானரவீரர்களுக்குச் சொல்லுகிறான்.

பழமையான இலங்கை நகரத்திற்கு நீங்கள் எல்லோரும் ஒருங்கே போவதென்பது எளிதான செயல் அன்று. என்னவென்றால் இவ்வுலகைப் படைத்த நான் முகன், அர்த்தநாரியான பரமேஸ்வரன், பாம்பணைப் பள்ளியான், பரமன், ஏன்? எமதர்மனே கூட கடக்க முடியாத கடலை அரணாக உடையது இலங்கை. ஆக, உங்களுக்குள் மிகுந்த வலிமை படைத்தவர்கள் மட்டுமே செல்ல இயலும் என்று கூறுகிறான்.

இலங்கையை அணுகுவது மிகவும் கடினம் என்பதும் சாமான்யர்களால் முடியாது என்பதும், நன்கு இங்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. தவிர, இலங்கையின் கட்டும், காவலும், அரணும் பெயர் பெற்றவை. மும்மூர்த்தி களாலும் அவற்றை அழிக்க இயலாது என்றும், சொன்ன தோடு நில்லாமல், அப்படி செல்லக் கூடியவர்கள் தங்களை மறைத்துக்கொள்ளும் சக்தி படைத்தவர்

களாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சீதையைக் காண்பதற்கு இயலும். மேலும் சீதைக்கு இராமபிரான் கூறிய சத்யமான வார்த்தைகளைச் சொல்லி, அவளது துன்ப்த்தைத் தீர்க்க வேண்டும். சொல்லும் வார்த்தைகள் சீதைக்கு இதமாக இருப்பது அவசியம் என்பதைச் சம்பாதி இங்கு உணர்த்துகிறான்.

"வல்லிரே ஒருவர்" என்ற வரிகள், இதனை அனுமன் ஒருவனே செய்யக்கூடியவன் என்பதை மறைமுகமாக உணர்த்துவது போல், "எல்லீரும் சேறல்" என்ற பாடல் அமைந்திருக்கிறது.

"புள்ளரசாகிய சம்பாதி பொய் உரையான். சீதாப் பிராட்டி இருக்குமிடத்தை அவன் சொல்லக் கேட்டு நாம் தெரிந்து கொண்டோம். ஒன்று இச்செய்தியை நம் அரசனான சுக்ரீவனுக்கும் சூரியதுலத்திலகனான இராம னுக்கும் சொல்லுவது அல்லது நாமே நேரில் சென்று சீதையைக் கண்டுவருவது சிறப்பானதாக அமையும். ஆனால் இப்பெருங்கடலைக் கடக்க யார் வல்லார்" என வானரத் தலைவர் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

நீலன் முதலான படைத் தலைவர்கள் இக்கடலைக் கடக்கும் தன்மை தங்களுக்கு இல்லை என்றார்கள். வாலியின் சேய் அங்கதன் என்னால் கடலைக் கடக்க இயலும். ஆனால் மீளவலியற்று உள்ளேன் என்று சொல் கிறான். கரடிகளின் தலைவனான ஜாம்பவான், நான் திருவிக்ரம அவதார காலத்திலே உலகத்தைச் சுற்றி வெற்றிப் பறை கொட்டி வரும் நேரத்தில் மேருமலையில் மோதி, இளைத்துத் தன் வலியற்றேன். அதனால் நான் இப்பொழுது சென்று திரும்பும் வகையில் இல்லை என்று சொன்னான்.

இருப்பினும் நம்மிடையே இக்கடலைக் கடந்து, பிராட்டியைக்கண்டு, செய்திகளைச் சொல்லி திரும்பி வரக்கூடிய ஆற்றல் மிக்கவன் ஒருவன் உளன். அவன் தான் அனுமன் என்பதை அங்கதனிடம் கூறுகிறான்.

ரிஷியொருவரின் சாபத்தாலே தன் வலிமை தான் அறியாதவனாக அனுமன் இருக்கிறான். பிறர் அவனது வலிமையை நல்ல காரியத்தின் நிமித்தம் உணர்த்தினால் மீண்டும் அவனது வலிமை உணர்வான் என்பதை அறிந்திருந்த ஜாம்பவான், அனுமன் வலிமையைப் புகழ்ந்து பேசுகிறான்—

அவனது சிரஞ்சீவித்துவம், எந்தத் தெய்வப் படைக் கலங்களாலும், அவனுக்கு ஊறு நேராமை, சொல் லாற்றல், செய்யும் காரியத்தை நன்றே முடிக்கும் திறன், போர் வரும் என்றால் அதிலே வெற்றி பெற்று மீளக்கூடிய வலிமை, அட்டமாசித்திகளிலே இரண்டான பெரிய உருவத்தை எடுக்கும் மஹிமா, சிறிய உருவம் ஆகும் அணிமா ஆகியவற்றைப் பெற்றிருக்கும் தன்மை, போர் வலிமையே வெல்லும் மதி படைத்தது, சூரியத் தேர்முன் நடந்தே சகலகலைகளையும் கற்றுத் தேர்ந்த செயல், நீதியில் நின்று வாய்மை அமைந்து, நினைவாலும் மாதர் நலம்பேணாத தன்மை ஆகியவற்றை வெகுவாக எடுத்துச் சொல்லுகிறான் கம்பன்,

"ஏகுமின் ஏகி எம்உயிர்நல்கி இசைகொள்ளீர்
ஓகை உணர்ந்து உம்மன்னையும் இன்னல் குறைவுஇல்லாச்
சாகரம் முற்றும் தாவிடும்நீர் இக்கடல் தாவும்
வேகம் அமைந்தீர்"

என கம்பர் இதனை அழகுபட சொல்கிறார்.

இதனைக் கேட்ட அனுமன், இலங்கையை வேரோடு பறித்து வருவது என்றாலும், அரக்கர் குலத்தையே அழித்து சீதையைக் கொண்டு வருவது என்றாலும், அதை செய்து முடிப்பேன். இச்செயலைச் செய்வதற்கு என்னை ஏவினீர்கள் என்றால் என்னிலும் பாக்கியசாலி யார் உளர் என்று சொல்லி, உங்களுடைய அருள் ஆசியும், எனது அரசன் ஏவலும் இரு சிறகுகளாக அமையக் கருடனைப் போல் இக்கடலைக் கடப்பது காண்பீர் என்கிறான்.

எல்லோரும் மயேந்திரமலைக்கு வருகிறார்கள். அனுமன், கடலைத்தாவும் நோக்கத்தில் எப்படி நிற்கிறான் என்பதைக் கம்பன் அற்புதமாக வர்ணனை செய்கிறான்.

"பொருஅரு வேலைதாவும் புந்தியான் புவனம்தாய
பெருவடிவு உயர்ந்த மாயோன் மேக்குஉறப் பெயர்த்த தாள்போல்
உருஅறி வடிவின் உம்பர் ஓங்கினான், உவமையாலும்
திருவடிஎன்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான்"

இப்பாடலிலே "பெருவடிவு உயர்ந்த மாயோன், மேக்கு உறப்பெயர்த்த தாள்" என்ற சொல் வாமன அவதாரத்தின் சிறப்பைக் கூறுகிறது.

பண்டை நாளில் மாவலி என்ற அசுரன் புவனம் முழுவதையும் தன் ஆட்சிக்குள் அடக்கி, தேவர்களையும் சிறை பிடித்தான். தேவர்கள் திருமாலை வேண்ட, திருமாலும் வாமன வடிவு கொண்டு மாவிலியிடம் மூன்று அடிமண் யாசிக்கிறான். அவனும் கொடுப்பதற்கு இசைகிறான். வந்தவன் திருமால் என்பதை அறிந்த அரசகுரு சுக்ராச்சாரியார், அவனைக் கொடுக்கவிடாமல் தடுக்கிறார். அதையும் மீறி தன் கை உயர பரமன் கை தாழுமானால் அதனினும் வேறு பேறு தனக்கில்லை என்று கூறி, மூன்றடி மண்ணைத் தானம் செய்கிறான்.

வாமனனாக வந்த திருமால், திருவிக்கிரம வடிவு எடுத்து, ஓர் அடியில் உலகை அளந்து, மற்றொரு அடியால் வானத்தை அளந்து, மூன்றாவது அடிக்கு அவனது முடியின்மீது தாள்வைத்து அவனைப் பாதாளச் சிறையில் தள்ளி மாவலியின் செருக்கு அடக்கி, புவனத்தையும் தேவர்களையும் மீட்டார் என்பது வரலாறு.

இப்பாடலில் விண்ணை அளந்த மாவலியின் தாளைச் சொல்ல வரும் கம்பன், ஈதென்ன பெரிய வடிவம் என்று அறிய முடியாதபடி, மிகப்பெரும் வடிவம் கொண்டு வானளாவி உயர்ந்து நின்றான் அனுமன். எப்படி– "மாயோன் மேக்குறப் பெயர்த்த தாள்போல் உருஅறிவடிவின் உம்பர் ஓங்கினான்" எனச் சொல்லும் பொழுது அனுமனின் விசுவரூபத்தின் பெருமை நமக்கு எளிதில் புலனாகிறது.

திருமாலைத் தாங்கும் கருடாழ்வானைப் பெரிய திருவடி எனவும் இராமனைத் தோள்களில் தாங்கிய அனுமனைச் சிறிய திருவடி எனவும் வைணவர்கள் போற்றுவார்கள். இங்கும் அப்பொருளிலேயும் "உவமை யாலும் திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான்" எனக் கம்பன் சொல்லும்பொழுது, நாம் பிரமித்து நிற்கிறோம்.

கிட்கிந்தா காண்டத்திலே வரும் மூன்று பாடல் களான "மறந்திலன் கவியின் வேந்தன்", "எல்லீரும் சேறல் என்பது எளிதன்று", "பொருஅரு வேலைதாவும்" என்பன இங்கு அனுமனை வைத்துச் சொல்வனவாக அமைந்து இருக்கின்றன.

முதல் பாடலிலே அனுமனுடைய அரசியல் சாணக்கியம், சொல்வன்மை இவையும், இரண்டாம்

பாடலில் அவனுடைய வலிமையை மறைமுகமாகச் சுட்டிக் காண்பிப்பதும், மூன்றாம் பாடலிலே அவனது விசுவரூபக்காட்சியைக் கொண்டுவந்து நிறுத்தி அனுமனது ஆற்றல், செயல்திறன், பணிவு, இராமபக்தி, ஆகியவற்றைக் கம்பன் பாடல்களால் சுட்டிக்காட்டும் பொழுது, இப்பாடல்களின் முன்னும் பின்னுமாக எத்துணைச் செய்திகள், எத்தனை நிகழ்ச்சிகள் என்பதை நாம் அறியும் பொழுது கம்பனது கவிதைச் சுவை நலத்தைக் காண முடிகிறது.

கம்பன் ஒருவனால்தான் இப்படிப்பட்ட செய்யா வித்தைகளை செய்ய இயலும். எனவே கட்டுரை ஆரம்பத்தில் நான் சொன்ன ரம்யமான கவிச்சக்கரவர்த்தி என்ற வார்த்தைகளை அவனது பாடல்கள் மெய் யாக்குகின்றன.

■

3. திருமுடியும் திருவடியும்

கம்பன் தான் படைத்த இராமகாதையிலே, மூல நூலினும் வேறுபட்டு பல்வேறு சம்பவங்களைத் தனக்கே உரியபாணியில் கொண்டு செல்வதில் வல்லவனாக இருந்திருக்கிறான். இராமாவதார நோக்கத்திற்கு ஏதுவாகப் பல படலங்களில் பல திருப்புமுனைகளைக் கம்பன் கொண்டுவந்து நிறுத்துகிறான். அவற்றுள் ஒன்று தான் திருவடி சூட்டுப்படலம் (146 பாடல்களைக் கொண்டது.)

தந்தையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு கானகத் திற்குச் சென்ற இராமனை—பரதன் சித்திர கூடத்தில் சந்தித்து, அவனது திருவடிகளைப் பெற்று சிரமேல் வைத்து நந்தியம்பதிக்கு வந்து, பாதுகைகளைச் சிம்மா சனத்து இருத்தி, இராமனின் பிரதிநிதியாக அயோத்தியை ஆண்டு வந்ததாகவும், அல்லும் பகலும் அனவரதமும் இராமன் வருகையை நோக்கியே இருந்தான் என்பதையும் குறிக்கிறது இப்படலம்.

மூலத்தின் கடைசியில், "நாதன் பாதுகம் செந்தனிக் கோல்முறை செலுத்த" என்ற அடிகளின் சாரத்தை வைத்துக்கொண்டு, ராமராஜ்யத்தை விட இராமருடைய பாதுகைகளின் ஆட்சி சிறப்பாக இருந்ததாகச் சொல்லப் படுகிறது. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் இயற்றிய "பாதுகா சகஸ்ரம்" என்ற நூலிலிருந்து பாதுகைகளின் பெருமை யையும், அருமையையும் அறிந்துகொள்ள முடியும். இந்நூல் வைணவ அடியார்களிடையே மிகுந்த

செல்வாக்கைப் பெற்றிருக்கும் நூல் என்று வடமொழி வல்லுநர்கள் கூறுகிறார்கள். இப்படலத்தின் சுருக்கத்தை, இயல்புகளை இப்போது காணலாம்.

குகன் உதவியோடு கங்கையைக் கடந்த பரதன் பரத்துவாச முனிவரின் ஆஸ்ரமத்தை அடைகிறான். அவனது சேனைகளுக்கு முனிவர் விருந்து படைக்கிறார். இராமனைத் திரும்ப அழைத்துவந்து மகுடம் சூட்ட எண்ணுகிற பரதனின் எண்ணத்தைக் கண்டு மகிழ்கிறார். பின் அனைவரும் சித்ரகூடம் செல்கின்றனர். படைகள் உடன் பரதனைக்கண்டு இலக்குவன் சினத்தால் சீறு கிறான். இராமன் அவனைச் சமாதானப்படுத்தி தவறு உணர வைக்கிறான். பரதன் வந்து இராமன் அடி வணங்குகிறான். தந்தையின் மரணத்தை அறிந்து இராமன் வருந்துகிறான். வசிட்டன் ஆணைப்படி தந்தைக்கு நீர்க்கடன்கள் செய்கிறான். செய்தி அறிந்த சீதையும் துயருறுகிறாள். தவக்கோலத்தில் இருந்த பரதனைக்கண்ட இராமன் ஏன் இந்தத் தவக்கோலம் என வினவுகிறான். நாடாள வேண்டிய நீயே அனைத்தையும் துறந்து, தவக்கோலம் புனைந்தபின் எனக்கு ஏன் அரசுக் கோலம் எனப் பரதன் பதிலளித்து, இராமனை நாட்டிற்கு வந்து அரச பாரத்தை ஏற்க வேண்டுகிறான். தயரதனால் கொடுக்கப்பட்ட அரசுக்கட்டில் உனக்கே உரியது. எனக்கு ஏழிரண்டாண்டுகள் கானகத்தில் இருக்கக் கட்டளை. எனவே நீ தான் அரசு பதவி ஏற்க வேண்டும் என்று கூறி இராமன் மறுக்கிறான். வசிட்டனும் பரதன் வேண்டுகோளை ஏற்குமாறு இராமனை வேண்டுகிறான். தந்தையின் சத்தியவாக்கை நிறைவேற்றுவதே தனயனின் கடமை என்று கூறி மீண்டும் மறுக்கிறான் இராமன். இதைக் கேட்ட பரதன் தானும் வனத்திலேயே தங்குவ

தாகக் கூறுகிறான். எனக்குக் கொடுத்த அரசை நான் உனக்குக் கொடுக்கிறேன் நகர் திரும்புங்கள் எனப் பரதன் மீண்டும் வேண்டுகிறான். பிடிவாதமாக இருக்கிறான். இந்நிலையில் எங்கே இராமாவதாரத்தின் நோக்கம் நிறைவேறாமல் போய்விடுமோ என்று எண்ணிய தேவர்கள் அங்குவந்து காரண நிமித்தம் இராமன் காட்டில் இருக்கவும், பரதன் நாடாளவும் பணிக்கிறார்கள். தேவர்கள் சொல்லியபடி பரதன் தனக்குக் கொடுத்த அரசை மீண்டும் பரதனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி, தேவர்கள் சொல்லியபடி 14 ஆண்டுகள் நாட்டை ஆள இராமன் வேண்டுகிறான். குறித்த நாளில் வராவிட்டால் உயிர் துறப்பேன் என்று பரதன் சூளுரை செய்கிறான். இராமன் அதற்கு உடன்படுகிறான். பரதன் இராமனுடைய பாதுகைகளை வேண்டிப்பெற்று, தலையில் சுமந்து கொண்டு சென்று, அயோத்தி நகரம் செல்லாது, நகர்ப் புறத்து எல்லையில் இருக்கும் நந்திக் கிராமத்தில், பாதுகைகளைச் சிம்மாசனத்தில் வைத்து, அதன் அடிமை யாய் இருந்து ஆட்சியை நடத்துகிறான் என்ற அளவிலே இப்படலம் நிறைவுறுகிறது.

இப்படலத்தின் மூலம் பரதனின், உள்ளக்கிடக்கையும் இராமனிடத்தில் அவன் கொண்ட பாசமும் பரிவும் இராமனைத் தவிர வேறொன்றும் தனக்குத் தேவை யில்லை என்ற உறுதியும் ஆட்சி தனக்கு வந்தபோதும் அதனை ஏற்காது மறுத்து, மூத்தவனாகிய இராமனுக்கே அது உரியது என்று சொல்லிய– அரச பாரம்பரியத்தைக் கட்டிக் காத்த– பண்பு மிகுதியும் வெளிப்படுகிறது.

மூல நூலாகிய வால்மீகத்திலிருந்து பல இடங்களில் கம்பன் வேறுபடுகிறான். வான்மீகத்தில் பரத்துவாச

முனிவனைப் பரதன் தனியே சந்திக்கிறான். படைகளை இரண்டு கல்களுக்கு அப்பால் நிறுத்திவிட்டு வருகிறான். படைகளை ஏன் கூட்டிக்கொண்டு வரவில்லை என்ற முனிவரின் வினாவிற்கு, ஆஸ்ரமத்தின் தூய்மைக்கும், வனங்களில் உள்ள மரம், செடி, கொடிகள், நீர் இவற்றிக்கும் ஊறாமே எனப் பரதன் விடை கூறுகிறான். பின்னர் முனிவர்களின் கட்டளைப்படி சேனைகள் அங்கு வரவழைக்கப்படுகின்றன. தனது தவசக்தியால் சேனை களுக்கு விருந்து வைக்கிறார் முனிவர். பரதனை இரத்தின மயமான மாளிகையில் தங்க வைக்கிறார். தேவர்கள், குபேரன், பிரம்மா இவர்களால் அனுப்பப்பட்ட தேவ கன்னிகைகள் வருகிறார்கள். ஆடல், பாடல் நடைபெறு கிறது. நாரதர், தும்புரு இவர்கள் வீணை மீட்டுகின்றனர். அலம்பிசை, மிச்ரகேசி, புண்டரீகை என்னும் தேவ மாதர்கள் பரதனின் முன் ஆடி அவனை மகிழ்விக் கிறார்கள். இரவு நீங்குகிறது. காலையில் பரதன், முனிவரிடம் தான் இரவை இனிது கழித்து மகிழ்ந்ததாகக் கூறி இராமன் இருக்கும் சித்திரகூடம் நோக்கிப் புறப் படுகிறான். இங்குதான் தன் தாயார்கள் மூவரை முனிவருக்கு அறிமுகப்படுத்துகிறான். அப்போது முனிவர், பரதனிடம் "கைகேயி உண்மையில் கெட்டவள் இல்லையென்றும் அவளது செயல்கள் நன்மையாகவே முடியும்" என்று சொல்லி அவர்களை வழியனுப்புகிறார். பரதன் அழகான சிவிகையில் ஏறிச் செல்கிறான். பின்னர் இராம–பரத சந்திப்பு நிகழ்கிறது. அரசை ஏற்கும்படி பரதன் வேண்ட– இராமன் மறுக்க அப்பொழுது அங்கிருந்த ஜாபாலி முனிவர் நாத்திகக் கொள்கைகளை எடுத்துகூறி, தாய் தந்தை என்று கூறும் உறவுகள் பொருள் அற்றவை– நில்லாதவை. உலகத்தில்

செல்வத்தை நுகர்ந்து வாழ்வதுவே பொருளாகும். விவேக மானதும்கூட எனச் சொல்லுகிறார். அவரது நாத்திக வாதத்தை இராமன் வன்மையாகக் கண்டிக்கிறான். பின்னர் வசிட்டன் உலக நியதிகளை எடுத்துக்கூறி, இராமனை ஆட்சி ஏற்க வருமாறு வேண்டுகிறார். இராமன் மறுக்கிறான். இதனைக் கண்ட பரதன் தருப் பைகளை விரித்துத் தரையில் வைத்து அதிலே கிடந்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்குகிறான். இவ்வாறு செய்வது அந்தணர்களுக்கு மட்டுமே உரியது, ஏனையோர் செய்யக்கூடாது என்று இராமன் கூறுகிறான். இராமனுக்குப் பதிலாகத் தான் 14 ஆண்டுகள் வனவாசம் செய்வதாகப் பரதன் கூறுகிறான். தேவர்கள் பரதன்முன் தோன்றி அரசை ஏற்க வற்புறுத்துகிறார்கள். இராமன் தன்மீதும் சீதை மீதும் ஆணையாகச் சொல்லி கைகேயியைப் பெருமையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறான். பரதன் இராமன் பாதுகைகளை வேண்டிப் பெற்று அயோத்தி திரும்பும் வழியில் மீண்டும் பரத்துவாச முனிவனைச் சந்தித்து பின் நந்திக்கிராமத்தில் பாதுகைகளை வைத்து இராமனின் பிரதிநிதியாக ஆட்சி செய்கிறான். இவ்வாறு வால்மீகி இராமாயணத்தில் காட்சிகள் இடம் பெறுகின்றன.

கம்பன், வால்மீகியினின்றும் பல இடங்களில் வேறு பட்டும், சில இடங்களை அழகுபடுத்தியும் அமைத் திருப்பது திருவடி சூட்டுப் படலத்தில் காணலாம்.

கம்பனின் கை வண்ணத்தில்— இராமன் மீது பரதன் கொண்ட பேரன்பும், தூய உள்ளமும் அவனது உறுதிப் பாடும் நன்கு புலப்படுகின்றன. பரத்துவாச முனிவனும் பரதனுடைய அப்பழுக்கற்ற மன உறுதிகண்டு, வியப்பதும்,

அவரது விருந்தோம்பலின் மூலம் வெளிப்படுகிறது. பரதனின் ஒழுக்கமும் அதனின்று பிறழாத தன்மையும் விருந்தின்போது புலனாகிறது.

இங்கு தான் வான்மீகத்திலிருந்து கம்பன் வேறு படுவதைக் காணமுடிகிறது. இசை, கேளிக்கை, விருந்து இவைகளைப் பரதன் நுகர்ந்தான் என்று வால்மீகி சொல்லியதைக் கம்பனும் எழுதியிருந்தால், பரதனை நாம் ‘ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ’ என்றும், ‘எண்ணில் கோடி இராமர்கள் என்னினும் அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ’ என்றும் குகன், கோசலை இவர்கள் வாயிலாகப் பெருமையாகப் பேசுவதைக் கண்டிருக்க முடியாது.

இராமனைத் திரும்பக் கொணர்வான் வேண்டி பரதன் நாட்டுமக்களுடனும், படையுடன் சித்திரகூடத்தை அடைகிறான். அங்கிருந்த இலக்குவன் இவை கண்டு பெரும் சினம் கொள்கிறான்.

> “ஒருமகள் காதலின் உலகு நோய் செய்த
> பெருமகள் ஏவலின் பரதன் தான் பெறும்
> இருநிலம் ஆள்கை விட்டு இன்றுஎன் ஏவலால்
> அருநரகு ஆள்வதுகாண்டி– ஆழியாய்”

எனக் கோபம் கொந்தளிக்கப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறான். இங்கே இராமன், பரதன் பெருமையை, தன்னிடத்தில் உள்ள காதலாலும், அன்பாலும் வருகிறான். அயோத்தியை எனக்குத் தருவதற்காகத்தான் வருகிறான். தன் படைகளைக் கொண்டு போருக்கு வருகிறான் எனத் தவறாக நினைப்பதும் பேதைமை “சேண்உயிர் தருமத்தின் தேவை, செம்மையின் ஆணியை, அன்னது நினைக்கல்

ஆகுமோ" என்று இராமன் கூறும் சொற்கள் பரதனைப் புகழின் உச்சிக்கே கொண்டு செல்கின்றன.

பரதன் வருகிறான் எப்படி? வற்கலை உடையான்– மாசடைந்த மெய்யான்– நற்கலை இல்மதி என்ன நகை இழந்த முகத்தான்– கல் கனியக் கனிகின்ற துயரத்தை உடையவனாக வருகிறான்.

இலக்குவனைப் போலவே பரதனுடன் போர் செய்யத் தன் படைகளுக்கு அறைகூவல் விடுத்த குகன், "எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு" எனப் பின்னர் கூறுவதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

"தொழுது உயர்கையினன் துவண்ட மேனியன்
அழுது அழிகண்ணினன் அவலம் ஈது என
எழுதிய படிவம் ஒத்து எய்துவான்"

ஆன பரதனை "தேர்ப்பெருந்தானையால் பரதன் சீறிய போர்ப்பெரும் கோலத்தைப் பொருந்த நோக்கு" என இராமன் இலக்குவனுக்குச் சொல்கிறான். சொல்லோடு, சினத்தோடு, உணர்வு சோர்தர வில்லோடு கண்ணநீர் நிலத்துவீழ நின்ற காட்சியைக் கம்பர் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பரதன் தன்னை அயோத்திக்குத் திரும்ப அழைத்துச் செல்லவே வருகிறான் என்பதை இராமன் உணர்ந்திருக் கிறான். அவனது இலட்சியம் திருமுடியன்று என்பதை பின்னர் பலரும் காணும்படி செய்யும் கம்பனது உத்தி படித்துப் படித்து இன்புறத்தக்கது.

மேலும் பரதனது தவக் கோலத்தை பல இடங்களில் கம்பன் வெகுவாகப் புகழ்ந்து கூறி அவனைப்பற்றி

சிறிதளவு மாசுகூட படிப்பவர் உள்ளத்தில் ஏற்படக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறான்.

பரத்துவாச முனிவனின் ஆஸ்ரமத்திற்கு வந்த பரதனை, "மரவுரி அணிந்து நீ வரவேண்டிய காரணம் என்ன என்று கேட்கிறான். வேதநாயகனான இராமனுக்கு இளையோனாகிய நான், மரபுகளை நீக்கி முதுநிலம் கொள்ளமாட்டேன். இராமனும் கொள்ளமாட்டான் என்றால் நானும் ஏழிரு ஆண்டுகாலம் காட்டில் உறைவேன் என்கிறான். இங்கும் அவனது கொள்கை திருமுடி இராமனுக்குத்தான் ஏனையோருக்கு அன்று எனக்கும் அன்று என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதே.

பரதன் மரவுரியில் இருப்பதை, வான்மீகத்திலிருந்து கம்பன் அப்படியே எடுத்துக் கையாள்கிறான்.

> "ஜடிலம் சீரவஸனம் ப்ராஞ்சலிம் பதிகம் புவி
> ததர்ச ராமமா துர்தர்சம் யுகாந்தே பாஸ்கரம்
> யதா, கதம்கத் அபிவிஞாய விவர்ணவ தனம்
> க்ருசம் பிராதரம் பரதம்ராம"

(ஜடிலம்–ஜடாமுடி; சீரவஸனம்–மரவுரி; பிராஞ் சலிம்–தொழுத கையினான்; விவர்ண வதனம்–களை யில்லாத முகம்)

கம்பனைப் பார்ப்போம்– பரதன் வருகிறான். அவனது கூப்பிய கை தெரிகிறது. உடம்பெல்லாம் மெலிந்திருப்பதைக் காணமுடிகிறது. இன்னும் சற்று அருகில் வந்ததும் அழுது அழுது கண்கள் சிவந்தமை தெரிகிறது. ஆயினும் ஒன்றும் புரியவில்லை. நன்கு உணருவதற்காகத் தன்னை நோக்கிவரும் பரதனைக் கூர்ந்து இராமன் கவனிக்கிறான்.

"தொழுது உயர்கையினன், துவண்ட மேனியன்
அழுது அழு கண்ணினன் அவலம் ஈதென
எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை
முழுதுணர்சிந்தையான் – முடிய நோக்கினான்"

எனக் கம்பன் வர்ணிக்கிறான். வான்மீகியின் பரதனை அப்படியே வாங்கிச் சித்திரித்திருப்பது வியக்கத்தக்கது.

இராமனிடத்தில் பரதன் வாக்குவாதம் செய்கிறான். கம்பரும் வான்மீகியும் இங்கு ஒரே மாதிரியாகப் பேசு கிறார்கள்.

"தய்யமே தாஸபூதஸ்ய ப்ராசதம் கர்துமர்ஹசி
ஆபி சிஞ்சஸ்வ சாக்யைவ ராஜ்யேன மகவானிவா"

"நான் உனதுதாசன். என் கோரிக்கையை ஏற்று நீ அரசாள வேண்டும். இது என் வேண்டுகோள்" என்பது வான்மீகி கூற்று.

"உந்தை தீமையும் உலகு உறாத நோய்
தந்தைதீவினை தாய்செய் தீமையும்
எந்தை நீங்க மீண்டும் அரசுசெய்க–"

என்று கம்பனின் பரதன் கூறுகிறான்.

முன்பு தயரதனை இலக்குவன், "ஒருமகள் காதலின் உலகை நோய் செய்த பெருமகன்" என குறிப்பிடுகிறான். இங்கு கைகேயியை, "உலகுஉறாத நோய் தந்த தீவினைத் தாய்" எனப் பரதன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"பிராது: சிஷ்யஸ்ய–தாஸய்ய ப்ராசாதம் கூர்த்துமர்ஹஸி"

"நான் உன் சகோதரன் மட்டுமல்லன் சீடன், தாசன் ஆகையால் தயைபுரிவாய்– வணங்குகிறேன்"– என்று கூறுகிறான்.

கம்பனின் பரதன்— அறம்தனை நினைந்திலை— அருளை நீத்தனை; துறந்தனை முறைமையை— என்னும் சொல்லினான்; மறந்தனன், மலர் அடிஉற்று வீழ்ந்தனன்" என்கிறான்.

வசிட்டன் முதலானவர் பரதனுக்கு அறிவுரைகள் கூறுகின்றனர். அப்பொழுதும் அவன் நாடாள உடன்பட வில்லை. அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடு; நான் பனிபடர் காடு உடன்படர்தல் மெய்" எனக் கூறுகிறான்.

கடைசியில் இமையவர்கள் "ஆண்டு ஏழினோடு ஏழும் அந்நிலம் காத்தல் உன் கடன்; இவை கடமை" எனக் கூறுகிறார்கள். நீ குறிப்பிட்ட ஆண்டுகள் முடியும் நாளில் அயோத்திவந்து அரசை ஏற்காவிடில் நான் எரிபுகுவேன். இது சத்தியம் எனக் கூறி எனக்கு ஒன்று வேண்டும்— அது திருமுடியன்று, "செம்மையின் திருவடித் தலம் தந்தீக" என்று விம்மிக் கேட்கிறான்.

"அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினான்
முடித்தலம் இவையென முறையின் சூடினான்
படித்தலம் இறைஞ்சினான்"

பெற்ற திருவடிப் பாதுகைகள் இரண்டையும் தன்னுடைய சென்னியில் பரதன் சூட்டிக் கொண்டான். இவை தன் திருமுடி என முறையின் சூடினான். நேராக அயோத்தி சென்றானில்லை. அயோத்தியின் வெளியிலே இருக்கும் நந்தியம்பதியில் இராமனது பாதுகைகளை வைத்து, அதன்மூலம் ஆட்சி நடத்துவான் பரதன், எப்படி யெனில் இந்திரியங்களை அடக்கி, இரவும் பகலும் நீர் மல்கும் கண்களோடும் இருந்தான் எனக் கம்பன் குறிப்பிடுவான்.

"நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக்கோல் முறைச்செலுத்த சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான்
அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான்"

தயரதன் குலத்தில் மரபாக மூத்தவனுக்கே மகுடம் என்ற முறைமையில், இராமனுக்குச் சேரவேண்டிய மகுடம் கைகேயின் வரத்தினால் பரதனுக்குப் போயிற்று. இருப்பினும் பரதன் அதனை ஏற்கவில்லை. முறைமை தவறாது இருக்கவே அவன் விரும்பினான் எனவும் தெரிகிறது. எனவேதான் இராமன் நீ ஆட்சியை ஏற்றுக் கொள் எனச் சொன்னபோது மறுத்த பரதன் கடைசியில் இராமன் பாதுகைகளை வாங்கித் தன் முடிமேல் வைத்து அதையே திருமுடியாகக் கருதினான் என்பதைப் பார்க்கும் பொழுது இராமனைத்தவிர வேறு யாரும் அந்த முடியை ஏற்க விரும்பியது இல்லை என்பதைக் கடைசியில் சத்துருக்கன் வாயிலாகக் காணமுடிகிறது.

இராமன் குறிப்பிட்ட காலத்திலே வரத் தவறியதன் காரணமாக பரதன் எரியில் விழச் சித்தமாகிறான். சத்துருக்கனனிடம் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லுகிறான்.

"கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப்போனானைக் காத்துப்பின்பு
போனானும் ஒருதம்பி போனவன்தான் வரும்அவதி போயிற்றென்னா
ஆனாது உயிர்விடவே அமைவானும் ஒரு தம்பி அயலே நாணாது
யானாம் இவ்வரசாள்வேன் என்னே இவ்வரசாட்சி இனிதே அம்மா?

என சத்துருக்கனன் கூறும்பொழுது, திருமுடி இராமனுக்கு மட்டும்தான். ஏனையோர் அதனை எப்பொழுதும் ஏலார் என்பதைப் புரிந்துகொள்ள

முடிகிறது. எனவேதான் திருமுடிக்கு உரியவனின் திருவடிப் பாதுகைகளை சிம்மாசனத்து இருத்தி பரதன் ஆட்சி செய்தான். ஆக திருமுடியை விடத் திருவடிகளே உயர்ந்தவை என்ற தத்துவத்தை— ஆண்டவனின் திருக்கழல்களே நம்மை உய்விக்கும் என்பதை— இதன் மூலம் அறியமுடிகிறது. இதனை 'பாதுகா சகஸ்ரம்' என்ற நூல் விவரமாகச் சொல்லுகிறது.

இதில் 145ஆம் ஸ்லோகத்தில் "ஏ, பாதுகையே! உன்னைச் சாத்திக்கொண்டிருக்கிற திருவடியிலிருந்து உண்டான பூமி, சராசரங்களையெல்லாம் தூக்குகிறது. ஸ்ரீராமன் காட்டிற்கு எழுந்தபொழுது காப்பாற்றுவார்கள் இல்லாமையால் அந்த பூமிக்குத் தொந்திரவு ஏற்பட்டது. அப்பொழுது நீ திருவடியிலிருந்து உண்டான உறவைப் பற்றி அந்த பூமியைக் காப்பாற்றினாய், என்றும் 175ஆம் ஸ்லோகத்தில் பாதுகைகளே! ஸ்ரீராமன் திடீரென்று காட்டிற்கு எழுந்தருளிவிட்டார். அந்தச் சமயத்தில் நீங்கள் பட்டத்தை ஒப்புக்கொண்டு ராஜ்யத்தைக் காப்பாற்றி னீர்கள் என்றும் 180ஆம் ஸ்லோகத்தில் ஏ பாதுகையே! ஸ்ரீராமன் காட்டிற்கு எழுந்தருளிய காலத்தில் நீ ராஜ்ஜியத்தை ஒப்புக்கொண்டு ஜனங்களுக்கு இருந்த மகத்தான துக்கத்தை, சூரியன் புறப்பட்டு இருளை நீக்குவது போலப் போக்கினாய்" என்றும் பாதுகா சகஸ்ரத்தில் வேதாந்த தேசிகர் பாதுகையின் பெருமை களைப் பேசுகிறார். எனவே தான் திருவடியின் பெருமை அளவிடற்கரியது எனச் சொல்லுகிறோம். இதனைத் தான் கம்பன் "நாதன் பாதுகை செந்தனிக் கோல்முறை செலுத்த" என்றும் கூறினார்.

■

4. நல் அறமூர்த்தி

காலவெள்ளத்தால் அழியாத காப்பியமாகத் திகழ்வது கம்பனின் இராமாவதாரம். படிகொண்ட கீர்த்தி, இராமாயணம் எனும் பக்தி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தவன் கம்பன். வடமொழியில் இச்சரிதம் வான்மீகி முனிவரால் இயற்றப்பட்ட மிகப் பழமையான இதிகாசம். கிரவுஞ்சபட்சிகளின் பண்பைக்கண்ட வேடனிடத்திற் பிறந்த சோக கீதத்தின் பிரதிபலிப்பே இதன் முதற் செய்யுள். வேடனே, வான்மீகியாக மாறி இராமாயணத்தை நாரதர் சொல்லக் கேட்டுப் பிறகு பாடினார் என்பது புராண வரலாறு. இராமாயணம் பிறந்த இந்த நிகழ்ச்சி கம்பனது உள்ளத்தை மிகவும் நெகிழ்த்தி இருக்கிறது. வேடனுடைய பசிக்காகத் தங்களை உயிர்த்தியாகம் செய்து கொண்ட அந்த இணைப் புறாக்களின் உயர்ந்த செயலை எங்கே, எப்படிச் சுட்டிக் காண்பிப்பது என்று கம்பன் எண்ணினான். வீடணன் அடைக்கலப் பகுதியில்,

"பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந்து அடைந்த பேதை
வேடனுக்கு உதவி செய்து, விறகிடை வெந்தீமூட்டி
பாடுறு பசியை நோக்கி, தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற்று உயர்ந்த வாழ்க்கை வேதத்தின் விழுமிது அன்றோ"

என்று அந்தச் செய்தியை இராமன் வாயிலாகக் குறிப் பிட்டுப் பேசுகிறான் கம்பன்.

மெய்ப் பொருளுக்கு மேலான பொருள் இல்லை என்பது வேதவாக்கு. அந்த மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள், வில்லும் தாங்கி, கால்தரை தோயநின்று, கட்புலனுக்கு இலக்காகியது என்பது கம்பனுடைய சித்தாந்தம், கம்பன் சத்தியத்தை இராமன் என்னும் அழகனாகவும், அந்த மெய்ப்பொருளின் இதயத்தில் ஒளிரும் அழகைச் சீதையாகவும் சிறப்புச் செய்து தனக்கு மனநிறைவைக் கொள்கிறான்.

வான்மீகியின் வழிநின்றாலும் கம்பன் தான் வாழ்ந்த காலத்துக்கேற்ற சமுதாய அமைப்பு முறைகளுக்கு ஒப்புமாறு, தனது காவியத்தில் பாத்திரப் படைப்புக் களைச் செய்திருக்கிறான். பல்வேறு இடங்களிலே மூல நூலிலிருந்து வேறுபட்டுப் பாத்திரங்களின் தன்மையை மாற்றி அமைத்ததிலிருந்து இதை உணரமுடிகிறது. அவ்வாறு கம்பனின் சொல்வண்ணத்தில் உருவான பாத்திரம்தான் 'நல் அறமூர்த்தி'யான தயரதன்.

தயரதனுடைய பெருமை, புகழ், ஆட்சிச் சிறப்பு இவற்றையெல்லாம் பேசுவதற்கு வாய்ப்பாக, பால காண்டத்திலே நாட்டுவளம், நகர்ச்சிறப்பு, மாந்தர் பெருமை, கொடைச் சிறப்பு இவற்றையெல்லாம் விரிவாகச் சொல்லி இத்தகு நாட்டின் அரசன்தான் தயரதன் என்று அவனது ஆட்சியின் மேன்மையைப் பறை சாற்றுகிறான் கம்பன்.

கடல் வாணிகம், நிலம் கொழிக்கும் வேளாண்மை, நவமணிகளையும் வாரிக்கொடுக்கும் வாணிகம் ஆகிய அனைத்திலும் சிறந்து விளங்கி நின்றது கோசல நாடு. இவையனைத்திற்கும் மேலாக கோசல நாட்டு மக்கள் ஒழுக்கத்தின் மறுபிரதிபலிப்பாக இருக்கிறார்கள் என்பதை,

"கலம் சுரக்கும் நிதியம், கணக்குஇலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நல்மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கரிய தம்
குலம் சுரக்கும்– ஒழுக்கம் குடிக்கெலொம்"

என அழகாகச் சுட்டிக் காண்பிக்கிறான் கம்பன்.

மேலும் கோசல நாட்டில் வறுமை என்பதே கிடையாது. எனவே அங்குக் கொடையின் சிறப்பை அறிய வாய்ப்பு இல்லை; பகை கிடையாது. ஆதலால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட இயலாமல் போய்விட்டது. பொய் கிடையாது. எனவே மெய்ம்மையின் பெருமையை உணர வாய்ப்பு இல்லை; அறியாமை இல்லை. மக்கள் அனைவரும் கல்விஞானம் மிகுந்தவராக இருப்பதால் நீதிகள் பொய்யா நிற்பின் நின்றன. அறங்கள் மாதர்கள் அன்பால் நின்று நிலைத்தன. காலமாரியும் அவர்தம் கற்பால் நிலைத்திருந்தது.

இத்தகு சிறப்பு மிகுந்த நாட்டின் அரசர், அரசர்க்கு அரசன், சப்த லோகங்களிலும் தனது வலிமையால் ஆளுமையை நிலைநிறுத்திக் கொண்டவன், மொய்மாண் கழலோனாகிய இராமன் என்ற நம்பியை மகனாகப் பெற்றவன். அவன்தான் நல் அறமூர்த்தியான தயரதன் என்பதை,

"அம் மாண் நகருக்கு அரசன், அரசர்க்கு அரசன்
செம்மாண் தனிக்கோல் உலக ஏழினும் செல்ல நின்றான்
இம்மாண் கதைக்கு ஓர் இறை ஆய இராமன் என்னும்
மொய்ம்மாண் கழலோன் தரு நல் அறமூர்த்தி அன்னள்"

என கம்பன் முதல் அறிமுகம் செய்கிறான். 'நல் அறமூர்த்தி' என்ற முதற்சொல்லே, தயரதன் சத்தியத்தை

என்றும் எப்பொழுதும் கடைப்பிடித்து ஒழுகக்கூடியவன்; அறவழியினின்றும் சிறிதும் விலகாதவன் என்பதைப் பிறகாண்டங்களில் வரும் நிகழ்ச்சிகொண்டு அறிவதற்கு வாய்ப்பாக முதல் பாடலிலேயே அவனை 'அறமூர்த்தி' என அறிமுகம் செய்வது கம்பனின் சிறப்புக்களில் ஒன்று. மேலும் இவன் செய்து முடிக்காத வேள்விகளே இல்லை என்பதை "யாரும் செய்யாத யாகம். இவன் செய்து மறந்த மாதோ" என்றும் தன் குடிமக்களுக்குத் தாய்போலவும், தாய், தந்தையர்களின் இறுதிக் கடன்களைச் செய்து அவர்களை நற்கதியில் உய்விக்கும் மகன் போலவும், நோயுற்ற காலத்தில் அதனை நீக்கி நலம் மேம்படுக்கும் மருந்து போலவும், நுணங்கு கேள்வி ஆயப் புகுங்கால் அறிவாகவும் இருந்தான் தயரதன் என்ற சக்கரவர்த்தி எனச் சிறப்புப் செய்கிறான் கம்பன்.

தன்னை நாடிவந்து யாசிப்பவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்தவன்; உயர்ந்த நூல்களைக் கற்றுத் தெளிந்த பேரறிவாளன்; பகைக்கடலை தன் கோபத் தாலும், வாட்படையின் துணையாலும் நீந்திக் கடந்தவன்; மனம் நிறைவுபெற உலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்தவன் இந்தத் தயரதன் என்னும் அரசர்க்கு அரசன் என்று கம்பன் சொல்லும்பொழுது, அவனது ஆட்சியின் செழிப்பு, நாட்டின் வளமை, குடிமக்கள் மேன்மை, அறத்தின் வழிநிற்கும் பண்பு, கல்வி கேள்விகளின் சிறப்பு– ஆகியவற்றின் பன்முகங்களை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. இதன் காரண மாகத்தானோ என்னவோ இவன் பத்துத் திக்குகளிலும் தனது இரதத்தைச் செலுத்தி உலகை வென்று தயரதன் எனப் பெயர் பெற்றானோ என்றும் சிந்திக்கத் தோன்று கிறது.

ஏழு உலகங்களையும் தனது வலிமையால் ஆளுமை கொண்ட இவனது தாள்களில் உள்ள பொன்கழல்கள், அரசர்கள் தங்கள் மணிமுடியோடு, தயரதன் கால்களில் வணங்கி எழுந்ததால், தேய்ந்து போயினவாம் இதை—

"கோவுடை நெடுமணி மகுடக் கோடியால்
சேவடி அடைந்த பொன் கழலும் தேயுமால்"

என்று கம்பன் வர்ணிக்கிறான்.

அனைத்திற்கும் மேலாகத் தயரதனை இன்னுமொரு படி மேலே உயர்த்திக் காண்பிப்பதிலே கம்பன் பெருமை அடைகிறான். கம்பன் காலம் வரையில் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று இருந்த சங்ககால வழக்கை மாற்றி, தயதரனை உடம்பாகவும், மக்களை உயிராகவும் வைத்து, மக்களின் விருப்பங்கள், எண்ணங்களைச் செயல்படுத்துவதில் உயிரின் விருப்பத்தைச் செயல்படுத்தும் உடல்போல தயரதன் உடலாக இருந்து செயல்படுத்தினான் என்பதை,

"உயிர்எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்"

என எழுதி, தனது புதுமையை, புரட்சிகரமான கருத்தை சங்க காலத்திலிருந்து வழங்கிய கருத்துகளில் வேறுபட்டு, அதைத் தயரதன்பால் ஏற்றி மன்னன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்வதில் கம்பனுக்கு நிகர் கம்பனேதான்.

இப்படி தயரதனை வர்ணிக்கும் கம்பன் பல இடங்களில் காளிதாஸனைத் தனக்குத் துணையாகக் கொண்டிருக்கிறான் என்பதை "இரகு வம்சம்" (இரகு

வம்சம்— பாடல்கள் மொழிபெயர்ப்பு சு.ரா. ஜமதக்னி) காவியத்திலிருந்து அறியமுடிகிறது.

“தயரதன் அரசாள் நாட்டில் உறுபிணியபடிவைக் காதேல்
வயப்பகை வஞ்சகத்தார் இனிவரற் கிடந்தா னேது
நயமெலாம் பயன்களெல்லாஞ் சிறப்புற வையக்கு நல்கும்”

“விண்ணவர் கோனை விண்ணோர் வணங்குதல் போல இந்த
மண்ணவர் கோனைப் பல்லோர் மன்னோர் குறைவுறாத
திண்ணிய நகங்கள் காந்தி யான்முடி மணிகள் இன்னும்
ஒண்ணொளி மிகுந்து பாதம் பரவிட வணங்கினாரே”

என்றும், ‘இரகுவம்சம்’ கூறுகிறது. கம்பன் காளிதாஸனைக் குறைவறக் கற்றவன் என்று மேற்கூறிய பாடல்களால் அறியமுடிகிறது.

காளிதாஸன், தயரதன் உத்தர கோசலத்திற்கு அரசன் என்றும், இவனுடைய பட்டமகிஷிகள், தென் கோசல மன்னன் மகள் கோசலை, மகதமன்னன் மகள் சுமித்திரை, கேகயநாட்டு அரசர் மகள் கைகேயி என்றும், மூலநூல் ஆசிரியரான வான்மீகியும் கோசலை, சுமித்திரை, கைகேயி என்றே வரிசையிட்டுக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் கம்பன் இங்குச் சற்றே வேறுபட்டு கோசலை, கைகேயி, சுமித்திரை என வரிசைப்படுத்திக் கூறியிருப்பது நோக்கத் தக்கது.

அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தயரதனுக்கு மகப்பேறு இல்லை என்ற குறை மிகவும் வருந்தியது. “இரகுகுலத்தைச் சார்ந்த என் முன்னோர் பெருமைபட ஆண்ட இத்தரணி எனக்குப் பிறகு அரசு ஆள தக்கவர் இன்றி வேதனைப்படுமே” என்று எண்ணுகிறான். “இற்றை நாள் வரைக்கும் முனிவர்களும், அந்தணர்களும் எந்த

விதத் துன்பங்களும் இன்றி நலமாக இருந்தார்கள். எனக்குப் பிறகு அவர்களுக்குத் துன்பம் நேர்ந்தால் துடைப்பவர் யார் என்ற துயரம் என்னை வாட்டுகிறது" என்று தனது குலகுருவான வசிட்டனிடத்தில் சொல்லு கிறான்.

இதனைச் செவியுற்ற வசிட்டன், தேவர்களுக்குத் திருமால் அருளியதை நினைவுகூர்கிறார். "கச ரத துரக மாக்கடல் கொள் காவலன் தயரதன் மதலையாய் வருதும் தாரணி" என்ற திருமால் வாக்கை எண்ணுகிறான். எனவே, மகப்பேறு வேள்வி செய்தால் தயரதன் குறை தீரும் எனச் சொல்லுகிறார். காசியப முனிவருடைய மைந்தன் விபாண்டகன், அவருடைய மைந்தனான "ஒரு கலைமுகச்சிருங்க உயர் தேவன்" வருதல் வேண்டும். அம்முனிவரால் செய்யப்படும் வேள்வி முடிந்தால் உனக்கு மகப்பேறு நிச்சயம் கிட்டும் என்றும் சொல்லு கிறார்.

கலைக்கோட்டு மாமுனிவனை அழைத்துவர, அங்கநாடு சென்று அந்நாட்டு அரசன் உரோமபாதனை அணுகி, முனிவனை அழைத்து வந்து வேள்வி செய்யச் சொல்லி தயரதனிடம் வசிட்டன் சொல்லவும், தயரதன் அங்கநாட்டிற்குச் சென்று, உரோமபாதனை வேண்டி, கலைக்கோட்டு மாமுனியை மகப்பேறு வேள்விசெய்ய அனுப்புமாறு கேட்கிறான்.

உலகம் முழுவதும் தன் ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் தயரதன், அரசர்க்கு அரசன், விரும்பி யிருந்தால் அங்கதேச அரசன் உரோமபாதனுக்கு ஓலை யொன்று போக்கி முனிவனைத் தருவித்திருக்க முடியும். ஆனால் தனது ஒப்பற்ற பண்பினாலும் அறத்தின்

வழிநிற்பவன் ஆதலாலும் தவத்திற் சிறந்த முனிவர்களை அழைப்பது என்றால் அழைப்பவரே நேரில் சென்று முறைப்படி வணங்கி அழைத்தல்தான் மரபு என்பதற்காக தயரதன் இவ்வாறு செய்தான் என்பது இங்கு நினைவு கொள்ளத் தக்கதாகும்.

கலைக்கோட்டு மாமுனிவன் அயோத்தி வருகிறான். வசிட்டர் முதலியவர்களோடு அவரை எதிர்கொண் டழைத்து, வடிவுடை மடந்தையர் வாழ்த்து எடுப்ப, மணிமண்டபத்திற்கு முறையே அழைத்துச் சென்று தூய மணிச்சிங்காசனத்திலே இருத்தி, செய்ய வேண்டிய அதிதி சத்காரியங்களைச் செய்தான் தயரதன். பின்னர் கலைக்கோட்டு மாமுனியிடம் "தருமம், மாதவம் போன்று ஒளிர் புனித, நின் அருளில் பூத்த என் ஆன்றதொல்குலம். இனி அரசின் வைகுமால்; யார்தவம் உடைமையும், இழப்பும் இன்றால் அரோ" எனப் பேசுகிறார். முனியின் வருகையால் தயரதனது ஆட்சி இனி நிலைத்து நிற்கும், தவமும் இழப்பு இலாது போயிற்று எனக் கம்பன் பேசுகிறான். "நல்ல நெடுந்துணையாக வ:சிட்டன் இருக்கும் போது உனக்கு ஏது குறை? என்னை இங்கு அழைத்தது அசுவமேத யாகம் செய்யத்தானா" என விசிட்டனாகிய முனிவன் கேட்கிறார். "அறுபதினாயிரம் ஆண்டுகள் இவ் வுலகை உறுகண் ஏதுமின்றி, இந்த நிலத்தின் சுமையைத் தாங்கினேன். எனக்குப் பிறகு இதை ஆளத் தனையர் வந்திலர். எனவே "அலப்புநீர் உடுத்த பார் அளிக்கும் மைந்தரை, தலப்புகழ்பெற, இனி நல்க வேண்டுமால்" என வேண்டுதல் செய்கிறான். முன்னரே வசிட்ட னிடத்தில் சொல்லும் பொழுது, "என் பின் வையகம் மறுகுவது என்பது ஓர் மறுக்கம் உண்டு அரோ" என்று சொல்லியிருப்பதையும் இங்கு நினைவு கூரலாம்.

கலைக்கோட்டு மாமுனிவன் வண்திறல் மைந்தரை அளிக்கும் மாமகம் ஒன்று செய்ய இயைந்து, உடன் அதற்கான தக்க ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறார். தயரதன் ஆணையின்படி வேள்விக்கு வேண்டிய அனைத்து உபகரணங்களும் வர, நன்னீராடி வேள்விச் சாலை அடைகிறான். கலைக்கோட்டு மாமுனி நடத்திய இவ்வேள்வி, ஓராண்டு காலம் நடக்கிறது. வேள்வியின் இறுதியில் மகப்பேற்றைத் தரவல்ல ஆகுதியை முனிவன் கொடுக்க, வேள்வித் தீயில் எழுந்த பூதம், பொன் தட்டில் அமுதம் ஒத்த பிண்டத்தைக் வேள்விக்குண்டத்தின் அருகில் தரையில் வைத்து மறைந்து போனது. “உரிய நல் அமுதினை, உரிய மாதர்க்கு, அத்தகு மரபில் நின்று அளித்தியால்” என முனிவன் கூறுகிறான். தயரதன் கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகியோருக்கு முறையே ஒரு பங்கை அளித்தனன் என்பதைக் கம்பர்,

“காமறு கோசலை கரத்தில் ஒரு பகிர் தாம் உற அளித்தனன்”

“கைகயன் தனையைதன் கரத்தும் அம்முறை செய்கையின் அளித்தனன்”

“நிமித்திரு மரபுளான், முன்னர் நீர்மையின் சுமத்திரைக்கு அளித்தனன்”

எனவும் பங்கீட்டு முறையைக் கூறுகிறான். பின்னர் மீண்டும் “அப்பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தது தன்னையும் சுமித்திரை தனக்கு நல்கினான்” (இரண்டாவது முறை சுமத்திரைக்கு மட்டும் அளித்தான்.) இந்தப் பங்கீட்டு முறை பல இராமாயணங்களிலே பலவாறாகச் சொல்லப் பட்டிருப்பதும், கம்பன் வான்மீகத்தினின்று மாறுபட்டு இருக்கிறான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பின்னர், வசிட்டனின் ஆணைப்படி கலைக்கோட்டு முனிவனைத் தொழுது, “எந்தை உன் அருளினாலேயே

எனக்கு உண்டான துன்பங்கள் எல்லாம் நீங்கப் பெற்றன. இதைவிட வேறு நல்லதவம் எனக்கு உண்டோ" எனச் சொல்லி அவரை மீண்டும் அங்க நாட்டிற்கு முறையாக வழியனுப்பி வைத்தான்.

உரிய காலத்தில் தயரதன் தேவிமார்கள், முறையே நால்வர்களை, "புதல்வர்களாகப் பெற்றார்கள். தயரதனிடத்தில் செய்தி சொல்லப்பெற்றது. அவனுடைய மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. நாட்டில் ஏழாண்டுகளுக்கு வரி வசூல் இல்லை எனவும், கருவூலங்கள் திறந்துவிடப் பெற்று ஏழை, எளிய மக்கள் வேண்டிய செல்வத்தை எடுத்துச் செல்லலாம் என்றும் முரசறைவிக்கச் சொல்கிறான். அதுமட்டுமா! சிறைகளில் இருக்கும் பகை யரசர்களை விடுதலை செய்து அவர்களை தங்கள் நாட்டிற்குச் செல்லலாம்" எனவும் கூறுகிறான். இந்நிலை இப்பொழுதுங்கூடக் காணமுடிகிறது... மக்களாட்சி பீடத்தில் இருப்பவர்கள், தலைவர்களின் பிறந்த நாட்கள், விடுதலைத் திருநாள் போன்றவற்றில் சிறைக் கைதிகளை விடுதலை செய்வதும், குற்றவாளிகளின் தண்டனைக் காலத்தையும் குறைப்பது போன்ற வழக்கம் இன்றும் இருந்து வருவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இச் செய்திகள் அனைத்தும் அவனது மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டைத் தொட்டு நிற்கின்றன.

பிறந்த குமாரர்களுக்கு விதிப்படி உபநயனம் முதலான சடங்குகள் செய்வித்து, குலகுருவான வசிட்டரிடம், கல்வி, போர் வித்தை இவைகளைக் கற்றுத் தருமாறு வேண்ட, அவரும் முறையே கற்றுத்தந்து, அவர் களை அனைத்து வித்தைகளிலும் திறம் மிக்கவர்களாக ஆக்குகிறார். நான்கு குமாரர்கள் இருந்தும், இவர்களில் ஓவிய எழிலுடைய இராமனை அல்லாது வேறு உடலும்,

உயிரும் தனக்கு இல்லையென தயரதன் நினைக்கிறான். இராமன் ஒருவன் மாட்டு மட்டுமே தயரதன் அன்பையும், பாசத்தையும் பொழிந்தான் என்று கம்பன் பேசுவான். மற்றவர்களைப் பற்றி அவன் நினைப்பதே இல்லை என்பதை உணர முடிகிறது. இதோடு தயரதனின் பால காண்டத்தின் முதற்பகுதி திருஅவதாரப் படலத்துடன் முடிகிறது. இராவணன் மற்றும் அரக்கர்கள் அழிவுக்கான அங்குரார்ப்பணம் —தயரதனின் மூலமாக— முதற் காட்சியாக இங்கு நிறைவு பெறுகிறது.

அடுத்த காட்சி விசுவாமித்திரனைச் சந்திப்பதில் ஆரம்பமாகிறது. "துனியுறு முனிவன்" தோன்றினான் என்று எடுத்த எடுப்பிலேயே கௌசிகனை அறிமுகப் படுத்துகிறார் கம்பர். வருகை தந்த விசுவாமித்திரனை முறைப்படி, வணங்கி, "இனிது அருத்தியொடு இருத்தி, இணை கமலச் சரண் அருச்சனை செய்து, இன்றொடு துணிந்தது என் வினைத்தொடர்" எனச் சொல்கிறான். தாங்கள் இங்கு எழுந்தருளியது, நிலம் செய்த தவமோ, அல்லது வினைப் பயனோ என்றால், எதுவுமே இல்லை. இது எங்கள் குல முன்னோர்க்ள் செய்த தவம் என்று புகழ்ந்து பேசி கௌசிகனை மகிழ்வித்து, "இனிச் செய்வது அருளுக" எனச் சொல்லுகிறான். தருவனத்துள் தான் செய்ய இருக்கும் தவவேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்களை, தடுத்து செருமுகத்துக் காக்க வேண்டும். அதற்காக, 'நின் சிறுவர் நால்வரிலும் கரியசெம்மல் ஒருவனைத்'தர வேண்டும் எனக் கேட்கிறார் கௌசிக முனிவர்.

எவ்வாறு கேட்டான் என்பதைக் கம்பர், "உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்" எனக் குறிப்பிடுவார்.

இங்கு ஏற்கெனவே இராமனைத் தவிர வேறு உடலும், உயிரும் தனக்கு இல்லை என்று நினைத் திருந்த தயரதனிடம், இராமனையே தருமாறு கேட்டது அவனை நிலைகுலையச் செய்தது. இங்குத் தயரதனுடைய நிலையை கம்பன் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணில் ஆம்பெரும் புழையில் கனல்
நுழைந்தா லெனச் செவியில் புகுதலோடும்
உள்நிலாவிய துயரம் பிடிந்து உந்த,
ஆர்உயிர் நின்று ஊசலாட,
கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
கடும் துயரம்– காலவேலான்"

இருப்பினும் விசுவாமித்திரனிடம், "தாங்கள் செய்யும் யாகத்தைத் தடை செய்யும் அரக்கர்களுக்குத் துணையாக சிவனோ, நான்முகனோ, இந்திரனோ யார் வந்தாலும், நானே முன்னின்று வேள்வியைக் காப்பேன்" எனக் கூறுகிறான். முன்னர் கௌசிகமுனி, தயரதனைப் பார்த்து எங்களுக்கு ஏதேனும் துயர் வந்தால் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரமனையும் வெள்ளிப்பனி வரையில் வீற்றிருக்கும் சிவபெருமானையும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனையும், மணிமாட அயோத்தி மன்னனாகிய உன்னிடமும் தானே நாங்கள் புகலுக்கு வருவோம் என்று கூறியதை, இங்கு நினைந்து, அந்த மூவர்களில் திருமாலைத் தவிர்த்து மற்ற இருவர்களையும் இந்திரனையும் குறிப்பிட்டு அவர் சொல்வது சிந்திக்கக் கூடியது. முனிவனின் சினம் கண்ட வசிட்டன்,

தயரதனிடம், "ஐயா, நின்மகற்கு அளவு இல் விஞ்சை வந்து எய்தும் காலம் இன்று எதிர்ந்தது" எனக் கூறி இராமனை முனிவருடன் அனுப்ப உடன்படச் செய்தான். குருவின் வாசகம் கொண்ட கொற்றவன், திருவின் கேள்வனை அழைத்து வாருங்கள் என, இராமன் அருகில் வருகிறான். அவனுடன் இணைபிரியாத் தம்பி இலக்குவனும் உடன் வருகிறன். அவர்களை முனிவர்க்குக் காட்டி இனி இவர்களுக்கு "நல் தந்தை நீ தனித்தாயும் நீ" எனச் சொல்லி அவர்களை அழைத்துச் செல்லுமாறு சொல்கிறான். விசுவாமித்திரரும் தயரதனை வாழ்த்தி இருவரையும் கூட்டிக் கொண்டு செல்கிறார். இதனோடு பாலகாண்டத்தில் தயரதனின் இரண்டாம் காட்சி முடிவு பெறுகிறது.

மூன்றாம் காட்சி எழுச்சிப் படலத்தில் தொடங்கி, கடிமணப் படலத்தில் முடிகிறது. மிதிலையில் ஜனகனின் அரண்மனையில், சீதையைக் கரம்பற்றுவதற்காக வில்லை நாணேற்றி இற்று விழச்செய்ததும், ஜனகன் விசுவா மித்திரனிடம் சீதை திருமணம் இன்றே ஒரு பகல் நடத்தலாமா அல்லது தயரதனை அழைத்து நடத்தலாமா என்று கேட்கிறான். தயரதன் வந்து நடத்தலே நன்று என முனிவன் சொல்ல, தூதுவன் மூலம் அயோத்திக்கு ஓலை அனுப்பப்பெறுகிறது. தூதன் வந்து அரசவையில் மன்ன னிடம் கொடுக்க அதனை வாசிக்குமாறு திருமந்திர ஓலை நாயகனிடம் சொல்ல அவன் மகிழ்வுடன் வாசிக்கிறான்.

அரசசபையில் படிக்கப்பட்ட அந்த ஓலையில், ஜனகமன்னன் இராமனின் வீரச்செயலைப் புகழ்ந்து பேசி எழுதி இருந்தது கண்டு, தயரதனுடைய வயிரத்தோள்கள் மலைபோல பூரித்துப் பெருத்தன என்கிறான் கம்பன்.

தக்கனது வேள்வியை அழித்த கற்றைக் வார்சடை முடிக்கணிச்சி வானவனான சிவபெருமானுடைய வலிய வில்லானது "இற்ற பேர் ஒலிகொல் அன்று இடித்தது ஈங்கு" என்று வியப்புற்று தூதனுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கிச் சிறப்பிக்கிறான். "மிதிலை நகரை நோக்கி, நம் சேனையும் அரசும் செல்கஎன, ஆனைமேல் மணமுரசு அறைந்து சொல்லுக" எனக் கட்டளை யிடுகிறான். நால்வகைப் படைகள், பரிவாரங்கள் சூழ, மிதிலை அடைகிறான் தயரதன்.

மிதிலைநோக்கி வரும் தயரதனை ஜனக மன்னன் தன் படையோடு எதிர்கொண்டு அழைக்கிறான். அருகில் வந்தவுடன் தன் சேனையைப் பின் நிறுத்தி தேரிலிருந்து இறங்கும் மன்னனை, தயரதன் கைகளால் சைசைகாட்டி, வருமாறு அழைக்க, ஜனகன் தேரில் ஏறியதும் அவனை, "ஐயனும் முகம் மலர்ந்து அகம் உறத்தழுவினான்."

இங்கு, மன்னர் ஒருவரை வரவேற்குங்கால், வரவேற்கும் மன்னர் எவ்வாறு அரசுக்குரிய முறைகளில் நடந்துகொள்ள வேண்டும், எந்த மரபுகளைப் பின்பற்ற வேண்டும், விருந்தினராக வரும் மன்னர் அதை எப்படி ஏற்றுக்கொள்வர் என்பன போன்ற பாரம்பரிய முறைகள் இங்கு வெகுவாகச் சொல்லப்படுகின்றன. இதனை வரவேற்புமுறை (Protocol) எனச் சொல்லுவார்கள். இன்றும் இந்த நடைமுறைகள் வேற்று நாட்டு அதிபர் வரும்பொழுது கடைப்பிடிக்கப்படுவதை அறியலாம். பின்னர் இராமன் தந்தையை வந்து வணங்கி நின்றான். இந்த நிகழ்ச்சியைக் கம்பன் அற்புதமாக வர்ணிக்கிறான்.

"தேவரும் தொழுகழல் சிறுவன், முன்பு பிரிவது ஓர்
ஆவிவந்தென்ன வந்து, அரசன்மாடு அணுகினான்"

முன்னர் விசுவாமித்திரனிடத்தில் கையடையாக இராம இலக்குவர்களைத் தந்து அவர்கள் முனிவனுடன் போகும்போது,

"அன்ன தம்பியும் தானும் ஐயன் ஆம்
மன்னன் தன்னுயிர் வழிக் கொண்டாலென"

போயினர் என்ற கம்பன், இந்த இடத்திலே முன்பு பிரிந்து சென்ற உயிர் மீண்டும் வந்து சேர்ந்தது" என்று தொடர்பு படுத்திக் காட்டியிருப்பதுதான் அவனது தனித் தன்மை. பின்னர் விசுவாமித்திரனிடம் திருமண நாளைக் குறிக்கும் படி சொல்ல, "நாளை, என, உற்றபகல்' நல்தவன் உரைத்தான். இராமன்—சீதை திருமணம் நடைபெற்று யாவரும் மகிழ்ந்திருந்தனர் என்பதோடு மூன்றாம் காட்சி முடிகிறது. இக்காட்சியிலே சிறிதளவே தயரதன் பேசப்பெறுகிறான்.

இனி பால காண்டத்தின் கடைசிப்படலமான பரசு ராமப் படலத்தோடு தயரதன் காட்சிகள் முடிவடை கின்றன. தயரதன் தன் பரிவாரங்களோடும், புதுமணத் தம்பதிகளான சீதை—இராமன் இவர்களோடும் அயோத்தி நோக்கிச் செல்கிறான். போகும்பொழுது சில துர் நிமித்தங்கள் நிகழ்கின்றன. உடன் மேற்கொண்டு செல்லாமல் மணி அணித் தேரோடும் நின்றான். அற நெறியில் வந்தவனாகிய தயரதன், உடன் நிமித்திகனை அழைத்து "என்ன பலன் இச்சகுனத்தால் விளையும், உள்ளது உள்ளபடி உரை" என்கிறான். நிமித்திகனும் "இன்றே வரும் இடையூறு, அது நன்றாய் விடும்" என்று சொல்லிவிடுகிறான்.

ஊழிக்காலமுடிவில் கடலின் கண் எழும் வடவா முகாக்கினியைப் போலவும், அத்தீயாரின் மிசை வருவது

போலவும் வருகிறான், மழுவாளவன் எனப் பெயர் பெற்ற பரசுராமன். இதனை,

> "போரின் மிசை எழுகின்ற ஒரு மழுவின் சிகை புகைய
> தேரின் மிசை மலை சூழ்வரு கதிரும் திசை திரிய
> நீரின் மிசை வடவைக் கனல் நெடுவான் உறமுடுகி
> பாரின் மிசை வருகின்றது ஒரு படிவெஞ்சுடர் படர"

எனக் கம்பன் சொல்லும்பொழுதே கனலின் வெம்மையை உணர முடிகிறது அல்லவா?

இவ்வாறு கோபம் கொப்புளிக்க வரும் பரசு ராமனைக் கண்ட தயரதன் இவன் இங்கு வரக்காரணம் என்னவோ என எண்ணிப் பெருமூச்செறிந்தான். இந் நேரத்தில் இடையில் இராமனும் அங்கு வந்து இவர் யாரோ? எனக் கேட்கிறான். பரசுராமன் இராமனிடம் உன் தோள் வலியை அறிய வந்தேன் என்கிறான். இதனால் தன் மகன் இராமனுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என அஞ்சி, தயரதன் பரசுராமன் அடிகளில் வீழ்ந்து அவனிடம் அபயம் வேண்டுகிறான். நீ வென்ற புவனம் அனைத்தையும் காசிப முனிவர்க்குக் கொடுத்து நின்றாய். சிவனோ, பிரம்மனோ, திருமாலோ உனக்கு ஒரு பொருள் அல்லர். இச் சிறு மானிடர்களோ உனக்குப் பொருளாவார்கள் எனக் கேட்டு, "இவன் உயிரும் என் உயிரும் உனது அபயம் இனி" என்று கூறினான். "இதோ இருக்கிறானே இந்த இராமன் தனது கல்வி, கேள்வி, அதிகாரம் இவற்றால் வரும் கர்வத்தால் அறிவு தளர்ந்த, நின்பால் புரிந்த தீமைகள் ஏதாவது உளதோ" என்கிறான்.

மன்னனது வேண்டுகோளை மதியாது இராமன் நேர் எதிரே முனிவன் செல்ல அதைக் கண்டு தயரதன்

மூர்ச்சையுறுகிறான். இதனை, “மின்னால் அயர்வுறும் வாள் அரவு என வெந்துயர் உற்றான்” எனக் கம்பன் எழுதுகிறான்.

பின்னர் பரசுராமன் கொடுத்த வில்லை வாங்கி நாணேற்றி அவன் கர்வத்தை அடக்கி, அம்புக்குப் பரசு ராமனுடைய தவவலிமையை இலக்காக்கினான். பரசுராமன் ராமனைத் தொழுது விடை பெற்ற பின் தயரதனை இராமன் மூர்ச்சை தெளிவித்தான். பரசு ராமனால் தனது மகனுக்கு ஏற்படும் துன்பத்தைக் காண விரும்பாத தயரதன் துன்பமாகிய பெருங்கடலின் எல்லையைக் கண்டு நின்றான்.

இராமனின் வெற்றிக்குப் பிறகு மகிழ்ச்சி என்ற கரை காணாத கடலில் ஆழ்ந்தான் தயரதன் என்பதை,

“வெளிப்படும் உணர்வினன் விழுமம் நீங்கியே
தளிர்ப்புறு மதகரித் தானையான், இடை
குளிப்ப அருந்துயர்க் கடற் கோடு கண்டவன்
களிப்பு எனும் கரை இலாக் கடலுள் ஆழ்ந்தனன்”

என்று கம்பன் சொல்லுகிறான். இங்குத் தயரத னுடைய புத்திர பாசம் பெரிதும் வெளிப்படுகிறது.

பின்பு இராமனை ஆரத் தழுவி உச்சி மோந்து தனது கண்களினின்றும் பெருகிய ஆனந்தக் கண்ணீரால் கலசமாட்டினான். பரசுராமனின் கர்வத்தை அடக்கியதன் மூலம், இராமனே இம்மை, மறுமை ஆகிய பலன்களை, அவரவர்கள் வினைக்கு ஏற்ப அளிக்க வல்லவன் இது ‘மெய்ம்மை—சத்தியம்’ என்று சொல்லுகிறான். பின்னர் அவர்கள் அயோத்தி வந்தடைந்தார்கள் என்பதோடு பாலகாண்டம் நிறைவு பெறுகிறது.

தொடக்கத்திலே வீரம் மிக்கவனாக, சம்பராசுர யுத்தத்தில் இந்திரன் சார்பாகப் போர் புரிந்து அவனைத் தோற்கடித்தவனாகவும், பத்துத் திக்குகளிலும் தனது வலிமையால் ஆளுமை பண்ணியவனாகவும் சித்திரிக்கப் பட்ட தயரதன், கடைசியில் பரசுராமனை எதிர்கொள்ள இயலாமல், அவன்தாள் வணங்கி அபயம் கேட்பதற்குக் காரணம் இராமன்மீது, அவனுக்கு இருந்த அளவற்ற பாசமும் அன்புமேயாகும். இராமனில்லாது நானில்லை என்று சொல்லும் அளவிற்கு உயிரையே அவன்மீது வைத் திருந்ததும் இப்படலத்தில் மிகுதியாகப் பேசப்பட்டிருக் கிறது.

தயரதன் என்ற பாத்திரம், பால காண்டத்தில் மிகுந்த அளவு பேசப்படவில்லையானாலும் கதையோட்டத்திற்கு ஏதுவாகப் புதல்வர்களைப் பெற வேள்வி செய்ததும், விசுவாமித்திர முனிவரோடு அனுப்பி சீதையோடு திருமணம் நடைபெற வாய்ப்பாக இருந்ததும், பின்வரும் காண்டங்களின் கதையோட்டத்திற்கு அஸ்திவாரம் இட்டதுபோல அமைந்தன எனக் கொள்ளலாம். அவனது செயல்களும் பாசமும். பணிவும் கைகேயிடம் அவன் கொண்ட தனித்த அன்பும் பின் அயோத்தியா காண்டத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன. அவனது செயல்கள் எல்லாம் தருமத்தின் வழி நிற்பதாதலால், கம்பர் தயரதனை அறிமுகப்படுத்தும்போது "நல் அறமூர்த்தி" எனப் பேசுகிறார். "தனி அறத்தின் தாயே" எனவும், "அறத்திற்கு ஆருளரோ மற்று" என்றும் பின்வரும் காண்டங்களிலே இராமனாலேயே இந்த "அற மூர்த்தியான" தயரதனைச் சொல்ல வைக்கிறார் கம்பர்.

■

5. மெய்யின் மெய்

கம்ப இராமாயணத்திலே அயோத்தியா காண்டம் மிகவும் முக்கியமானது. இராமாவதார நோக்கிற்குக் காரணமாக இருப்பது. இதில் வரும் பாத்திரங்களான தயரதன், கூனி, கைகேயி, இராமன், பரதன், இலக்குவன், குகன் ஆகியோர் ஏதோ ஒரு வகையில் காண்டத்தின் விறுவிறுப்பிற்குத் துணை செய்கிறார்கள். பாத்திரங் களின் தன்மை, குணங்கள், விருப்பு—வெறுப்புக்கள், கோப தாபங்கள் எல்லாம் குறைவற நிறைவுடன் விளங்குவனவாக அமையப்பெற்றிருக்கிறது. அனைத்துக் கும் மேலாக கதைப் போக்கின் திருப்புமுனையாக இக்காண்டம் அமைந்திருப்பதும் ஒரு தனிச்சிறப்பாகும். பல இடங்களிலே கம்பன் வால்மீகியோடு பெரும்பாலும் ஒட்டியே செல்வதைக் காண முடிகிறது. காளிதாசனின் "இரகு வம்சத்தையும்" நன்கு கற்றுத் தெளிந்தவனாகை யால் பல பாடல்களை அதன் பிரதிபலிப்பாகவே காண முடிகிறது.

காண்டத்தின் தொடக்கமே மந்திரப் படலத்திலிருந்து ஆரம்பமாகிறது. பரதன் மாமனுடன் கேகய நாட்டிற்குச் சென்றவுடன் வயது முதிர்ந்த தயரதன் எதிர்காலத்தைப் பற்றி நினைக்க ஆரம்பிக்கிறான். இராமனுக்கு முடிசூட்டி மகிழ எண்ணுகிறான். அதனை என்று காண்பேனோ என்று ஏங்குகிறான். இதனை வால்மீகி வெகு அழகாக,

"கதா நாம ஸுதம் த்ரக்ஷ்யாமி அபிஷிக்தம் அஹம் ப்ரியம்"

என்றும், குணத்தில் சிறந்தவன் இராமன். அவனை யுவ ராஜாவாக நியமிக்கப் போகிறேன் அப்பொழுதுதான் என் மனக்கவலை தீரும் என்கிறான்.

"கதக்லேசோ பவிஷ்யாமி ஸுதே தஸ்மின் நிவேச்ய வை"

என வான்மீகம் பேசுகிறது.

காளிதாசன் இரகுவம்சம் சர்க்கம் பன்னிரண்டிலே தயரதன் முதுமைப் பருவம், கைகேயிடத்திலுள்ள அச்சத்தினால் நரைமயிர் மேலிட்டு காதருகே வந்து "மன்னனே! ஆட்சியை இராமபிரானுக்கு அளிப்பாயாக என்று கூறவே வந்தது போல் காணப்பட்டது" என்கிறார். அதன் தமிழாக்கம் வருமாறு—

"மன்னனே ஆட்சியை மகனுக்கீகெனக்
கன்னமூ லத்தினில் நரையின் மேலிட்டுத்
துன்பளி கைகயிக் கஞ்சி மூப்பது
பன்னிடை வந்தெனக்காட்சி யளித்தது"

(இரகுவம்சம் மொழிபெயர்ப்பு— கரா. ஜமதக்னி)

இதனையொட்டி கம்ப இராமாயணத்தின் சில பதிப்புக்களிலே, குறிப்பாக வை.மு. கோ. பதிப்பில் இரண்டு பாடல்கள் படலத்தின் ஆரம்பத்திலே முதல் இரண்டு பாடல்களாகக் குறிப்பிடப்பெற்றிருக்கும். பல பதிப்புகளில் இப்பாடல்கள் மிகைப் பாடல்கள் வரிசையில் வருகின்றன.

தயரதன் கண்ணாடியின் முன் நின்று கொண்டு தன் உருவத்தைப் பார்க்கிறான். கன்னத்தின் ஒரு மூலையில் நரை வெளுத்த மயிர் ஒன்று காணப்பட்டதைக் காண் கிறான். இராவணன் செய்த தீங்குதான் இங்கு வந்து

நரைமயிராகத் தோற்றம் கொண்டதாக கம்பன் வர்ணனை செய்வதாகப் பாடல் அமைந்திருக்கிறது.

"மன்னனே அவனியை மகனுக்கு ஈந்து நீ
பன்னரு தவம்புரி பருவம் ஈதென
கன்ன மூலத்தினில் கழற வந்ததென
மின்னெனக் கருமை போய் வெளுத்தது ஓர் மயிர்"

"தீங்கிழை இராவணன் செய்த தீமைதான்
ஆங்குஓர் நரையதாய் அணுகிற்றாம் என
பாங்கில் வந்திடு நரை படிமக்கண்ணாடி
ஆங்கு அதில் கண்டனன்– அவனிகாவலன்"

இந்த இரண்டு பாடல்களைப் படிக்கும்போது காளிதாசனின் கவிதையிலே தோய்ந்து அவனது கருத்துக்களை அழுத்தமாக எடுத்தாண்டு இருப்பது காணக் கிடக்கிறது. மிகைப் பாடல்கள் வரிசையில் வந்தாலும் தயரதனின் எண்ண ஓட்டத்திற்கு இவை மெரு கூட்டுவதாகக் கொள்வது மிகவும் பொருத்தமென கம்பன் எண்ணிப் பாடியதாகவே கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

அவனி காவலனான தயரதன் ஆலோசனை மண்டபத்திற்கு வந்து, மந்திரக் கிழவர்களை வருவிக் கிறான். தேவர்களும், முனிவர்களும் மதிக்கும், மும்மூர்த்தி களுடன் நான்காமவர் எனத்தக்க வசிட்டமாமுனி வந்தார். பின்னர் மாட்சிமை மிக்க, எண்ணத்தில் ஒன்றியவர் களான அமைச்சர் வந்தனர். இவர்கள் நடந்ததைக் கொண்டு, நடக்கப் போவதைக் கண்டறியும் நுண்ணறி வாளர்கள்; விதியையும் மாற்ற வல்லவர்கள்; நடுநிலை நோக்கோடு நல்லறம் பேணுபவர்கள்.

வந்து முறைப்படி வணங்கி, தத்தம் ஆசனங்களில் அமர்ந்த மந்திரக்கிழவர்கள், அமைச்சர்களை நோக்கி தயரதன் "நான்பெற விரும்பும் அரிய பேறு ஒன்று உள்ளது. என் உணர்வோடு ஒன்றிய நீங்கள் அன்புடன் கேட்பீர்களாக" என ஆரம்பிக்கிறான்.

"என்னுடைய சூரிய குலத்து முன்னோர்கள் போலவே, முறை தவறாது இது நாள் வரை இந்த அரசுப் பொறுப்பைச் சுமந்துகொண்டு வந்தேன். கன்னியர்கள் தங்கள் கற்பைக் காப்பதுபோல், தருமம் கைதர, மன்னுயிர்களுக்கு நல்லதே செய்து வந்திருக்கிறேன். இப்பொழுது என் உயிருக்கு உறுவதாக ஆன்மநலம் பெற விரும்புகிறேன். மூப்பு என்னை வந்தடைந்துவிட்டது. இனியும் என்னால் இராஜ்ய பாரத்தைக் காக்க இயலாது. ஏன், கூடாதுதான்! உள்ளத்திலே உறங்கிக் கிடக்கும் காமம் முதலானவை கள்வர்போல் மறைந்து உறையும் வாழ்க்கை இனி எனக்கு அடுக்காது."

"கள்ளரின் கரைந்து உறைகாமம் ஆதிஆம்
உள்–உறை பகைகளுக்கு ஒதுங்கி வாழ்வெனோ?"

"இப்பிறப்பிலே பிறந்தவர்கள் எல்லோரும் இறப்பது திண்ணம் என்ற பேருண்மையை மறப்பதைவிட வேறு கேடுகள் உண்டோ? துறப்பு எனும் தெப்பம் துணை இல்லாவிட்டால், பிறப்பு எனும் பெருங்கடலை யார் கடக்க முடியும்?" என்று பேசுகிறான் தயரதன்.

இங்கு திருவள்ளுவரின் "பிறவிப் பெருங்கடல் நீந்துவார்— நீந்தார் இறைவன் அடி சேராதார்" என்ற குறளை மனத்திலே கொண்டு தக்க இடத்தில் தயரதன் வாயிலாகக் கம்பன் இதைக் குறிப்பிடுகிறான்.

"பிறவி என்னும் இவ் இருஞ்சிறை கடத்தலின் இனியது யாவதோ" என்றும், "குழைத்தது ஓர் அமுதினைக் கோடல் நீக்கி, வேறு அழைத்த தீவிடத்தினை அருந்துதல் ஆகுமோ என்றும், நெடிது நாள் உண்ட எச்சிலை நுகர்வது இன்பம் ஆகுமோ? எனவும் பலப்பல காரண காரியங்களைக் காட்டி, இறுதியில், "இராமன் தந்தை செருக்களத்தில் உயிர் துறந்தானில்லை. மூப்பு அடைந்த பின்பும் ஆட்சியைத்தர முனைந்தானில்லை என்ற அவச்சொல் பிறந்துவிட்டால் "பிறந்திலன் என்பதின் பிறிது உண்டாகுமோ" என்கிறான்.

"பெருமகனாகிய இராமன் எனக்குப் பிறக்க, திருமகளாகிய சீதையை அவன் மணம் முடிக்கக் கண்ட நான், இராமன் நிறை குணத்து அவனிமாது எனும் ஒரு மகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன்" ஆதலால், "இராமனுக்கு அரசை நல்கி இப்பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறும் மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்" இது குறித்து உங்கள் கருத்து என்ன? என வினவுகிறான்.

இவ்வாறு தயதன் சொன்னதும் ஒரு பக்கம் தயரதனைப் பிரிவதனாலாகிய வருத்தம், மறுபக்கம் ,இராமன் முடிசூட்டுவதில் மகிழ்ச்சி இவ்வாறு அவர்கள்— .அமைச்சர் குழாத்தினர்— "இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஜுர் ஆ என இருந்தார்" எனக் கம்பன் குறிப்பிடுகிறான். தயரதன் கருத்திற் வசிட்டன், உட்பட அனைவருமே உடன் பட்டுப் பேசுகிறார்கள்.

"உன் குலத்தில் உள்ளவர்கள் யாவர் இராமனைப் பெற்றார்கள். இது நீ செய்ய வேண்டிய கருமமும் கூட. எல்லாவற்றையும் கற்றுத் தெளிந்த உனக்கு இனி

கடைப்பிடிக்க வேண்டிய தருமமும் இதுதான். பெரும் புகழ்ச் சானகியோ, பூமி தேவியைவிட, மலைமகளைவிட, துர்க்கா தேவியைவிடச் சிறந்தவள். கண்ணைக் காட்டிலும் உண்ணும் நீரைக் காட்டிலும் உயிரைக் காட்டிலும் இராமனே மிகச் சிறந்தவன். அனைவரும் அவனையே உவப்பார்கள்" என வசிட்ட முனி கூறுகிறார்.

இவ்வாசகங்களைக் கேட்ட தயரதன் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாகி கண்களில் நீர் அரும்ப, முனிவரின் மலர்ப்பாதங்களை வணங்கி,

"இனிய சொல்லினை; எம்பெருமான் அருள் வழியின்
தனியன் நானிலம் தாங்கியது; அவற்கு இது தகாதோ?

என்றும், என் குலத்து அரசர்கள், இப்புவியில் பெரும் புகழ் பெற்றார்கள். வேள்விகள் பலவும் செய்து இரு வினைகளையும் முடித்தார்கள். இப்பொழுது அந்த அருள் எனக்குக் கிடைத்திருக்கிறது" என உள்ளம் மகிழ்ந்து பேசுகிறான் தயரதன்.

பின்னர் சுமந்திரன், "மந்திரக் கிழவர்களின் ஒருமித்த கருத்தின்படி நின் முதல் மணிப் புதல்வனை முறையால் அரசு ஆக்கி பின்னர் வானப்பிரஸ்தத்தைக் கடைப் பிடிக்க" எனச் சொல்லுகிறான். தயரதன் சுமந்திரனைப் பார்த்து, "நீயே திருமகள் கொழுநனாகிய இராமனை உடன் அழைத்து வா" எனக் கட்டளை இடுகிறான். சுமந்திரன் இராமனிடத்தில் செய்திகளைச் சொல்லி அவனை அழைத்து வருகிறான். வந்த இராமன் தயரதனை வரன் முறை வணங்கினான். வணங்கிய இராமனைத் தன் மார்புறச் சேர்த்துத் தழுவிக் கொண்டான் தயரதன். எதற்காகத் தழுவிப் பார்த்தான்?

"நீர் சூழ்ந்த இந்தப் பரந்த உலகைக் காக்கக் கூடிய வலிமை இராமனிடத்தில் உள்ளதா" எனப் பார்க்கத் தானாம். அதுமட்டுமன்று. தன்னுடைய தோள்கொண்டு, மார்பாலும் இராமனுடைய மார்பையும்– அது திருமகள் உறையும் மார்பு அல்லவா– எனவே அதனையும் குன்று போன்ற திரண்ட வலிமையுடைய தோளையும்– அளந்தான் என கம்பன் குறிப்பிடும்பொழுது–

"நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பது என்? நனிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்கல் அன்ன திண் தோளையும் மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தன்தோள் மார்பு கொண்டு அளந்தான்"

என மிகவும் நயமாக அந்தக் காட்சியை நமக்குப் படம் பிடித்துக் காண்பிக்கிறார்.

இராமனை அருகில் அமரச் செய்து, அகம் மகிழ்ந்து அன்புடன் பார்த்து, "மழுஏந்தி பெரும்புகழ் உடைய பரசுராமனையே வென்ற தோள் உடையவனே! உன்னிடம் வேண்டிப் பெறுவதற்கு ஒன்று உள்ளது. மூப்பின் காரணமாக என் உடல் தளர்ந்துவிட்டது. இந்த ஆட்சிப் பொறுப்பு என்ற பெரும் சிறையிலிருந்து விடுபட்டு, இனி கடைத்தேறும் வழியில் செல்ல நீ உதவிட வேண்டும். உரிமைக்கு உரிய மைந்தரைப் பெறுவது, இகபரசுகம் பெறவே என்பதே பெரியவர்கள் இயற்கை யாகக் கொண்டக் குணம். உன்னைப் பெற்ற நான் கவலைப்பட வேண்டியதில்லை. எனவே நான் சொல் வதைக் கேட்பாயாக" என்று தயரதன் இராமனிடத்தில் சொல்ல ஆரம்பிக்கிறான்.

"மைந்தா! நம் குல மரபினில் மணிமுடி வேந்தர், தம் தம் மக்களே கடன்முறை நெடுநிலம் தாங்க, ஐம்புலன்

களால் விளையும் மூன்று வகைகளான காமம், குரோதம், மயக்கம் ஆகியவைகளை ஒடுக்கி உய்ந்தார்கள். முற் பிறப்பில் செய்த நல்வினைப் பயன்களாலும், இந்தப் பிறவியில் செய்த வேள்விகளின் பயனாகவும் உன்னை நான் அருமையாகப் பெற்றேன், இனியும் நான் இந்த அரசியல் தொல்லையில் இருந்தால் உன்னைப் பெற்றதால் கிடைத்த பலன் நிறைவது எப்போது? யார் துயரம் இல்லாதவர்கள் உனக்குத் தெரியுமா? புவி ஆளும் மன்னர்கள் அல்லர்; இந்திரனைப் போல் வீரக்கழல் அணிந்தவர்கள் அல்லர்; தவங்கள், விரதங்கள் இவற்றைச் செய்தோரும் அல்லர்; தந்தை சொல் தட்டாத மக்களைப் பெற்றவர்களே துயரம் இல்லாதவர்கள்" என்ற பலத்த பீடிகையுடன் மேலும் பேசுகிறான். "அரச பாரத்தை உன் மீது சுமத்துவதாக நீ எண்ணாதே. மன்னர் சூடும் மணி மகுடம் அணிந்து, நல்லாட்சி நிலைத்திட, தர்மங்கள் தழைத்தோங்கச் செய்ய வேண்டும்" இதுவே நான் நின்னிடை விரும்புவது.

"மன்னவர் வானவர் அல்லர்; மேல் வானவர்க்கு அரசு ஆம்
பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர்;
பின்னும் மாதவம் தொடங்கி, நோன்பு இழைத்தவர் அல்லர்;
சொல் மறா மகப்பெற்றவரே துயர் துறந்தார்"

என தயரதன் சொல்வதாகக் கம்பன் அழகுறச் சுட்டுகிறான்.

இதைக் கேட்ட இராமன் மகிழவும் இல்லை; வெறுக்கவும் இல்லை. மன்னன் கட்டளை எதுவோ அதைச் செய்வதே தனக்குத் தர்மம் என நினைத்தான். அப்பணியைத் தலைமேற்கொள்ள முன் வந்தான்.

இங்கு வான்மீகத்திலிருந்து சிறு மாறுதலைக் கம்பன் செய்திருக்கிறான். சபையிலே தயரதன் கருத்தை அனைவரும் ஒருமனதாக ஆதரிக்கிறார்கள். உடனேயே தயரதன், இது புனிதமான சித்திரை மாதம்; யுவராஜ்யப் பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் சீக்கிரம் நடக்கட்டும் என்று பேசுகிறான்.

"சைத்ர: ச்ரீமானயம் மாஸ: புண்ய புஷ்பிதகானன:
யௌவராஜ்யாய ராமஸ்ய ஸர்வமேவோப கல்ப்யதாம்"

வசிட்டனும் நாளை சூரியோதயத்திற்குள் எல்லா ஏற்பாடுகளும் நடக்கட்டும் என அறிவிக்கிறார். ஜோதிடர்களும் நாளை நல்லநாள் என்று சொல்லுகிறார்கள். பிறகு தான் சுமந்திரனைவிட்டு இராமனை அழைத்துவரச் சொல்லுகிறான் தயரதன்.

ஆனால், கம்பனோ, அமைச்சர்கள், முனிவர்கள், மந்திரக் கிழவர்கள் அடங்கிய கூட்டத்தில்– சபையில், தனது கருத்தைச் சொல்ல அவர்களும் அதனை ஏற்கிறார்கள் எவ்வித மறுப்புமில்லாமல்– ஆனால் மிகவும் மகிழ்ச்சியுடன். பிறகுதான் சுமந்திரனை விட்டு இராமனை அழைத்துவரச் சொல்லுகிறான். இராமன் வந்த பிறகு அவனிடம், முடிசூட்ட இருப்பதாகச் சொல்லி, அவனது கருத்தையும் கேட்டு ஒப்புதல் பெற்று, முடிசூட்டுதலுக்கு நாள் குறிக்கச் சொல்லுகிறான். வான்மீகி, இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட தயரதன் விரும்புவதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் கம்பனோ ராஜ்ய பட்டாபிஷேகமே செய்ய இருப்பதாகக் கூறுகிறான்.

"நன்று சித்திர நளிர்முடி கவித்தற்கு, நல்லோய்!
சென்று வேண்டுவ வரன்முறை அமைக்க"

சொல்கிறான் தயரதன்.

பின்னர் மன்னர்களுக்கு ஓலைபோக்குகிறான். வந்து சேர்ந்த மன்னர்களிடம், இராமனுக்கு முடிசூட இருக்கும் செய்தியைத் தெரிவிக்கின்றான். அனைவரும் தயரதனுடைய கருத்தை மகிழ்வுடன் வரவேற்கிறார்கள்.

இந்த இடத்திலே கம்பனிலும் சரி, வான்மீகத்திலும் சரி படிப்பவர்களிடையே ஒரு நெருடல் ஏற்படத்தான் செய்கிறது. அமைச்சர்களுடனும் வசிட்டன் போன்ற முனிவர்களிடமும் தன் கருத்தைச் சொல்லி, பின்னர் பலதேச மன்னர்களுக்கு ஓலை அனுப்பி வரவழைத்து, அவர்களிடமும் தன் எண்ணங்களைக் கூறுவதாகக் கம்பன், வான்மீகி இருவருமே கூறுகிறார்கள். இந்த மன்னர்கள் வரிசையில் கேகய நாட்டு மன்னனையும், பரதனின் தாய்மாமனான யுதாஜித்தையும், மிதிலை மன்னனும் சீதையின் கேள்வனாகிய இராமனின் மாமனாராகிய ஜனகனையும் அழைக்காமல் ஏன் விடுத்தான் என்பதில் தான் நெருடல்!

திருமணம் முடிந்த கையோடு அயோத்தி வந்தடைந்த தயரதன், சிலகாலம் கழித்து பரதனை அழைத்து, உன் தாய்மாமனான யுதாஜித் உன்னைத் தன் நாட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டி விரும்பியதால்தான், இது வரை இங்கு தங்கியிருந்தான். அவனுடன் நீ செல் வாயாக எனப் பணிக்கிறான். பரதனும் இணைபிரியாத் தம்பி சத்ருக்னனுடன் கேகய நாடு செல்வதாக வான்மீகம் குறிப்பிடுகிறது. கம்பனும் அப்படியே குறிப்பிடுகிறான்.

"ஆணையின் நின்மூதாதை, ஐய! நிற்
காணிய விழைவது ஓர் கருத்தன் ஆதலால்
கேணியில் வளைமுரல் கேகயம் புக
பூண் இயல் மொய்ம்பினாய் போதி என்றனன்"

இங்குதான் ஐயமே ஏற்படுகிறது. அனைத்து மன்னர்களுக்கும் ஓலை அனுப்பிய தயரதன், கேகய மன்னனுக்கும், மிதிலை மன்னனுக்கும் மட்டும் ஓலை அனுப்பாதது ஏன்? கம்பரும், வான்மீகியும் இதற்குத் தக்க காரண காரியங்களை ஏன் கூறாமல் விடுத்தார்கள் என்பதுதான். காவியத்தின் கதைப்போக்கிலே, இராமாவ தாரத்தின் நோக்கம் அசுரர்களை அழிப்பதுதான். மேலும் தயரதன் கைகேயியைத் திருமணம் செய்துகொள்ளும் பொழுது கேகய நாட்டு மன்னனுக்குக் கொடுத்த ஒரு வாக்குறுதி, கைகேயியின் மூலம் பிறக்கும் மகனுக்குத்தான் ஆட்சியும், பட்டமும் என்பது. இது வான்மீகத்தில் சர்க்கம் 107இல் கன்யா சுல்கம் என விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது தயரதனுடைய உள் மனத்தை உறுத்திக்கொண்டே இருந்திருக்க வேண்டும். புத்திரர்கள் இல்லாதிருந்த நிலையில், கைகேயியின் அழகில் மயங்கி, அவளைத் திருமணம் செய்துகொண்டு, பின்னர் வேள்வி மூலம் நான்கு புதல்வர்களைப்பெற்று, மூத்தவனான இராமன் இருக்கும்பொழுது எவ்வாறு பரதனுக்குப் பட்டம் கட்ட இயலும் என்ற வினா அவனது உள்ளத்தில் எழுந்திருக்க வேண்டும்.

இராமனுக்குப் பட்டம் சூட்டுவது என்று முடிவு செய்து, அமைச்சர்களிடமும் தன் கருத்தைச் சொல்லி ஒப்புதல் பெற்ற பின்புதான் மன்னர்களுக்கு அழைப்பு விடுக்கிறான். கேகய நாட்டு மன்னனுக்கும் அழைப்பு விடுத்து அவனும் அரசவைக்கு வரும் பட்சத்தில், பரதனுக்கே ஆட்சியுரிமை கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தக் கூடும். ஜனகன் மூத்தமகனுக்குத்தான் பட்டம் சூட்டும் முறைமை இருக்கிறது எனவே இராமன் தான் பட்டத்திற்குரியவன் எனக் கூறியிருக்கக் கூடும்.

எனவேதான் இவர்கள் இருவருக்கும் அழைப்பு விடுக்காமல் போனானோ என்றும் எண்ணவேண்டி யிருக்கிறது.

வான்மீகத்தில் இராமனிடம் தயரதன் பேசும்பொழுது நாளைய தினம் நன்னாள்; உனக்கு யுவராஜ்ய பட்டா பிஷேகம் செய்ய இருக்கிறேன். என் மனம் விரைவினில் காரியத்தை முடிக்கத் தோன்றுகிறது. இத்தகைய காரியங்களுக்கு இடையூறுகள் பல ஏற்படலாம். பரதனும் வெளியூர் போயிருக்கிறான். இதுவே உன் மகுடாபிஷேகத் திற்குத் தக்க சமயமாகும். பரதன் மிகவும் நல்லவன்: உன்மேல் அபிமானம் நிறைந்தவன். ஆயினும் மனித புத்தி ஸ்திரமில்லாதது.

"கிம் து ஸித்தம் மனுஷ்யாணாம் அநித்ய மிதி மே மதி"

என்று பலவாறாக உள்ளத்தில் புதைந்து கிடக்கும் குமுறல் களையும், பீதியையும் வெளியிடும் வகையில் கூறுகிறான். இது வான்மீகத்தில் இருக்கிறது. கம்பன் இவற்றை இந்த இடத்தில் குறிப்பிடவில்லை என்பதையும் நாம் உணரவேண்டும்.

பின்னர் கணிதர்கள் முடிசூட்டு நாள் கூறுதலும், தயரதன் வசிட்டமுனியை அழைத்து, "வேண்டுவன ஒல்லையின் இயற்றி, நல்லுறுதி வாய்மையும் சொல்லுதி பெரிது" எனச் சொல்லுகிறான்.

வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டுதல் பற்றியும், ஆட்சியின் தன்மைகள் பற்றியும், நீதிநெறிகளையும் பலப்பலச் சொல்லுகிறான். வான்மீகத்திலே தயரதனே இவ்வறிவுரைகளைச் சொல்லுவதாக அமைந்திருக்கிறது.

வள்ளுவன் பறையறிவித்து இராமன் முடிசூட்டலைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கிறான். மாந்தர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, நகரை அலங்கரிக்கிறார்கள்.

இச்செய்தியைக் கேட்ட கூனி, கைகேயியின் அரண் மனைக்குச் சென்று, அவள் மனத்தை மாற்றி, தயரதனிடம் முன்பு சம்பராசுர யுத்தத்தின்போது அவள்பெற்ற இரு வரங்களில் ஒன்றினால் பரதனுக்கு அரசும், மற்றொன் றினால் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடேகவும் கேட்க உபாயம் சொல்ல, கைகேயி அரண்மனையில் தனிமையில் வளைதுறந்து அளகவாள் நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள்; தலைவிரி கோலமாகக் கிடந்தாள்.

இராமனுக்கு முடிசூட்டும் நற்செய்தியைச் சொல்லு வதற்காகத் தயரதன் பட்ட மகிஷியான கோசலையின் அரண்மனைக்குத்தான் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவனோ கைகேயியின் அரண்மனைக்குத்தான் செல்லு கிறான். பெற்றவள் கோசலையானாலும், வளர்த்தவள் கைகேயிதானே எனப் பலரும் எண்ணலாம். இங்கேயும் ஒரு நெருடல்.

கைகேயியின் அரண்மனையில் நுழைந்த தயரதன் அவள் இருக்கும் அலங்கோலமான நிலையைக்கண்டு அதிர்ச்சியுறுகிறான். கவலை கொள்கிறான். கீழே வீழ்ந்து கிடக்கும் மானை எடுக்கும் யானை போல அவளை வாரி எடுத்தான். ஆனால் அவளோ மீண்டும் தரையில் வீழ்ந் தாள்.

“உனக்கு என்ன நேர்ந்தது; யார் இகழ்ந்தார்கள்? அவர்கள் மடிவார்கள். உற்றது எல்லாம் சொன்ன பின் என் செயல்கள் காண்டி” என்றான்.

வான்மீகத்தில் "தூக்கு தண்டனைக்கு உள்ளாகியவனை விடுவிக்க வேண்டுமா அல்லது நிரபராதியைக் கொல்ல வேண்டுமா? ஏழையைக் குபேரனாக்கவா அல்லது தனவானை ஆண்டியாக்கவா" என்று கைகேயியின் மோவாய்க்கட்டையை பிடித்துக் கொண்டு தகாதனவற்றை எல்லாம் செய்யத் தயாராக இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

“அவத்யோ வத்யதாம் கோ வா வத்ய: கோ வா விமுச்யதாம்
தரித்ர: கோ பவத் வாட்யோ த்ரவ்!'':வான் வாப்ய கிம்சன”

கைகேயி துயரதனிடம் வரங்கள் என்று சொல்லாமல், "பண்டைய இன்று பரிந்து அளித்தி" என்று கேட்கிறாள். தயரதனோ "உள்ளம் உவந்தது செய்வேன்; ஒன்றும் உலோவேன். வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை என்கிறான். அவளோ, இராமன் மீது ஆணை என்ற வார்த்தைகளைப் பெற்ற பின்னர், சம்பராசுர யுத்தத்தின் போது முன்பு நீ அளித்த இரண்டு வரங்கள் இப்பொழுது தந்திடுக என்கிறாள். வரங்கள் பெறுவதற்காக இத்துணைத் துயரம் நீ அடைய வேண்டுவதில்லை. இப்பொழுதே கொடுக்கிறேன் என்றான் "உரங்கொள் மனத்தவள் வஞ்சம் ஓர்கிலாதவனாகிய" தயரதன்.

பரதன் நாடாளவும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காடேகவும் ஆக இரு வரங்களைக் கேட்டாள். இதைக் கேட்ட உடனேயே தயரதனுடைய உள்ளம் துயரத்தால் தவித்தது. "நாகம் எனும் கொடியாள், தன் நாவின் வந்த சோகவிடம் தொடர" துணுக்குற்றான் என கம்பன் எழுதுகிறான்.

“வேகம் அடங்கிய வேழம் என்ன வீழ்ந்தான்”
“ஊதுஉலையில் கனல் என்ன, வெய்து உயிர்த்தான்”

“உலர்ந்தது நா: உயிர் ஓடலுற்றது: உள்ளம் புலர்ந்தது”

“ஓவியம் ஒப்ப உயிர்ப்பு அடங்கி ஓயும்”

“வன்கைவேல் வெம்புண் நுழைகிற்க உழைக்கும்ஆனை போல்வான்”

எனத் தயரனது துயரத்தை, சோகத்தை மிகவும் அற்புதமாக ஐந்து பாடல்களிலே கம்பன் வர்ணனை செய்கிறான். இராமன்பால் தயரதன் கொண்டுள்ள பாசம் இங்கு அபரிமிதமாய் வெளிப்படுகிறது.

கைகேயியைப் பார்த்து நீ புத்தி தடுமாறியது உண்டோ? நயவஞ்சகர் வந்து போதித்த வஞ்சகம் உண்டோ? உன்நிலை என்னவென்று சொல்லுவாயாக; என்மீது ஆணை எனச் சொல்லுகிறான். என்னிடம் யாரும் வந்து போதிக்கவில்லை; புத்தி பேதலிக்கவும் இல்லை. இப்பொழுது நீ இவ்வரங்கள் தந்தால் ஏற்றுக் கொள்வேன் இல்லையெனில் பழி உனக்கு வர, நான் இப்பொழுதே மாண்டுவிடுவேன் எனப் பதிலிறுக்கிறாள்.

“மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்ன னாகிய" தயரதன் சோர்ந்து விழுந்தான் கைகேயியின் சொற்கேட்டு, அறமே கொடியது; சத்தியம் சாகட்டும் எனப் பலவாறாகச் சொல்லியழுதான், பெண்களே இவ் வுலகில் இல்லை எனும்படி கூர்வாள் கொண்டு அழித்து நானும் கொடியவர்களுள் ஒருவனாக வீழ்வேன் என்று புலம்புகிறான்.

கைகேயியை இரந்தாவது இவள் மனத்தை மாற்றுவோம் என நினைக்கிறான். அவளது காலிலே விழுகிறான்– யார் தெரியுமா?

“கந்து கொல்யானைக் கழல் மன்னர் மேல் மேல்
வந்து முந்தி வணங்கி மிடைத் தாளனாகிய”

தயரதன், இராமன் பொருட்டு எதையும் செய்யத் தயராகிவிட்ட நிலையைக் குறிக்கிறது.

“இந்த அராசட்சியை உனது மகன் ஏற்றுக்கொள்ள மாட்டான். அவ்வாறு அவன் ஏற்றுக்கொண்டாலும் இந்த நானிலம் ஏற்காது. எல்லோரும் எள்ளி நகையாட வன்பழி கொள்வதால் என் பயன். உன் கூற்றை தேவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மண்ணுலக மாந்தர்கள் உயிர் வாழ விரும்பமாட்டார்கள். பின் யாரோடு இருந்து அவன் ஆட்சிபுரிவான்" என்று தயரதன் கேட்கிறான். இங்கு "கொள்ளான் நின்சேய் இவ்வரசு" என்று தயரதன் வாயிலாகக் கம்பன் குறிப்பிடுவதை ஊன்றிக் கவனித்தால் நிச்சயமாகப் பரதன் அரசுரிமையை ஏற்க விரும்ப மாட்டான் என்ற செய்தி நமக்குக் கிடைக்கிறது.

“யானே சொல்ல கொள்ள இசைந்தான் முறையாலே
தானே நல்கும் உன் மகனுக்குத் தரை”

என்று தயரதன் கூறுவதைப் பார்க்கும்பொழுது, என்னால் இராமனுக்குக் கொடுக்கப்பட்ட அரசை, முறையின் காரணமாக அவன் பரதனுக்கே கொடுத்து விடுவான் என்று சொல்லியதன் நோக்கம் கன்யா சுல்கத்தை நினைவூட்டுவதாக அமைகிறது எனவும் கொள்ளலாம். மேலும் கானகத்தில் இராமன் பரதன் சந்திப்பின்போது,

“வரன்நில் உந்தை சொல்மரபினால்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்
உரனில் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க என்னவே”

என்று இராமன் சொல்வது முன்னர் குறிப்பிட்ட முறை யாலே என்ற சொல்லிற்கு இலக்கணமாகவும், “உரனின்

நீ பிறந்தது உரிமை" என்பதாலே கன்யாசுல்கத்தை இராமன் தெரிந்திருந்தான் என்பதும் புலனாகிறது.

தயரதன் மீண்டும் வேண்டுகிறான். என் கண்ணை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். அதனினும் மேலான உயிரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். வள் ளன்மைக்குப் பெயர்பெற்ற கேகய நாட்டு மன்னன் மகளே "மண்ணே கொள் நீ: மற்றையது ஒன்றும் மற" என்கிறான். இதன்மூலம் தயரதன் இராமனிடத்தில் கொண்டிருந்த அளப்பரிய அன்பு, பாசம், அதே நேரத்தில் சத்தியத்தின் மீது கொண்டிருந்த அசையாத நம்பிக்கை, கொடுத்த வரத்தை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் வரம் கேட்டவளிடமே மன்றாடி ஒரு வரத்தைத் திரும்பப் பெறுவது சத்தியத்தின்பாற்பட்டதுதானே!

மேலும், "பேயினிடத்தில் இரந்து கேட்டால் அதுவும் தாய்போலக் கேட்டதைக் கொடுத்துவிடும். நீ இது தந்தால் பிழையாகுமோ" என பலப்பலவாறு கூறிக் கெஞ்சுகிறான்.

ஆனால் கைகேயியோ, முன்பு கொடுத்த வரங்களை தரத் தயங்கிக் கோபித்தால், இனி சத்தியத்தை யார் காப்பாற்றுவார்கள் எனக் கேட்கிறாள். கடைசியாக மீண்டும் ஒன்றைத் தயரதன் கேட்கிறான்.

"நின் மகன் ஆள்வான்; நீ இனிது ஆள்வாய் நிலம் எல்லாம்
உன்வயம் ஆமே ஆளுதி தந்தேன்; உரைகுன்றேன்
என் மகன், என்கண், என் உயிர், எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடு இறவாமை நய! என்றான்."

"இராமன் என்னைவிட்டு நீங்கிவிட்டால் நான் பிழைத்திருக்க மாட்டேன். என் உயிர் இப்பொழுது உன் அடைக்கலமாக இருக்கிறது" என மீண்டும் கேட்கிறான்.

"தந்த வரத்தைத் தவிர்க என்றால், உரன்தான் அல்லால் நல் அறமாகுமோ" எனக் கைகேயி பதில் இறுக்கிறாள். சத்தியத்தைச் சுட்டிக்காட்டி. இதனைக் கேட்ட மன்னன்,

"இடி ஏறுண்ட மால்வரைபோல் மண்ணிடை வீழ்ந்தான்"

"இது காறும் எல்வளையார் தம் இறையோரைக்

கொன்றார் இல்லை, கொல்லுதியோ, நீ கொடியாளே"

என்றும்,

"நா அம்பால் என் ஆர் உயிர் கொண்டாய், இனி ஞாலம்

பாவம் பாராது இன்னுயிர் கொள்ளப்படுகின்றாய்"

என்றும்,

"... என் மனை வாழும்

பெண்ணால் வந்தது அந்தரம் என்னப் பெறுவேனோ"

என்றும் பலப்பலச் சொல்லி அவளை நிந்திக்கிறான்; வருந்துகிறான்; துயரக் கடலிலே ஆழ்ந்துவிடுகிறான் தயரதன்.

நெஞ்சில் சிறிதும் ஈரமில்லாதவளாகிய கைகேயி, நீ கொடுத்த வாக்குப்படி– வரங்களின்படி– அவற்றை நிறைவேற்றாவிடில் நான் உயிர் துறப்பேன் எனச் சொல்லுகிறாள். இதனைக் கேட்ட தயரதன் இந்த இரண்டு வரங்களைத் தந்தேன். வசை வெள்ளத்திலே நீ உன் மகனோடும் நீந்துவாயாக எனக் கூறுகிறான்.

"ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என் சேய் வனம் ஆள
மாய்ந்தே நான்போய் வான்உலகு ஆள்வென் வசைவெள்ளம்
நீந்தாய், நீந்தாய் நின் மகனோடு நெடிது என்றான்"

கம்பன் இங்கு பயன்படுத்தும் சொற்கள், தயரதனின் மீளாச் சோகத்தையும் கைகேயியினிடத்து இருக்கும் மாறாத கோபத்தையும், இராமனில்லாமல் தானில்லை என்பதையும் சுட்டிக் காண்பிக்கும் வகையில் கடும் சொற்களாகவே அமைந்திருப்பதையும் காணலாம்.

வான்மீகத்திலே, "கணவனுடைய துன்பத்தைக் பெற்றுக் கொள்பவள்தான் மனைவி. யாரும் செய்யத் துணியாத கொடிய துன்பத்தைச் செய்யத் துணிந்த நீ என் மனைவி அல்லை. கொடியவளாகிய உன் வயிற்றில் பிறந்த பரதனும் என் மகன் அல்லன்" என்று தயரதன் சொல்லுவதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதைக் கேட்ட கைகேயி வெகுண்டு, ரோஷத்துடன் "இது என்ன உளறல். என் மகனை அரசனாக்கி, இராமனைக் காட்டிற்கு அனுப்பி, என் சக்களத்தியின் தொல்லையை நீக்கினால் தான், நீர் சொன்ன சொல் தவறாதவராக ஆவீர்" எனச் சொல்லுகிறாள்.

"ஸ்தாப்ய ராஜ்ய மம ஸுதம் க்ருத்வா ராமம் வனேசரம்
நிஸ்ஸ பத்னாம் ச மாம் க்ருத்வா க்ருதக்ருத்யோ பவிஷ்யஸி"

என்பது வான்மீகியின் ஸ்லோகம்.

இங்கு ஒரு குறிப்பைக் கம்பன் வான்மீகி இரண்டிலுமே காண முடிகிறது. கூனியின் பேச்சில் கோசலை ராஜமாதாவாக வந்தால் கைகேயிக்கு எந்த வகையிலும் ஏற்றம் இருக்காது. எதற்கும் அவள் தயவில்தான் வாழ வேண்டிவரும் என்ற விதையை ஊன்றியது இங்கே வெளிப்படுகிறது. "என் சக்களத்தியின் தொல்லை நீங்கி னால்தான்" என்ற சொல் இதனை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

தயரதன் கைகேயியின் அரண்மனையில் மூர்ச்சித்துக் கீழே கிடக்கிறான். வெளியிலே நகர மாந்தர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். மன்னனை அழைத்துவர சுமந்திரனை வசிட்டன் ஏவுகிறான். அழைக்க வந்த சுமந்திரனிடம் கைகேயி இராமனை உடன் இங்கு அழைத்துவா என்கிறாள். அங்கு வந்த இராமனிடம் உன் தந்தை உனக்கு உரைப்பது ஒன்று உண்டு எனச் சொல்லி,

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்,
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம் மேற்கொண்டு
பூழி வெங்கானம் நண்ணி புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று இயம்பினன் அரசன்"

என்று சொல்லுகிறான். "அரசன்" என்று குறிப்பதற்குக் காரணம் இராமன் மறுப்பு ஏதும் சொல்லாமல், ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே— இராமன் இச் சொல்லை— கட்டளையை ஏற்றுக் கானகம் செல்கிறான் என்று கதை நகர்கிறது.

தயரதனைக் காண வந்த வசிட்டன் அவன் நிலை கண்டு திடுக்கிடுகிறான். கைகேயியைப் பார்த்து, "அரசன் அயர்வான் நிலை என்ன" என்று கேட்க, "தன்னால் நிகழ்ந்த எல்லாம் தானே தெரியச் சொன்னாள்" கைகேயி. செய்திகளை உணர்ந்த வசிட்டன் மன்னனைத் தேற்று கிறான். அவளைக் கடிந்துரைக்கிறான்.

இந்நிலையில் மன்னன் தயரதன் கைகேயியை நிந்திக்கத் தொடங்கினான்; உணர்ச்சி மேலீட்டால்,

"கண்டேன்; நெஞ்சம் கனிவாய்; கனிவாய் விடம் நான் நெடுநாள்
உண்டேன்: அதனால், நீ என் உயிரை முதலோடு உண்டாய்;
பண்டே, எரிமுன், உன்னை, பாவி! தேவி ஆகக்
கொண்டேன் அல்லேன் வேறு ஓர் கூற்றம் தேடிக் கொண்டேன்"

என்றும், எதற்கும் நீ அஞ்சாத பாவி; பழி பாவத்திற்குக் கூட பயப்படமாட்டாய். இனி என்ன சொல்வது; நான் இறக்கப் போவது உறுதி. அப்பொழுது உன் கழுத்தின் நாண்—தாலி— இறங்குவதும் உறுதி. அதைக் கொண்டு உன் மகனுக்குப் பட்டாபிஷேகத்திற்கு கட்டும் காப்புக் கயிறாகக் கொள் எனச் சொன்னதோடு நில்லாமல்,

"சொன்னேன் இன்றே; இவள் என் தாரம் அல்லள்; துறந்தேன்;
மன்னே ஆவான் வரும் அப் பரதன்தனையும் மகன் என்று
உன்னேன்; முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு என்றான்"

பரதனையும் கைகேயியையும் முறையே மகன், மனைவி என்ற நிலையிலிருந்து— உரிமையிலிருந்து— தள்ளி வைத்து விடுகிறான். இக்குறிப்பு வான்மீகத்தின் அடிப்படையில் அமைகிறது.

இராமன் பிரிவு குறித்துத் தயரதன் சோகத்தை— புலம்பலைப் பதினொரு பாடல்களில் கம்பன் விவரிக் கிறான்.

"உடை மாமகுடம் புனைஎன்று உரையா, உடனே கொடியேன்
சடை மா மகுடம் புனையத் தந்தேன்! அந்தோ!"

"பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே, புகழின் புகழே,"

"மெய்யின் மெய்யே"

"தமியேன் புகழே— உயிரே— உன்னைப் பெற்றேன்
அருமை அறிவேன்— பிழையேன் பிழையேன்"

"கள்ளக் கைகேசிக்கு உதவி, புகழ்க் கை கொண்ட
வள்ளல்தனம் என் உயிரை மாய்க்கும்! மாய்க்கும்"

இச்சோகமயமான சூழ்நிலையை மேலும் காண விரும்பாத வசிட்டன் அவ்விடம் விட்டு அகல்கிறான். கணவனின் நிலைகண்டு கோசலை வருந்துகிறாள்.

அவளிடம் தான் சாபம் பெற்ற வரலாற்றைச் சொல்லுகிறான். கானகத்திற்கு வேட்டையாடச் செல்கையில், ஆற்றில் யானை தண்ணீர் குடிக்கும் ஓசை வரவே, தான் 'சப்த வேதி' என்ற பாணத்தைப் பிரயோகம் செய்ததையும், உண்மையில் அங்கு ஒரு அந்தணச் சிறுவன், தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்க, அந்த அம்பு அவன்மேல் பாய உயிர் மாண்ட சிறுவன் இறந்துபட்ட செய்தியை கண்ணிழந்த அவன் பெற்றோர்களிடம் சொல்லி, வருந்தியதையும், அதன் பொருட்டு எந்த தண்டனையும் ஏற்றுக்கொள்வதாகவும் இனி அவர்களை தன் பராமரிப்பில் பார்த்துக் கொள்வதாகவும் சொல் கிறான். ஆனால் அவர்களோ மிகவும் மனம் வருந்தி, எங்களுக்கு யாருமில்லை, உயிர்வாழவும் பிடிக்கவில்லை. நீயும் எங்களைப்போலவே புத்திர சோகத்தினால் உயிர் இழப்பாய் என்ற சாபத்தைக் கொடுத்து, உயிர் நீத்தார்கள் என்ற நிகழ்ச்சியைச் சொல்லி, அச்சாபத்தின் விளைவு தான் இராமன் பிரிவும், என் உயிர் நீங்குவதும்,

"அந்த முனி சொற்றமையன், அண்ணல் வனம் ஏகுதலும்
எம்தம் உயிர் வீகுதலும் இறையும் தவறா"

என்கிறான்.

இராமனைக் காட்டிலே கொண்டுபோய் விட்டுவந்த சுமந்திரன் தயரதனைக் காணச் செல்கிறான். தயரதன் அங்கு இருந்த வசிட்டனைப் பார்த்து, "வீரன் வந்த னனோ" எனக் கேட்கிறான். அவனது துயரத்தைக் காணச் சகியாது வசிட்டன் அவ்விடம் விட்டு அகல்கிறான்.

அப்பொழுது சுமந்திரன் வர, தயரதன் "நம்பி சேயனோ அணியனோ" எனக் கேட்க,

"வேய்உயர் கானம் தன்னில் தானும் தம்பியும்
மிதிலைப்பொன்னும்
போயின் என்று போழ்தத்தே ஆவி போயினன்"

எனக் கம்பன் தயரதன் இறப்பை முடிக்கிறான். மண்ணுலக மாந்தர்கள் வருந்த, தேவர்களோ "வந்தனென் எந்தை தந்தை" என்று மகிழ்ந்தார்கள்.

இராமனது பிரிவை ஆற்றாத தயரதன் அவனை "மெய்யின் மெய்யே" என்று சொல்லி வருந்துகிறான்.

கோசலையோ தயரதனை, "மெய்யின் மெய்யே! உலகின் வேந்தர்க்கெல்லாம் வேந்தே" என விளித்து வருந்துகிறாள்.

தயரதன், இராமன் இருவருமே அறத்தை— சத்தியத்தை— தவறாமல் காப்பவர்கள். அதன் காரணமாகச் சொன்ன சொல்லை— வரம் கொடுத்ததைக்— காப்பாற்றிய தயரதனை மெய்யின் மெய்யாகவும், தந்தை கட்டளை மேற்கொண்டு கானகம் சென்ற இராமனையும் மெய்யின் மெய் எனவும் கம்பர் அடைமொழி உடன் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. தந்தையின் மரணம் கேட்ட இராமனது புலம்பல் இந்த வாய்மையை உறுதி செய்கிறது.

"நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனி அறத்தின் தாயே! தயாநிலையே
எந்தாய் இகல்வேந்தர் ஏறே, இறந்தனையோ
அந்தோ இனி வாய்மைக்கு ஆர் உளரே மற்று"

இந்த நிகழ்ச்சியோடு தயரதன் பற்றிய செய்திகள் அயோத்தியா காண்டத்தில் நிறைவு பெறுகின்றன. தயரதன் இராமன் பேரில் கொண்டிருந்த அளப்பரிய பாசமும், அன்பும், கன்யா சுல்கத்தின் காரணமாக, அவசரகதியில் அமைச்சரவையைக் கூட்டி, ஜனநாயக ரீதியில் அவர்களிடம் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த ஒப்புதல் வாங்கியதும், மணவினை முடிந்தவுடன் பரதனை அவன் மாமனோடு கேகய நாட்டிற்கு அனுப்பி இப்பிரச்சனைக்குத் தீர்வு காண முன்னரே முடிவு செய்ததும் சற்று நெருடலாக இருந்தாலும், கம்பன் கன்யா சுல்கத்தை வெளிப்படையாகச் சொல்லாமல், கோசலை, இராமன், பரதன் ஆகியோர் இவற்றை அறிந்திருந்ததாகத் தக்க இடங்களிலே சொல்லுவது கம்பனுடைய கை வண்ணத்தைக் காட்டுகிறது.

மெய் என்ற சொல்லுக்கு உண்மை— சத்தியம் என்றும், உடல் என்றும் பொருள் உண்டு. சத்தியம் என்ற உயிருக்குத் தயரதன் உடலாக இருந்தான் என்பதை கோசலையின் வாயிலாகக் கூறுவதும், அறத்தின் நாயகனாகிய இராமன் என்ற உயிருக்கு தயரதன் உடலாகவும் இருந்தான் என்பதை “மெய்யின் மெய்” எனவும் சொல்லி, உயிர் பிரிந்தவுடன் உடல் செயலற்று விடுகிறதன்றோ? அதுபோல் இராமன் என்ற உயிர் பிரிந்தவுடன் உடல் செயலற்று விடுகிறது.

அதுபோல் இராமன் என்ற உயிர் பிரிந்தவுடன் தயரதன் வெறும் மெய்யாகத்தான் விளங்குகிறான்.

இதனை, “மெய்யே நெடியான் நீங்க, நீங்கும் என் ஆவி இனி” எனக் கூறுவதிலிருந்து புலானகிறது.

தயரதன் மூலமாகப் பல பாத்திரங்களின் தனித் தன்மைகளை, உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதும் நம்மைத் தொடுவதாக இருக்கிறது. ஜனநாயகரீதியில் அரசியல் நிகழ்வுகளைத் தீர்க்கும் வல்லமை படைத்தவனாகவும் காட்சியளிக்கிறான். கைகேயியின் மீது கொண்ட தனிப்பாசத்தால்— காமத்தால்— அவளுக்குக் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை அவனுக்கு ஏற்படுகிறது.

அதே நேரத்தில் சத்தியத்தினின்றும் பிறழாதவனாகக் காட்டியிருப்பதும், "நல் அறத்தின் மூர்த்தி" என்றும், "தனியறத்தின் தாய்" என்றும், "அறத்திற்கு ஆர் உளார்" எனவும் கம்பன் தனிச் சிறப்பு செய்து தயரதனை உயர்த்திக் காண்பிப்பதும் சாலவும் சிறப்புடையன.

■

6. கம்பனும் காளிதாசனும்

தனக்கு முன்னராகத் தோன்றிய பல கவிஞர்களை மகாகவி பாரதி, அவர்களது கவிதானுபவத்தை காவியங்களை, சொல்லி வைத்த நீதிகளை, இயற்கையின் எழிலார்ந்த அழகை, வர்ணனைகளை யெல்லாம் மாந்தி மாந்திப் பருகியவன். பல்வேறு மொழிகளையெல்லாம் கற்றிருந்த பாரதிக்கு வடமொழியான சமஸ்கிருதத்தின் மீது சற்று அலாதிப் பற்று இருந்தது. எனவேதான் அவன் காளிதாசன் காப்பியங்களைப் படித்து இன்புற்றான். நான்கு பெரும் கவிஞர்கள் அவனது நெஞ்சை வசப் படுத்திக் கொண்டிருந்தார்கள். இதனை,

``கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்
காளிதாசன் கவிதை புனைந்ததும்
சேரன்தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறைதந்ததும்"

என்று தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறான். இதில் காளிதாசனுடைய கவிதை புனையும் தன்மை அவனைப் பெரிதும் கவர்ந்திருப்பதில் வியப்பில்லை.

காளிதாசனைப் பற்றி, சமஸ்கிருத மொழியில் வல்லுநரான அமரர் கே. பாலசுப்பிரமணிய அய்யர் கூறுவதாவது: "கவி ஸார்வ பௌமனான காளிதாச மகாகவியைப் பாரத தேசியக்கவி என்று கூறுவது மிகப் பொருத்தமாகும். பாரத தேசத்தின் ஐக்கியம், பண்பாடு,

பெருநோக்கு – இவை எல்லாம் காளிதாசனின் காவியங் களிலும் நாடகங்களிலும் பொதிந்திருப்பதைக் காணலாம்.

அவனது காவியங்களில் தலை சிறந்தது "ரகுவம்ச மகா காவியம்." ரகுவம்சத்து அரசர்களின் வரலாற்றைக் கூறும் நூல். இதை அவர் இயற்றியதாலேயே காளிதாசனுக்கு 'ரகுகாரன்' என்ற பெயர் வழங்கலாயிற்று. காவியாலங்காரப் பேரறிஞரான 'உத்படர்' என்ற பெரியவர் காளிதாசனின் காவ்யங்களை 'ரகுகார சரஸ்வதீ' என்றே குறிப்பிடுகிறார். அரசர்களுக்கு இருக்க வேண்டிய வீரத்தன்மை, அவர்கள் கடைபிடிக்க வேண்டிய முறைகள், மக்களிடம் அவர்கள் காண்பிக்க வேண்டிய பரிவு, அவ்விதமே மக்கள் அரசனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை இவை எல்லாவற்றையும் 'ரகுவம்சம்' மூலமாகக் காளிதாசக் கவி உணர்த்துகிறார்" என்பது.

சமஸ்கிருதப் பேரறிஞர், டாக்டர் வே. இராகவன் அவர்கள் தமிழிலும் புலமை பெற்றவர். அவர் சொல்வதாவது:

"சமஸ்கிருத இலக்கியத்திற்கே சிகரமாய் விளங்கும் ஆக்கங்கள் மகாகவி காளிதாசனின் காப்பியங்களும், நாடகங்களும் ஆகும். 1959களில் நான் எழுதிய "காளிதாச தமிழ் நூல்களின் ஆக்கங்கள்" என்ற கட்டுரையில், காளிதாசனின் ரகுவம்சத்தின் நடுப்பகுதிகளில், 6 ஸர்க்கங்களில ராமாயணக்கதை சொல்லப்படுவதால் தமிழ்க் கவிச்சக்ரவர்த்தி தாம் செய்த இராமாவதாரத்திற்கு முதனூலாய்ச் சொல்லும் மூன்று சமஸ்கிருத நூல்களில் காளிதாசனின் 'ரகுவம்ச'மும் ஒன்றாய் இருக்கலாம்" என்று.

'ரகுவம்சம்' – இதுவரையில் தமிழில் ஐந்து மொழி பெயர்ப்புகள் வெளியாகி உள்ளன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரச மரபைச் சேர்ந்த அரச கேசரி தமிழ்ச் செய்யுள் நடையில் பாடினார். தற்பொழுது எட்டு சர்க்கங்கள் மட்டுமே அச்சில் அகப்படுகிறது. இந்த நூற்றாண்டில் நான்கு மொழி பெயர்ப்புகள் வெளி யாயின. அவற்றுள் இரண்டு மட்டுமே இரகுவம்சத்திற் கான முழுமையான மொழி பெயர்ப்புக்கள். இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பது, தேசபக்தரும், தியாகியுமான திரு. ஜமதக்னியின் மொழி பெயர்ப்பு. இவர் தமிழ், வட மொழி, ஆங்கிலம், ஹிந்தி ஆகிய நான்கு மொழி இலக்கியங்களையும், காவியங்களையும் கற்றுத் தேர்ந்தவர். கம்பனையும், காளிதாசனையும், ஒப்பீடு செய்தவர்.

காளிதாசனின் காலத்தை எடுத்துக்கொண்டால் கி.பி. ஆறாம் நூற்றாண்டு. கி.பி. நான்காம் நூற்றாண்டு. கி.மு. முதலாம் நூற்றாண்டு என்ற சர்ச்சை இருந்து வந்தது. பல அறிஞர்கள் வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு கி.மு. முதலாம் நூற்றாண்டு என்ற முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பாக நோக்கத்தக்கது.

அதேபோல கம்பனின் காலத்தையும் எடுத்துக் கொண்டால் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்று ஒரு சாரரும், 9ஆம் நூற்றாண்டு என்று ஒரு சாரரும் கொண் டி-ருந்தார்கள் என்றாலும், முடிவில் 9 ஆம் நூற்றாண்டு என்ற முடிவுக்கே வந்ததையும் பார்க்கவேண்டும். இதன் படி ஏறத்தாழ கம்பனுக்கு 8 நூற்றாண்டுகள் முற் பட்டவன் காளிதாசன் எனத் தெரிகிறது.

இரகுவம்சம் 19 சர்க்கங்களை உடையது. சூரிய வம்சத்தின் முதல் மன்னன் மனு. அந்த மனுவின் வழி

வந்த வம்ச பாரம்பரியத்திலே தோன்றியவன் இரகுவம்சத் தலைவனான திலீபன். திலீபன் முதல் அக்னிவண்ணன் வரை 29 அரசர்களைப் பற்றிய செய்திகள் இதில் அடங்கியுள்ளன. இதிலே நான்காவது மன்னனாக தயரதனும், ஐந்தாவது மன்னனாக இராமனும் வருகிறார்கள்.

'இரகுவம்சம்' – 1530 செய்யுட்களால் (ஸ்லோகம்) ஆனது. இதில் இராமாயணக் கதை தயரதனில் தொடங்கி இராம பட்டாபிஷேகம் வரை 460 பாடல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு காளிதாசன் இராமாயணக் கதைக்கு ஒதுக்கியிருக்கிறான். ஸர்க்கம் 9 முதலாக 14 வரை கதை வருகிறது.

9ஆம் சர்க்கத்திலே தயரதன் அரசாட்சி முதல், காட்டிற்கு வேட்டைக்குச் சென்றது, அங்கு யானையைக் கொல்ல எய்த சப்தவேதிபாணம் முனிகுமாரனின் மேல் பட அவன் இறந்ததும், அதன் காரணமாக முனி தம்பதிகள் தயரதனுக்கு நீயும் புத்திர சோகத்தினால் மரணமடைவாய் எனச் சாபமிட்டதும் சொல்லப்படுகிறது.

இச்செய்தி கம்பனின் இராமகாதையிலே நகர் நீங்கு படலத்தில் கோசலையிடம். தயரதன் தன் இறப்பிற்குக் காரணம் ஆன வரலாற்றைச் சொல்லுவதாக அமைக்கப் பெற்றிருக்கிறது.

10ஆம் ஸர்க்கத்திலே தேவர்கள் திருமாலை வேண்ட, தான் மண்ணில் அவதாரம் எடுத்து அரக்கர்களை அழிப்பதாகச் சொன்ன செய்தி முதல் தயரதன் வேள்வி, பாயப் பங்கீடு, இராமன் மற்றும் சகோதரர்கள் பிறப்பு ஆகியவை வருகின்றன.

11ஆம் சர்க்கத்தில் விஸ்வாமித்திரர் வேள்வி காத்தல், தாடகை வதம். சீதை திருமணம், பரசுராம கர்வ பங்கம் ஆகியவைகளும் உள. 12ஆம் சர்க்கத்தில் தான் அதிகமான செய்திகள் இடம் பெறுகின்றன. இராமனுக்கு முடிசூட்ட எண்ணியது, கைகேயின் சூழ்வினை, இராமன் காடு சென்றது, பரதன் பாதுகை பெறுதல், விராதன் வதை, காகாசுரன் கதை – சித்ரகூடம் சூர்ப்பணகை மானபங்கம், கரதுஷணவதம், சீதாபஹரணம், ஜடாயு மரணம், கவந்தன் வதை, சுக்ரீவன் நட்பு, வாலி வதை, பிராட்டியைத் தேடல், இலங்கை எரியூட்டப்படல், அனுமன் சீதை கண்டது, இராமன் இலங்கை நோக்கிப் புறப்பட்டது, வீடண சரணாகதி, போர், இராவணன் அழிவு ஆகிய சம்பவங்கள் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. 13 ஆம் சர்க்கத்தில் இராமன் அயோத்தி திரும்பும் வழியில் சீதைக்கு இடங்களைக் காண்பித்துச் சொல்வது. பரதன் சந்திப்பும், 14 ஆம் சர்க்கத்தில் திருமுடி சூடுதல், பின்னர் உத்தரகாண்ட நிகழ்ச்சிகள் இடம் பெறுவதைக் காண முடிகிறது.

கம்பன் எடுத்துக்கொண்ட அளவிற்குக் கதையை மிகவும் விரிவாகவும். எந்த செய்தியும் விடுபடாமலும் சொல்லிச் சென்றான். ஆனால் காளிதாசனோ இரத்தினச் சுருக்கமாகச் செய்திகளைச் சொல்லிக் கதையை முடிக்கிறான். கம்பனின் யுத்த காண்டப் போர் வர்ணனைகள், செய்திகள் மூவாயிரம் பாடல்களுக்கு மேல் இருந்தாலும் அவற்றில் கம்பனது சொல் திறனும், கவித்திறனும் பெரிதும் வெளிப்படுகின்றன. களிதாசன் போர் வர்ணனையேதும் சொல்லாமலே விட்டுச் சென்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

இனி கம்பனுக்கும், காளிதாசனுக்கும் உள்ள சில ஒப்புவமைகளைக் காணலாம். வடமொழி மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட – ஜமதக்னியின் மொழி பெயர்ப்பின் துணை கொண்டு இங்கு கம்பனை ஒப்பீடு செய்யப்படுகிறது என்பதைக் குறிப்பிட விழைகிறேன்.

முதலாவதாக இரகுவம்சத்தின் காப்பிய அவை யடக்கத்தில் சில செய்திகள்.

சூரியகுலத்தின் பரந்து விரிந்த மரபுகள் எத்தனை எத்தனையோ! அறிவிலே சிறிதும் முதிர்ச்சியடையாத என் குறுமதி எங்கே! அறிவு குறைந்தவனாகிய நான் சிறு படகு ஒன்றினாலே இம்மாபெரும் கடலைக் கடக்க விரும்பினேனே.

``கதிரோன் கால்வழி எத்துணை! காட்சியின்
முதிரா என்மதி எத்துணை! தாண்டிட
எதிர்க டப்பரு மாக்கடல் ஏற்றனன்
மதிகுறைந்திடத் தாழ்பட கொன்றினால்"

என்று காளிதாசன் பேசுகிறான்.

கம்பன் இதே கடலைத் தான் எடுத்துக் கொண்டான். ஆனால் பாற்கடலாக இருக்கிறது – ஒரு சிறிய பூனை எவ்வாறு குடிப்பதற்கு முயற்சி செய்கிறதோ அதுபோல நானும் குற்றம் இல்லாத இராமன் கதையைச் சொல்ல ஆசை கொண்டேன் என்கிறான்.

"ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் – மற்று இக்
காசில் கொற்றது இராமன் கதையரோ"

"வான்மீகி இராமாயணம் இரத்தினமணி. அதன் ஊடே இருக்கின்ற துளையில் எளிதாக நுழைகின்ற நூலைப் போன்றது எனது 'ரகுவம்சம்' என்ற காவ்யம்" —இது காளிதாசன்.

வான்மீகி இராமாயணத்தைக் காளிதாசன் இரத்தின மணி என்று சொன்னான். ஆனால் கம்பனோ ஒருபடி மேலே சென்று வான்மீகி முனிவரது பாக்களில் எந்த ஒரு வரியையும் – பதத்தையும் மாற்றிப் பாடி அதனை நிறைவு செய்ய இயலாது. ஒரு ஊமையன் பேசுவதுபோல நான் அவரது காவியத்தைப் பாடலுற்றேன்.

"வாங்க அரும்பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை அன்பு எனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்ன, யான் மொழியலுற்றேன்"

– எனச் சொல்லுகிறான்.

இரகுவம்சத்தின் முதல் மன்னனான திலீபன் ஆட்சியின் சிறப்பைப் பற்றிக் காளிதாசன் சொல்வதைப் பார்ப்போம். பிற அரசர்களைப் போல் புவிக்கரசனான திலீபன் பெரிய புகழைப் பெற முடியவில்லை. ஏனெனில் அவனது ஆட்சியில் திருட்டு என்பது சொல்லளவிலே – பெயரளவிலேதான் இருந்தது. ஏனெனில் பிறர் பொருட் களைக் களவாடும் திருடர்கள் அவனது ஆட்சியில் இலர். இதனை,

"பிற மன்னர்புவிக் காவலன் பேரிசை
பெற வல்லாரிலர் ஏன்! அவன் ஆட்சியில்
உறத்திருட்டினிப் பேரள வொண்பொருள்
பெறத்திருட்டினை யாவருங் கண்டிலர்"

என்று காளிதாசன் எழுதினான்.

இத்திலீபனுடைய ஆட்சியைப் பற்றியும், பெருமைகளைப் பற்றியும் இரகுவம்சத்தில் வந்த பாடல்களால் கவரப்பட்ட கம்பன், தன்னுடைய நகரப்படல வர்ணனையில்,

"தெள்வார் மழையும், திரை ஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மா நகர் வாழும் மக்கள் –
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லைமாதோ"

இங்கு காவலர்களே கிடையாது. ஏனெனில் பொருளைக் களவாடுபவர்கள் இல்லை. பிச்சை கேட்பவர்கள் இல்லாததால் கொடுப்பவர்களும் இல்லை என்று பேசுகிறான். கோசல நாட்டில் வறுமை என்பதே இல்லாததால் கொடைக்கு அங்கு இடமில்லை. போர் செய்ய எதிரிகள் இல்லாததால் உடல் வலிமையை உணர இடமில்லை. உண்மையின் பெருமையை அங்கே உணர வழியில்லை. ஏனெனில் பொய் பேசுபவர்கள் இலர் என்பதை,

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை ஓர் பொய்உரை இலாமையால்
வெண்மை இல்லை பல்கேள்வி மேவலால்"

இவ்வாறு கூறி நாட்டு வளப்பத்தை நாட்டுப் படலத்தில் சொல்லுவது. காளிதாசன் திலீபனுடைய ஆட்சியின் பெருமைகளைப் பற்றி கூறியதன் தாக்கமாகப் படுகிறது. தயரதனது பெருமைகளைப் பற்றிக் காளிதாசன் கூறுவதாவது—

"மலை தொளைத்த முருகவேளைப் போன்ற ஆற்றல் படைத்தவன், நாட்டை முறைப்படி ஆண்டவன்; அதன் காரணமாக நகரமக்களும், நாட்டு மக்களும், அன்பில் மிக்கவராகத் திகழ்ந்தனர். பல நன்மைகளையே பெற்றனர். தயரதன் அரசாளுகின்ற நாட்டில் நோய்களே அடி வைக்காது என்றால் பகைவர்களால் வரும் அவமதிப்பு எப்படி வரும்? பூமித்தாய் பலன்கள் அனைத்தையும் தங்கு தடையின்றி வழங்கினாள். எள்ளுவதற்கேனும் பொய் பேசியதில்லை."

இவைகளின் தாக்கம்தான் கம்பனில் இருக்கிறது.

``தாய்ஒக்கும் அன்பின், தவம்ஒக்கும் நலம் பயப்பின்
சேய்ஒக்கும் முன்நின்று ஒருசெல்கதி உய்க்கும்நீரால்
நோய்ஒக்கும் என்னின் மருந்துஒக்கும் – நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவுஒக்கும்–எவர்க்கும் அன்னான்"

என்று தயரதன் பெருமைகளைப் பேசுகிறான். இங்கே நோய்க்கு மருந்தாக தயரதன் இருக்கிறான் என்பதை காளிதாசன், "தயரதன் அரசாள் நாட்டில் உறுபிணியடி வைக்காதால்" என குறிப்பிடுவது ஒப்பு நோக்கத்தக்கது.

வானுலகத்துத் தேவர்கள் தங்கள் தலைவனான இந்திரனை வணங்குவதுபோல, எண்ணிறந்த சிற்றரசர்கள் தங்கள் தலைவனாக விளங்கும் தயரதனை வணங்கு கிறார்கள். அப்படி அவன் காலடியில் தங்கள் மணி முடிகளை வைத்து வணங்கும்போது தயரதனது கால் நகங்களின் காந்தியால் சிற்றரசர்களின் மணிமுடிகள் மேலும் ஒளிபெற்று விளங்கின என்பதைக் காளிதாசன்

"விண்ணவர் கோனை விண்ணோர் வணங்குதல் போல இந்த
மண்ணவர் கோனை பல்லோர் மன்னவர் குறைவுறாத

திண்ணியல் நகங்கள் காந்தி யான் முடிமணிகள் இன்னும்
ஒண்ணொளி மிகுந்து பாதம் பரவிட வணங்கினாரே"

— என்று புகழ் பாடினான்.

இந்தக் கருத்தை உள்வாங்கிய கம்பன், இன்னும் மெருகு ஏற்றி தயரதன் பெருமையை உயர்த்துகிறான். போரிலே பயன்படுத்தும் வேல், வாள் இவை போர் செய்வதனாலே மழுங்கி விடுகின்றன. அவற்றை மீண்டும் கூர்மைப் படுத்துவதாலே தேய்கிறது. அதுபோல தயரதனுடைய சேவடிகளிலே இருக்கிற கழலும் சிற்றரசர்கள் வந்து வணங்கும் பொழுது, அவர்களது முடிபட்டுப் பட்டுத் தேய்ந்து விடுகிறது என்று சொல்லுகிறான்.

அப்பாடலைப் பார்ப்போம்.

``யாவரும் வன்மைநேர் எறிந்து தீட்டலால்
மேவரும் கையடை வேலும் தேயுமால்
கோவுடை நெடுமணி மகுடக் கோடியால்
சேவடி அடைந்த பொன் கழலும் தேயுமால்"

இயற்கை வர்ணனைகளிலே காளிதாசன் மிகவும் ஈடுபாட்டுடன் காட்சிகளை எடுத்துச் சொல்கிறான். வேனிற்காலம் வருகிறது பூத்துக் குலுங்கும் மலர்கள். அதில் உள்ள தேனை மாந்தும் வண்டுகள், குயில்களின் கானமழை இவற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். பூங்காவிலே கொடிகள் இருக்கின்றன. அவைகளில் மலர்கள் பூத்து வண்ண ஜாலங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. வண்டுகள் மலர்களின் மதுவினையுண்டு, ரீங்காரமிடுகின்றன. மெல்லக் காற்று வீசுகிறது. கொடிகளில் இருக்கும் இளம் தளிர்கள் அசைகின்றன. இது இயற்கையாக நடைபெறுகிறது. காளிதாசன்

கண்களுக்கு இது ஒரு நடன அரங்காகவே படுகிறது. பூங்காவிலே இருக்கும் கொடிகள், நடனமாதர்களாக, நாட்டியம் ஆடுகின்றன. மலர்ந்து இருக்கும் மலர்கள் அவர்கள் புன்னகையை நினைவூட்டுகின்றன. வண்டு களின் ரீங்காரம், நடனத்திற்கு பின் இசையாக அமைகிறது. கொடிகளில் உள்ள இளம் தளிர்களின் அசைவுகள், நடனமாதர்களின், நடன முத்திரைகளாக — அபிநயம் செய்யும் கைகளாகத் தோன்றுகின்றன. இப்படி யொரு காட்சி காளிதாசனின் கற்பனையில் தோன்றி நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. பாடலைப் பாருங்கள்.

"மண்டொளி முறுவல் மாதர் முறுவலைப் போலக் காட்டத்
தண்டலைக் கொடிகள் ஆடக் காதினுக் கினியதான
வண்டுகள் இசை மிழற்றக் காற்றினில் அசையச் சேந்த
தண்டளிர் நடன மாதர் கையெனத் தயங்கித் தோன்றும்"

இதே போன்றதொரு கற்பனையை — இயற்கைக் காட்சியை கம்பனும் வர்ணனை செய்கிறான். காளிதாசன் வேனிற்கால நிகழ்ச்சியைச் சொன்னான். கம்பன் மருதநில வளத்தைச் சொல்லுகிறான்.

சோலையிலே மயில்கள் தங்கள் வண்ணமயமான சிறகுகளைப் பரப்பிக் கொண்டு ஆடல் செய்கின்றன. அவை ஆடும் நடனத்திற்கு மேகங்களில் தோன்றும் இடி யோசை, மத்தளம்போல இருக்கிறது. மாலை நேரமான தால் தாமரைகள் குவிந்து விளக்குபோல ஒளி வீசு கின்றன. குவளை மலர்கள், தங்கள் கண்களை விழித்துப் பார்க்கின்றன. தேன் பருகிய வண்டுகள் தங்கள் இனிய குரலாலே கீதம் இசைக்க நீர் நிலைகளின் அலைகள் திரைச்சீலையாக இருக்க மருத நாயகி அமர்ந்திருக்கிறாள்.

இதனை,

"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளிக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்ட தேம்பிழி மகாயாழின்
வண்டுகள் இனிதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

மாலை நேரங்களில் தாமரைகள் குவிந்து விடுவதும், குவளைகள் மலர்ந்து இருப்பதும் இயற்கையின் அற்புதம். இங்கு குவிந்த தாமரைகளை விளக்காகவும், குவளை மலர்களின் மலர்ச்சி கண்களைச் சிமிட்டுவது போலவும் கற்பனை செய்து பாடலைப் பாடியிருப்பது. இரு கவிஞர் களின் இயற்கை ரசனைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"இரகு வம்ச" காவ்ய ஆரம்பத்திலேயே தயரதன் பெருமைகளையும், நாட்டு வளப்பத்தையும், வேனிற்கால விழாவையும், வேட்டைக்குச் செல்லுவதையும் காளிதாசன் சொல்லி கதையைத் தொடங்குகிறான். வேட்டைக்குச் சென்ற தயரதன் பல்வேறு மிருகங்களை வேட்டை யாடுகிறான். பகல் முழுவதும் வேட்டையாடிக் களைத்த அவன் இரவில் கூடாரத்தில் உறங்கி, காலையில் மீண்டும் வேட்டைக்குச் செல்கிறான். களைப்பின் மிகுதியால் தமசை நதியருகே இருந்த முனிவர் வாழும் ஆஸ்ரமம் இருக்கும் இடம் சார்ந்தான். அங்கு ஆற்றில் குடத்தில் நீரை நிரப்பும் அழுத்தமான ஓசையொன்று கேட்க, அதனை மதங்கொண்ட யானையின் பிளிறல் எனக் கொண்டு 'சப்தவேதி' என்ற பாணத்தை எய்தான். 'ஐயோ' என்ற அலறல் கேட்டதும் திகைத்தான். சப்தம் வந்த இடத்தை நோக்கிச் சென்று பார்த்தால். முனிகுமாரன் ஒருவன் பாணத்தால் துடித்துக் கொண்டிருந்ததைக் கண்டான்.

அவனை யாரென வினவ "குழறுகிற மாற்றத்தான், மரபுரைத்தான், வசையிலா அந்தணர்தம் வழிவாரா முனி யீன்ற மைந்தன்" எனப்புகன்றான். அவனை எடுத்துக் கொண்டு அவர்களிடம் சென்று, நடந்தன சொல்லி, கண்ணீர் சிந்தினான். மகன் இறந்த செய்தி கேட்டு வருந்திய முனிவன் தயரதனுக்குச் சாபம் கொடுத்தான்.

"கடைப் பருவத் தென்னைப் போல் மகத்துயரால்
துடி துடித்து காலன் வாயை
அடைவாயே எனமுனியும் முதன்மிதிபட்டர
வொன்று மிகவுஞ்சீறி.
விடப்பாய்ச்சி விடுதல் போல் முனியிருந்தான்"

தயரதன் முனிவனைத் தொழுது

"மகன் முகமாந் தாமரையின் கவின்காணாத்
தீவினையேன் திறத்தில் நீவிர்
புகன்றதொரு சாபமே அருள் வரமாம்"

எனச் சொன்னான்.

மகனில்லாமல் தாங்கள் வாழ விரும்பவில்லை எனத் தெரிவித்த அவர்களுக்கும் சிதை மூட்டி, விருப்பத்தினை நிறைவேற்றி வைத்தான். இச்செய்தியை காளிதாசன் இராமாயணத்தின் ஆரம்பப் பகுதியிலேயே வைத்துச் சொல்லி விடுகிறான்.

கம்பனோ இச்செய்தியை காளிதாசன் போல அங்கு சொல்லாமல், அயோத்தியா காண்டத்தில் நகர் நீங்கு படலத்தில் இராமன் வனவாசம் ஏகும்போது கைகேயியின் அரண்மனையில் வைத்துச் சொல்கிறான்.

இது கதைக்கு மெருகூட்டுவதாக அமைகிறது. பதினாறு பாடல்களில் இவ்வரலாற்றை கம்பன் விரித்துக் கூறுகிறான்.

"முன் ஒருநாள், ஒரு மாமுனிவன் மொழியும் சாபம் உளது" என்று, "அந்த நாள் உற்றது எல்லாம் அவளுக்கு அரசன் அறைவான்" என்று தொடங்குகிறது செய்திகள்.

"புக்கு பெருநீர் நுகரும் பொரு போதகம் என்று ஒலிமேல்
கைக்கண் கணைசென்றது அலால்கண்ணின் தெரியக்காணேன்
... ...
மக்கட்குரல் என்று அயர்வேன்"

– என்று சப்தவேதி பாணம் இறுத்த நிலையைச் சொல்லுகிறான். மகன் இறந்து பட்ட துன்பத்தில் முனிவர் கொடுத்த சாபத்தை,

"விண்ணின் தலை சேருதும்யாம், எம்போல் விடலைபிரிய
பண்ணும் பரிமா உடையாய், அடைவாய் படர்வான்"

"ஏவா மகவைப் பிரிந்து இன்று எம்போல் இடர் உற்றனைநீ
போவாய் அகல் வான்"

– எனச் சொல்லி, பொன்நாடு அடைந்தார்கள். நானும் காலத்தைப் பற்றிப் பெரிதும் எண்ணாமல், "இன்சொல் மைந்தன் உளன், என்றதனால், மகிழ்வோடு இவண் வந்தனெனால்" எனச் சொல்லி வருந்துவதாகக் கம்பன் படைக்கிறான்.

கதைப் போக்கிலே சாபம் பெற்ற வரலாறு கவிஞர்கள் கற்பனைக்கு ஏற்ப இடம்மாறி அமைந் திருப்பதைக் காண முடிகிறது.

கம்பன் தன்னுடைய இராமாயணத்தில், காப்புச் செய்யுளில்,

"உலகம் யாவையும் தாம் உள வாக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார்—அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண்நாங்களே"

— என்று தொடங்குகிறான். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களுக்கு உரியவன் பரமன்—மூலப் பரம் பொருள் — அதனுடைய கூறுகளாக அயன், அரி, அரன் இருந்து முத்தொழிலைச் செய்கிறார்கள் என்பது தத்துவக் கோட்பாடு. "காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி" என்று மணிவாசகர் பேசுகிறார். "மாய மயக்குகளால் இன்புறும் இவ்விளையாட்டு உடையான்" என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

இதே கருத்துக்களைக் காளிதாசன், தேவர்கள், பரந் தாமனிடம் முறையிடச் சென்றபோது செய்த துதி வாயிலாகச் சொல்லுகிறான்.

"முதற் புவியாக்கினை, பின்னர் காத்தனை
அதனை நீ அழித்தனை மூன்று தன்மைகள்
பதம் பெற அயன், அரி, அரன் என்று ஆயினை
கதமிலா அருட்கடலே உனக்கு வணக்கமே"

இக்கருத்து, கம்பன் பாடல்களில் விரவி வருகிறது. இங்கு மூவர் பெயரைக் காளிதாசன் சொல்லி, "கதமிலா அருட்கடலே" என்று சொன்னான், ஆனால் கம்பனோ மூவர் பெயரைச் சொல்லாமல், செய்யும் தொழிலைச் சொல்லி, இறைவன் திருவிளையாட்டாக அதனைக் கூறி அவனுக்குச் சரண் என்கிறான். இங்கு சமயத்தைப் பற்றிக்

கூறினாலும், பொதுவான கருத்துத் தென்பட, சமய பேதங்களுக்கு அப்பாற்பட்டுப் பாடினான் என்பது தெளிவு.

காளிதாசன் 22 ஸ்லோகங்களிலே தேவர்கள் திருமாலைத் துதி செய்வதாகப் பாடுகிறான். அவற்றில் பல்வேறு வேதாந்தக் கருத்துக்களைச் சொல்கிறான்.

உலகப் பொருட்களுக்கெல்லாம் முதலாக இருப்பது உன்னுடைய வடிவம்; நீ படைத்த பொருட்களின் தன்மையால் அவற்றின் நிலையை நீ அடைகிறாய்; நீ அளவிடற்கரியவன்; உனக்கென்று விருப்பம் ஏதும் இல்லை. எனினும் அடியார் விருப்பத்தை அருளுபவன்; நீ எதனையும் வெல்லுவாய் ஆனால் உன்னை வெல்ல இயலாது; காட்சிக்கு உரிய காரணன் நீ; எனினும் நீ கண்ணுக்குப் புலனாகாதவன்.

உயிர்களின் உள்ளத்தே இருப்பவன் எனினும் தொலைவில். இருப்பவன் நீ; நீ பழமையன் எனினும் முதன்மையற்றவன்; யாவற்றையும் நி அறிந்தவன்; ஆனால் உன்னை யாரும் அறிகிலர். அனைத்திற்கும் தலைவன் நீ; உனக்குத் தவைன் இல்லை. நீ ஒருவன் என்றாலும், பல படிவங்கள்— வடிவங்களாக இருப்பவன். நீ அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பெரும் பயனாகவும், அவைகளை அறியும் அறிவாகவும் திகழ்கிறாய். யோகிகள் தங்கள் உள்ளங்களை யடக்கி உன்னைத் தேடுகிறார்கள் நீயோ அவர் உள்ளத்தே இருக்கிறாய். நீ பிறப்பிலி — இருப்பினும் பிறவிகள் எடுக்கிறாய்; உன்னுடைய பெருமைகள் இவை என்று பலமொழிகள் சொல்லிச் சொல்லித் திகைத்து நின்று விட்டன. உன்னை உணரும் முயற்சியில் களைப்படைந்தன."

இவ்வாறு பரந்தாமனைப் பற்றிய துதிகள் வேத சாரமாக, கீதாசாரமாக, உபநிடதங்களின் தொகுப்பாகக் காளிதாசன் கூறுகிறான். இக்கருத்துக்களை ஊன்றிப் படித்த கம்பன் விராதன் வதைப் படலத்திலே தனக்கே உரித்தான பாங்கிலே இவற்றைச் சொல்லுவது, படிக்கப் படிக்கத் தித்திக்கக் கூடியது.

"வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில் படிவங்கள் எப்படியோ"

"நீஆதி பரம்பரமும், நின்னவே உலங்கள்
ஆயாத சமயங்கள் நின் அடியவே, அயல் இல்லை
தீயாரின் ஒளித்தியால், வெளிநின்றால் தீங்கு உண்டோ
வீயாதபெரு மாய விளையாட்டும் வேண்டுமோ"

"நீ அறிதி எப்பொருளும் அவைஉன்னை நிலைஅறியா
மாயம் இது என்கொலோ – வாராதே வரவல்லாய்"

"ஓயாத மலர் அயனே முதல்ஆக உள்ஆகி
மாயாத வானவர்க்கும், மற்று ஒழிந்த மன்னுயிர்க்கும்
நீஆகி முதல் தாதை, நெறிமுறையால் ஈன்று எடுத்த
தாய் ஆவார் யாவரே – தருமத்தின் தனிமூர்த்தி"

– எனப் பரந்தாமனின் பல்வேறு பெருமைகளை விராதன் மூலமாக எடுத்துச் சொல்கிறான். மேலும் பல துதிகளை இந்திரன் மூலமாகவும் பேசுகிறான்.

"தோய்ந்தும், பொருள் அனைத்தும் தோயாது நின்ற
சுடரே, தொடக்கு அறுத்தோர் சுற்றமே பற்றி

நீந்த அரிய நெடுங்கருணைக்கு எல்லாம் நிலையமே
வேத நெறிமுறையின் படி
ஆய்ந்த உணர்வின் உணர்வே"

என்றும்,

"மேவாதவர் இல்லை, மேவினரும் இல்லை
வெளியோடு இருள் இல்லை, மேல் கீழும் இல்லை
மூவாதவை இல்லை, மூத்தமையும் இல்லை
முதல் இடையோடு ஈறுஇல்லை முன்னொடு பின்னில்லை"

— எனவும்,

"ஒன்றாகி, மூலத்து உருவம் பல ஆகி
உணர்வும் உயிரும் பிறிதும் ஆகி"

எனவும். கவந்தன் துதியில்

"காண்பார்க்கும் காணப்படு பொருட்கும் கண் ஆகி
பூண்பாய் போல் நிற்றியால் யாது ஒன்றும் பூணாதாய்"

"மூலம் இல்லா முதல்வனே, நீ முயலும்
கோலமோ, யார்க்கும் தெரிவு அரிய கொள்கைத்தால்"

எனப் பாடுகிறான் கம்பன். இவ்வாறு காளிதாசன் கருத்துக்கள் அனைத்தையும், உள்வாங்கி இவ்வாறு சொல்லியிருக்கிறானோ என்று எண்ணத் தோன்றுகிறது. காளிதாசன் காளியின் அருள் பெற்றுக் கவிதை புனைந்தவன். கம்பனோ சரஸ்வதியின் அருள் கொண்டு கவிதை செய்தவன். எனவேதான் இவர்களுக்குள் இப்படி ஒரு ஒற்றுமையைக் காணமுடிகிறது.

அடுத்து தயரதன் மகப்பேறு வேள்வி செய்து. அதனின்றும் வந்த பாயசத்தைப் பகிர்ந்தளிக்கும்

முறையிலே காளிதாசனுக்கும், கம்பனுக்கும் சில மாறு பாடுகள் உள்ளன. 'பாற்சோறு' எனக் காளிதாசனும், 'தூயநல் சுதை நிகர் பிண்டம்' எனக் கம்பனும் வர்ணிக் கிறார்கள்.

பங்கீடு செய்வதில் காளிதாசன் காலைக் கதிரவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இளவெயிலைப் பகிர்ந் தளிப்பதுபோலக் கோசலைக்கும், கைகேயிக்கும் அளித்தான் — அதாவது பாதி—பாதி. அவர்கள் இருவரும் சுமித்திரைக்கு தங்கள் பங்கிலிருந்து அளிப்பார்கள் என்று தயரதன் எண்ணினான்.

"மாசறு சுமித்திரைக்கு அவர்கள் அன்பினால்
ஏசற ஈவரால் என்றவன் எண்ணினான்"

கணவனது மனத்தினை அறிந்த அவர்கள், தங்களுக்குக் கிடைத்த சோற்றுத் திரளில், ஆளுக்குப் பாதி பாதியாக, காற்பகுதியை சுமித்திரைக்குக் கொடுத் தார்கள். முதலில் தயரதன் ½×½ பங்கினை இருவருக்கும் அளித்தவுடன், அவர்கள் தங்கள் பங்கிலிருந்து பகுதியை அதாவது ½ பங்கினை சுமித்திரைக்கு அளித்தனர் என்று காளிதாசன் எழுதுகிறான்.

கம்பனோ இங்கு மாறுபடுகிறான். தயரதன் "தூயமென் கரிகுழல் தொண்டை தூயயவாய்க் காமரு கோசலை கரத்தில் ஓர் பகிர்" — அதாவது மூன்றில் ஒரு பங்கு, அதேபோல "கைகேயித் தன் கரத்தும் அம் முறை (கோசலைக்கு கொடுத்த முறையில்) செங்கையின் அளித்தனன்", "நிமிதரு மரபுளான், முன்னர் நீர்மையின் சுமித்திரைக்கு அளித்தனன்" என்று குறிப்பிடுகிறான் எனவே பிண்டமானது மூன்று பாகங்களாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டது என்பது புலனாகிறது. இவை தவிர

பொன்வட்டிலில் இருந்து பிதிர்ந்து வீழ்ந்து கிடந்த வற்றையும் திரட்டி எடுத்து மீண்டும் சுமித்திரைக்கே கொடுத்தான் என்பதைப் "பின்னும் அப்பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தது தன்னையும், சுமித்திரைக்கு நல்கினான்" எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மூல நூலான வான்மீகத்தில் இம்முறை மாறு படுகிறது. பாயசத்தில் பாதியைக் கோசலைக்கும், மீதியில் பாதியைப் சுமித்திரைக்கும் மிகுந்து நின்றதில் பாதியை கைகேயிக்கும் கொடுத்தான். அமுதம் ஒத்த அந்த பாயசத்தில் எஞ்சி நின்றதை சிறிது நேர யோசனைக்குப் பின் சுமித்திரைக்கு மட்டும் கொடுத்தான் என வான்மீகம் பேசுகிறது.

தயரதனுக்கு மைந்தர்கள் பிறந்தவுடன் நிகழ்ந்த நிகழ்வுகளைக குறிப்பிடுகையில் காளிதாசன் இராவணன் முடியிலிருந்த இரத்தினங்கள் கீழே விழுந்து சிதறுண்டன. மணிமுடியில் இருக்கும் இரத்தினங்கள் கீழே விழுவது துன்னிமித்தம் என ஜோதிடர் சொல்லுவர்.

கம்பனோ

"வீடினர் அரக்கர் என்று உவக்கும் விம்மலால்,
ஓடினர், உலாவினர் உம்பர் முற்றுமே"

என்கிறான்.

அயோத்தி நகரத்து மக்களைத் தங்களது அன்பால் கவர்ந்து கொண்டார்கள் இராமன் முதலிய நால்வரும் என்பதை

"மாந்தர் மனங்களை நொடிதனில் கவர்ந்தன, அன்பு பூண்டனர்"

என காளிதாசனும்,

"எதிர்வரும் அவர்களை எமையுடைய இறைவன், முக
முதிர்தரு கருணை யின் மலர் ஒளிரா,
எதுவினை, இடர் இலை – இனிது நும்மனையும்,
மதிதரு குமரரும் வலியர் கொல்"

எனக் கேட்பதாக கம்பனும் கூறுவது பொருந்துகிறது.

விஸ்வாமித்திர முனிவரால், வேள்விகாக்க அழைத்துச் செல்லப்பட்ட இராமன். அங்கு தாடகையைக் கொல்கிறான். இங்கு கம்பனும், காளிதாசனும் ஒருசில இடங்களில் மாறுபடுகின்றனர்.

பெரிய ஆரவாரத்தோடும், சினத்தோடும் தாடகை, கையில் சூலம் ஏந்திக் கொண்டு வருகிறாள். வருகிறவள் பெண் எனத் தெரிந்தும், அவள்மீது அம்பைத் தொடுத் திட்டான் இராமன் என்று காளிதாசன் கூறுகிறான். முதன் முதலாக ஒரு பெண்ணை கொல்லலாகாது என்று அருளை இராமன், துறந்து விட்டானாம். இதனை,

"படிகாப்பான் மகன் இராமன் பாவைதனை முதல் கொல்லல்
படியொவ்வாதெனும் அருளை அம்போடும் விட்டிட்டான்"

என்கிறார். அவன்விடுத்த அம்பு எப்படிச் சென்றது என்பதை

"வில்லிழுத்து இராமபிரான் சொல்லொக்கும் சுடுசரம்தான்
கல்லொத்த தாடகைதன் மார்பகத்தில் புழைசெய்த
தல்லொத்த அசுரரினத் திதுவரைக்கும் நுழையாத
கொல்கூற்றின் நுழைவாயில் எனவஃதின் ஆயிற்றே"

வில்லை நன்றாக இழுத்து, சாபச் சொல்போல் கடுமையாகச் சுடுகின்ற அம்பை இராமன் எய்தான். அது மலைபோல வலிய தாடகை மார்பில் ஒரு புழையை உண்டாக்கியது. அரக்கர் இனத்தில் இதுவரையில் நுழை யாத யமனுக்கு அது ஒரு நுழைவாயில் போன்று அமைந்தது என்று வர்ணிக்கிறான் காளிதாசன்.

கம்பனின் மாற்றத்தைக் காணுவோம். யாரும் கடக்க இயலாத என்னுடைய காவல் ஆளுமையிலுள்ள இவ் வனத்தில விதி உந்தித்தள்ள வந்தீர்களோ என இராமனைப் பார்த்துக் கேட்கிறாள் தாடகை. வந்தவள் அரக்கியானாலும் பெண்தானே என இராமன் நினைக் கிறான்.

"…. வடிகனை தொடுக்கிலன், உயிர்க்கே
துண் ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளனேனும்
பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான்"

இவ்வாறு கம்பர் இராமனின் மன ஓட்டத்தைச் சித்திரிக்கிறார். இவனது கருத்தை அறிந்த கோசிகன், நான் அறம் பார்த்து இசைத்தேன். ஆறிநின்றது அருள் அன்று. அரக்கியைக் கொல் எனச் சொன்னவுடன், இராமன் "மெய்ய நின் உரை வேதம் எனக்கொடு செய்கை அன்றோ! அறம் செய்யும் ஆறு" என்றான். பின்னர் அவள் மீது அம்பு தொடுக்கிறான்.

"சொல்ஒக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்ஒக்கும் நிறத்தினாள் மேல் விடுதலும் வயிரக்குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று அன்றே"

இங்கு அம்பின் வேகத்தைக் குறிப்பிடும்பொழுது—

"சொல்லொக்கும் சுடுசரம்" எனக் காளிதாசனும்,

"சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்" என்று கம்பனும் குறிப்பிடுவது. சுவையுடைத்தாய் இருக்கிறது.

மேலும் அந்த அம்பு எப்படிப்பட்ட உடலில் போய்த் தைத்தது என்பதை "கல்லொத்த தாடகை தன்

மார்பகத்தில்" எனக் காளிதாசனும், "வயிரக் குன்ற கல்லொக்கும் நெஞ்சில்" எனக் கம்பனும் சொல்லுவது முன்னவனைப் பின்பற்றி பின்னவனாகிய கம்பன் எழுதினானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பெண்ணாகிய தாடகியைக் கொல்லலாகாது என்ற அருளைவிட்டு, இராமன் அம்பைக் தொடுத்ததாக காளிதாசனும், பெண்ணைக் கொல்வது தருமத்தின்பாற் பட்டதன்று என இராமன் நினைத்ததாகக் கம்பன் சொல்லுவது மட்டுமே இங்கு மாற்றமாகப் படுகிறது.

இனி அகலிகை சாபவிமோசனத்திலேயும் இருவர் கருத்தும் ஒன்றாகவே இருக்கிறதைக் காண முடிகிறது. கௌதமமுனிவரின் ஆஸ்ரமத்திற்கு கோசிக முனிவனுடன் இராம, இலக்குவர் வருகின்றனர். இங்கு வரலாறு பேசப்படவில்லை. ஆனால் அகலிகையின் செயல் பேசப்படுகிறது இரகுவமசத்தில்,

"பான்மொழியாள் முனிமனைவி அகலியையாள் ஒரு நொடிக்கே
தான் மனைவி இந்திரற்காம் நிலை யடைந்தாள்"

அகலிகையை நாடி இந்திரன் வந்தபொழுது, இந்திரனுடைய மனைவியாக, ஒரு நொடிக்கே, அவள் தன்னை இழந்தாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பனோ,

"..... காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள். உணர்ந்த பின்னும்
தக்கது அன்று ஓராள், தாழ்ந்தனள் இருப்ப"

என்று குறிப்பிடுகிறான். இந்திரனிடத்தில், இந்திராணி எவ்வாறு இன்பம் அனுபவித்து இருப்பாளோ அது

போன்ற இன்பத்தை ஒரு கணத்தில் அகலிகை அனுபவித்தாள் என்று காளிதாசன் சொல்லுவதில், அகலிகையின் இணக்கம் தெரிகிறது. கம்பனிலேயும் "இன்பத்தை அனுபவிக்கும் போது உணர்ந்தாளாம், இவன் கௌதமன் அல்லன் என்று இருப்பினும் தாழ்ந்தாள்" என்று கம்பன் சொல்லுவதும் ஒத்த கருத்தை உடையதாக இருப்பதைக் காணலாம்.

அகலிகை சாபவிமோசனம் பெற்றதை—

"கல்வடிவாய் தவசி மனையாள் இருந்தாள் இராமபிரான்
வில்லிடுதாள் துகள் அருளால் முன்னழகார் உடம்புற்றாள்
பல்லாண்டு பின், பாவமழிக்கின்ற தவனடிகள்
புல்லடிகள் என்னினதன் பெருமைதனைப் பேசலாமோ"

இராமபிரான் திருவடித் துகள்களினாலே, உருவம் பெற்றதை, பாவத்தை அழித்த இராமன் திருவடித்துகள் எனில் அதன் பெருமையை அளவிட முடியுமோ எனக் காளிதாசன் வர்ணிக்கிறான். இதனைக் கம்பன்,

``கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல்துகள் கதுவ
உண்டபேதை மயக்குஅற வேறுபட்டு, உருவம்
கொண்டு, மெய் உணர்பவன் கழல் கூடியது ஒப்ப
பண்டை வண்ணமாய் நின்றனள்"

இத்திருவடிக்கு என்ன பெருமை என்பதை விசுவாமித்திரன் வாயிலாக,

"மைவண்ணத்து அரக்கி போரில்,
மழை வண்ணத்து அண்ணலே உன்
கைவண்ணம் அங்கு கண்டேன்,
கால் வண்ணம் இங்கு கண்டேன்"

என்பதைச் சொல்லுகிறான்.

இராமன் திருவடித் துகளுக்கே இப்பெருமை யென்றால், திருவடி எத்துணைப் பெருமையுடையது என்பதை இருவருமே பாடியுள்ளனர்.

விராதனும் தன்னுடைய துதியில், "நின் பாதங்கள் இவை யென்னில், படிவங்கள் எப்படியோ" என்று பாடுகிறான்.

பின்னர் முனியோடு இருவரும் மிதிலை நகருக்கு வருகிறார்கள். வில்லைக்காண இவர்கள் வந்துற்றார்கள் என ஜனகனுக்குச் செய்தி சொல்லப்படுகிறது. இராம னுடைய அழகு—சௌந்தர்யம், ஜனகனை மிகவும் கவர்கிறது. இவ்வளவு பெரிய வில்லை வளைப்பவன் எவனோ அவனுக்குதான் சீதையைத் திருமணம் செய்விப்பேன் எனச் சொன்னது எவ்வளவு பேதமை என இரங்கினானாம். இதனைக் காளிதாசன்.

"புகழ்பெற்ற மரபுற்ற வேளன்னான் பிள்ளையதன்
அகமகிழ்ந்தான் உடம்பழகால் சனகக்கோன் வளைப்பரிய
மிகவலிய பெருவில்லை கண்டயர்ந்தான் பெண்ணுக்கு
பகர்வரிய வில்லேற்ற விலைவைத்ததற் கிரங்கினனே"

எனக் குறிப்பிடுகிறான். கம்பனில் வில்லை இறுக்க இராமன் வருகிறான். இராமனது அழகாலும், தோற்றத் தாலும் கவரப்பட்ட மங்கையர் நினைப்பதைச் சொல்லும் பொழுது.

"வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்ளன முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து இப்
பிள்ளை முன் இட்டது பேதைமை என்பார்"

இவ்வாறு பேசுவான். காளிதாசனில் ஜனகன் கருத்தாக — எண்ணமாக வந்ததைக் கம்பன் மங்கையர் களின் எண்ணமாகச் சித்திரித்திருப்பது சுவைக்கத் தக்கது.

வில்லை இராமன் எப்படி வளைக்கிறான் என்பதி லும் இருவருக்கும் கருத்தொற்றுமை இருக்கிறது. மண முள்ள மலர்களான மெல்லிய வில்லை மன்மதன் வளைப்பது போல வளைத்திட்டான் எனக் காளிதாசனும்,

"ஏடு அவிழ்மாலை இது என்ன எடுத்தான்"

— எனக் கம்பனும் பாடுகின்றனர்.

"பெருமலை போன்றிருந்தாலும் நாணேற்றி விளையாட்டாய்
மருமலர்மென் வில்லதனை மதன்வளைத்தானென வளைத்தான்"

— இது காளிதாசன் கூற்று.

"ஆடகமால்வரை அன்னதுதன்னை
தேடருமாமணி சீதை எனும் பொன்
சூடகவால்வளை சூட்டிட நீட்டிடும்
ஏடு அவிழ் மாலை இது என்ன எடுத்தான்"

— இது கம்பன்.

இருவருமே வில்லை மலைக்கு உவமையாகச் சொல்லுகிறார்கள். நாணேற்றும் பொழுது இற்று வீழ்ந்த வில்லின் ஓசையைப் பரசுராமன் கேட்டான் என்பதை இரு கவிஞர்களுமே சொல்லுகிறார்கள்.

"....... ஓசையொடும் விழுந்ததுவில்
ஓதுவகை அரசெழுச்சி தடுப்பரிது மீட்டுமென
மோதுகின்ற சினப்பரசுராமனுக்குத் தெரிந்ததென"

— எனக் காளிதாசனும்

"அலகுஇல் மாதவங்கள் செய்து, ஓர் அருவரை
இருந்தேன், ஆண்டை
சிலையை நீ இறுத்த ஓசை செவிஉறச் சீறி வந்தேன்"

– என்று கம்பனும் சொல்லுகிறார்கள்.

இராமனுக்கு முடிசூட்ட தயரதன் எண்ணுகிறான். கைகேயினுடைய அச்சத்தினாலே, தயரதன் நரைமயிர் அவன் காதருகே வந்து இராமனுக்கு ஆட்சியை அளிப் பாயாக என்று சொல்லுகிறதாம்.

"மன்னனே ஆட்சியை மகனுக்கு ஈகென
கன்ன மூலத்தினில் நரையின் மேலிட்டுத்
துன்பளி கைகேயிக் கஞ்சி மூப்பது
பன்னிட வந்தெனக் காட்சி யளித்தது"

"தம் கர்ணமூலம் ஆகத்ய ராமே ஸ்ரீர் ந்யஸ்ய தாமதி!
கைகேயி சங்கயே வாஹ பலிதச் சத்மனா ஜரா!"

இவை காளிதாசனின் மூலமும், மொழி பெயர்ப்பும்.

கம்பனில் கன்ன மூலத்தில் நரைவந்து சொன்ன செய்தி அப்படியே வருகிறது.

"மன்னனே அவனியை மகனுக்கு ஈந்துநீ
பன்னரும் தவம்புரிபருவம் ஈதென
கன்னமூலத்தில் கழறவந்னில் தென
மின்னெனக் கருமை போய் வெளுத்தது ஓர்மயிர்"

என்றும்,

இராவணன் செய்த தீமைதான் நரையாய் வந்தது என்பதையும்.

"தீங்கிழை இராவணன் செய்த தீமைதான்
ஆங்கு ஒரு நரையது ஆய் அணுகிற்றாம் என
பாங்கில் வந்திடு நரை படிமக் கண்ணடி
ஆங்கு அதில் கண்டனன் அவனி காவலன்"

— கம்பன் சொல்லுகிறான்.

கைகேயி பெற்ற வரத்தினாலே இராமன் காடு செல்ல முனைகிறான். மன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்பனோ என்று கைகேயிடம் சொல்லி விடைபெறுகிறான்.

அப்பொழுது அவனது முகம் எவ்வாறு இருந்தது என்பதைக் காளிதாசன் விவரிக்கிறான்.

"மங்களப் பட்டுகள் அணிந்த போழ்தினும்
அங்கெழின் மரவுரி யணியும் போழ்தினும்
மங்கிடா முகவொளி மாறாதிருப்பதைத்
தங்கணின் கண்டனர் வியப்பின் மாந்தரே"

பட்டு பீதாம்பரங்கள் அணிந்து வந்த போது இருந்த முக ஒளியும், காடேகு என்றவுடன் மரவுரிதரித்து வந்து நின்றபோதினும் அவனது முகஒளி மாறாமல் எப்பொழுதும் போல் இருந்ததை மாந்தர்கள் கண்டனர் என்கிறான்.

கம்பனும் இதே கருத்தைச் சொல்லுவது நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகிறது. காளிதாசன் கருத்துக்கள் பலவற்றை உள்வாங்கி, அதனை மேலும் அழகுறச் செப்ப னிட்டவன் கம்பன். முக ஒளி மாறவில்லை என்ற கருத்தை,

"இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதோ யாரும்
செப்பருங்குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா"

என்று கம்பன் நகாசுவேலைகள் செய்து இராமன் என்ற பாத்திரத்திற்கு மெருகு ஏற்றுகிறான்.

அனுமன் அசோக வனத்திலே சீதையைக் காண்கிறான். இராமன் அடையாளமாகக் கொடுத்த கணையாழியைச் சீதையின் கையில் கொடுக்கிறான். அதைக் கண்டு சீதை சிலிர்க்கிறாள். கண்ணீர் பெருக்கெடுத்து வருகிறது.

"வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள், மலர்க் கண்மிசை ஒற்றினள்"

என்று சீதையின் உணர்வுகளைச் சொல்லுவான் கம்பன். அனுமன் திரும்பிச் செல்லும் பொழுது இராமனிடம் கொடுப்பதற்காகத் தனது சூளாமணியைக் கொடுக்கிறாள் சீதை. இதைப் பெறும் இராமனின் நிலை – உணர்வுகள் என்ன என்பதை, காளிதாசன்,

"அணைத்தனன் மாா்பிலே, மணிதான் தொட அர
வணைத்துயில் வான்தன துணர்வு மறந்தனன்
இணைமுலை தொடுகையிலாது சீதையை
அணைவதன் இன்பினை ஐயன் அடைந்தான்'

கம்பனின் சீதை கணையாழியை வாங்கி முலைக் குவைகளில் வைத்து ஆனந்தப்பட்டாள். காளிதாசனின் இராமனோ தனது மார்பில் சூளாமணியை வைத்துக் கொண்டதன் மூலம் சீதையை தழுவும்– அணைவதின்

இன்பத்தைப் பெற்றான் என்கிறான். கம்பனுடைய இராமனோ, சூடாமணியை வாங்கியவுடன் முன்னர் திருமணத்தின்போது அக்னி சாட்சியாகச் சீதையின் திருக்கரம் பற்றிய நினைவாக மாறியது என்கிறான்.

``ஐயனுக்கு, அங்கிமுன்னர் அங்கையால் பற்றும் நங்கை
கைஎனல் ஆயிற்று அன்றே, கைப் புக்க மணியின் காட்சி"

இரண்டு மாபெரும் கவிஞர்களிடையே தான் எவ்வளவு. கருத்து ஒற்றுமை, தெளிவு. இதை எண்ணி எண்ணி மகிழலாம்.

அசோகவனத்திலே சீதையைச் சிறை வைக்கும் முன்பே, "மயிலுடைச் சாயலாளை வஞ்சியாமுன்னம், நீண்ட எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்" என்று கம்பன் குறிப்பிடுகிறான்.

இலங்கையில் போர் நடக்கிறது. இராமனும் இராவணனும் போர்க்களத்திலே சந்திக்கிறார்கள். இறுதியில் இராமன் அம்பால் இராவணன் கொல்லப் படுகிறான்.

சீதையைத் தன்னுடைய இதயமாம் சிறையில் வைத்த இராவணனது மார்பிலே அம்புபட்டு உள்ளோடியதனை காளிதாசன்.

"அழகியை மறைத்ததை மார்புள்தேடிய
அழகன் இராகவன் சரமொன்று ஏவினான்
விழுந்தது துளைத்தது நாகர்க் கினியதாம்
செழுஞ்செயல் உரைத்துஎன நிலத்துள் நுழைந்தது"

சீதையை மறைத்து வைத்து இடத்தைத் தேடுவது போல இராகவன் விடுத்த அம்பு அவன் மார்பிலே புகுந்து துளைத்துத் தேடியது எனச் சொல்லுகிறான்.

இதே செய்தியைக் கம்பன், இராவணன் களத்தில் இறந்துபட்டுக் கிடக்க, மண்டோதரி அவன் மேல் புரண்டு அழுகிறாள். சல்லடைக் கண்களாகத் துளைக்கப் பட்டிருக்கும் அவனது உடலைக் கண்ட மண்டோதரி

"கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

என்று கதறி அழுவதாகச் சித்திரிக்கிறான். எனவே மூலத்தில் இல்லாத இச்செய்தியை இரு கவிஞர்களும் தங்கள் கற்பனையில் கண்டு, அதைச் சுவைபடச் சொல்லி இருக்கிறார்கள்.

புட்பக விமானத்திலே அயோத்தி திரும்புகையில் பல இடங்களைச் சீதைக்கு இராமன் காண்பித்து, விவரங் களை– நடந்த பல சம்பவங்களைச்– சொல்லிக் கொண்டு வருகிறான். அயோத்தி நகரம் வரும்பொழுது சரயு நதி வருகிறது. இச்சரயு நதியைக் காளிதாசன், 13ஆம் சருக்கத்தின் இறுதியிலே வைத்துப் பேசுகிறான். இந்த சரயு நதியானது உத்தர கோசல மன்னர்களின் பொதுத் தாயாவாள். அவளது அமுதம் போன்ற நீரை உண்டு அவர்கள் வளர்ந்தார்கள் என்பதை,

"மணலெனு மடியில் இன்பம் பழகினர் மிக்க நீராம்
உணவமுதருந்தி நாளும் வளர்ந்தனர் உத்தரத்துக்
குணம்பயில் கோசலத்தின் மன்னவர்தம் பொதுத்தாய்
இணர்மலர்க் குழலோய் என்றென்றும் எனது உள்ளம்
புகழாநிற்கும்"

என்று சரயு நதியை அன்னையாகப் பாராட்டி நின்ற இராமனது மொழிகளைக் காளிதாசன் வாயிலாகக் கேட்க முடிகிறது. இதைப் படித்துவிட்டு உள்ளம் பூரித்து, உணர்ச்சி கொப்பளிக்க, இன்பம் மீதூர காளிதாசன் தன் காப்பியத்தில் இராம காதையில் கடைசியில் வைத்த இந்த அற்புதமான செய்தியைத் தனது காவியமான இராம காதையில் முதலிடம் கொடுத்துச் சிறப்பித்தான்—

சூரியகுலத்தில் வந்த எண்ணற்ற மன்னர்கள் போற்றி ஒழுகிய நல்லொழுக்கம் – இதனைப் பெற்றதாக இருக்கும் சரயு—எப்படி என்றால், கடல்சூழ இருக்கும் இப் புவனத்தில் தோன்றும் உயிர் கூட்டங்களுக்கு எல்லாம் பாலூட்டிப் பேணும் தாய் – அன்னை போன்றவள் – என்பதை,

"இரவிதன் குலத்து எண் இல் பல்வேந்தர்தம்
புரவுநல் ஒழுக்கின்படி பூண்டது,
சரயு என்பது, தாய் முலை அன்னது. இவ்
உரவு நீள் நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்"

எனக் கம்பன் எடுத்துரைக்கும்போது, நமக்குக் கவிஞனின் பெருமை புரிகிறது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்றபடி – காளியின் அருளைப் பெற்ற 'கவிதார்க்கிக சிம்மமாகிய' காளிதாசனும், சரஸ்வதியின் அருளைப் பெற்ற கவிச்சக்ரவர்த்தி கம்பனும், தாங்கள் படைத்த காப்பியங்கள் மூலம் பெரும் புகழை அடைந்தார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லலாம்.

காளிதாசனைக் கம்பன் ஊன்றிப் படித்திருக்கின்றான் என்பதை இதுவரையில் நாம் சொன்ன செய்திகளைக் கொண்டு உணர முடிகிறதல்லவா?

■

குறிப்புகளுக்காக...